பக்கங்கள்: பதினாறு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 8.00

www.uthayan.com

சுடர் 19 வள்ளுவர் ஆண்டு 2035 தை 14 புதன்கிழமை (28-01-2004) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:63

# பயங்கரவாதம் தொடர்பான அமெரிக்க சட்டத்தில் ஓட்டை

## சில பிரிவுகள் அரசமைப்புக்கு முரண் என நீதிமன்றம் தீர்ப்பு

லொஸ்ஏன்சல்ஸ்,ஜனவரி28

**வெளிநாட்டுப் பயங்கரவாத அமைப்புகள் என்று அமெரிக்காவில் அறிவிக்கப்பட்டிருக்கும் குழுக்களுக்கு நிபுணத்துவ ஆலோசனை அல்லது உதவிகள் வழங்கப்படுவதை தடைசெய்யும் அமெரிக்க தேசப்பற்று சட்டத்தின் ஒரு பிரிவு செல்லுபடியற்றது என்று லொஸ்ஏன்சல்ஸ் சமஷ்டி நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது. இச்சட்டத்தின் ஒரு பிரிவு அரசமைப்புச் சட்டத்துக்கு முரணானதென அமெரிக்க நீதிமன்றம் ஒன்றில் அறிவிக்கப்பட்டிருப்பது இதுவே முதல் தடவையாகும்.**

இலங்கையில் தமிழ்மக்களுக்காகப் போராடும் தமிழீழ விடுதலைப் புலிகள், துருக்கியின் குர்திஷ்தான் தொழிலாளர் கட்சி ஆகியவற்றின் "சட்டபூர்வ, வன்முறையற்ற நடவடிக்கைகளுக்கு" ஆதரவு வழங்கும் சிவில் உரிமைக் குழுக்கள் சார்பில் தொடரப்

(16ஆம் பக்கம் பார்க்க)

## இலங்கை நெருக்கடி நிலை குறித்து ஐ.நா.செயலாளர் நாயகம் கவலை

### சமாதானப் பேச்சு விரைவில் தொடங்கும் என்று நம்பிக்கை

நியூயோர்க்,ஜன.28

இலங்கையிலுள்ள நெருக்கடியான நிலை குறித்து ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளர் நாயகம் கோபி அனான் கவலை வெளியிட்டுள்ளார். இலங்கை அரசுக்கும் விடுதலைப் புலிகள் இயக்கத்துக்கும் இடையிலான சமாதானப் பேச்சுக்கள் கிட்டிய எதிர்காலத்தில் ஆரம்பமாகும் என்று தான் இன்னமும் நம்புவதாகவும் அவர் தெரிவித்திருக்கிறார்.

நியூயோர்க்கில் ஐ.நா.பேச்சாளர் விடுத்த ஓர் அறிக்கையிலேயே ஐ.நா. செயலாளர் தனது கவலையை வெளியிட்டிருக்கின்றார்.

இலங்கையில் யுத்தத்தினால் பெரிதும் பாதிக்கப்பட்ட பகுதிகளின்

(16ஆம் பக்கம் பார்க்க)

## வாகனச் சோதனை: பொலீஸார் தீவிரம்

யாழ்ப்பாணம்,ஜன.28

குடாநாட்டிலுள்ள பொலீஸ் நிலையங்களைச் சேர்ந்த போக்குவரத்துப் பொலீஸார் இணைந்து நேற்று காங்கேசன்துறை வீதி நெடுகிலும் திடீர் வீதிச்சோதனை நடவடிக்கைகளில் ஈடுபட்டனர்.

நேற்றுப்பிற்பகல் காங்கேசன்துறை வீதியில் - யாழ். நகரப்பகுதியிலிருந்து தெல்லிப்பழை வரை - இத்திடீர் சோதனைகள் நடத்தப்பட்டன.

மேற்படி வீதியில் பிரதான சந்திகளான, கொக்குவில், கோண்டாவில், தாவடி, இணுவில், மருதனார்மடம், சுன்ணாகம் உட்படப் பல இடங்களிலும் திடீரென வந்திறங்கிய பொலீஸார் மோட்டார் சைக்கிள்கள் உட்பட சகல வாகனங்களையும் மறித்து சாரதி அனுமதிப்பத்திரம் மற்றும் ஏனைய ஆவணங்களைச் சோதனை செய்தனர். வரி அனுமதிப்பத்திரங்களும் பரிசீலிக்கப்பட்டன.

உரிய ஆவணங்களை வைத்திருக்

(16ஆம் பக்கம் பார்க்க)

### பலாலியில் வாழ்விடங்களை அபகரித்துள்ள

## விமான நிலைய விஸ்தரிப்புக்கு இந்தியா உதவக் கூடாது!

### அமைச்சர் மகேஸ்வரன் கோரிக்கை

கொழும்பு,ஜன.28

பலாலியில் உள்ள விமான நிலையத்தின் ஓடுபாதையைப் புனரமைத்து விஸ்தரிப்பதற்கு இந்தியா நிதி வழங்கக் கூடாது.

இந்து விவகார அமைச்சர் தி.மகேஸ்வரன் மேற்கண்டவாறு கோரியிருக்கின்றார்.

குடாநாட்டில் மக்களுக்கு, பயன்படாத வெற்று நிலப்பிரதேசங்கள் பல இருக்கின்றன. வேண்டுமானால் விமான நிலையம் ஒன்றை அவ்வாறு ஓர் இடத்தில் புதிதாக நிறுவலாம். அதற்கு வேண்டுமானால் இந்தியா தாராளமாக உதவலாம் என்றும் அவர் ஆலோசனை தெரிவித்திருக்கிறார்.

பொதுமக்களின் வாழ்விடங்களையும், பெருமளவு தோட்ட நிலங்களையும் உள்ளடக்கிய பாதுகாப்பு வலயத்தினுள் அமைந்திருக்கின்றது பலாலி விமான நிலையம். பல நூற்றுக்கணக்கான குடியிருப்புக் காணிகளை சுவீகரித்தே இந்த விமானத்தளம் நிறு

(16ஆம் பக்கம் பார்க்க)

### மாணவர்களால் துணைவேந்தரின் கார் தடுத்துவைப்பு

யாழ்ப்பாணம்,ஜன.28

யாழ். பல்கலைக்கழக நூலகம் இரவு 8.00 மணி வரை திறப்பது என்ற முடிவு நடைமுறைப்படுத்தப்படாததற்கு எதிர்ப்புத் தெரிவித்து நேற்று மாணவர்கள் துணைவேந்தரின் காரை திரிப்பிட அறைக்குள் வைத்துப்பூட்டினர்.

நூலகத்தை மாணவர்களின்

(16ஆம் பக்கம் பார்க்க)

### புலிகள் - படையினர் திருமலையில் சந்திப்பு

திருகோணமலை,ஜன.28

திருகோணமலை மாவட்டம் கட்டைப்பறிச்சானில் விடுதலைப் புலிகளின் பிரமுகர்களுக்கும் படை அதிகாரிகளுக்கும் இடையிலான சந்திப்பு நேற்று இடம்பெற்றது.

விடுதலைப் புலிகள் தரப்பில் திருகோணமலை மாவட்ட கட்டளைத தளபதி கேணல் பதுமன் தலைமையிலான குழுவிரும் படைத்தரப்பின் சார்பில் மாவட்ட கட்டளை அதிகாரி சுனில் தென்னக்கோன் தலைமையிலான குழுவினரும் இச்சந்திப்பில் கலந்து கொண்டனர். (ஐ-4)

### ஓட்டோ விபத்தில் ஏழு பேர் காயம்

கிளிநொச்சி,ஜன.28

யாழ்ப்பாணத்தில் இருந்து ஏ-9 வீதி ஊடாகப் புளியங்குளம் நோக்கிச் சென்று கொண்டிருந்த ஓட்டோ ஒன்று கிளிநொச்சிப் பகுதியில் மின் கம்பம் ஒன்றுடன் மோதி விபத்துக்குள்ளானது. அதில் பயணம் செய்த 7 பேரும் படுகாயமடைந்தனர்.

நேற்று மாலை 5 மணியளவில் கிளிநொச்சி முதலாம்கட்டை மருத்துவமனைக்குச் சமீபமாக இவ்விபத்து இடம்பெற்றது. ஓட்டோ சாரதி உட்பட 3 ஆண்களும் இரண்டு பெண்களும் இரண்டு குழந்தைகளுமே காயமடைந்தனர். இவர்கள் கிளிநொச்சி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர். (ஐ-4)



கிளிநொச்சியிலிருந்து தமிழ்ச்செல்வன் நேற்று ஹெலியில் புறப்பட்ட போது...



பயணமாவதற்கு முன்பாக உதவியாளருடன் தமிழ்ச்செல்வன்...

## அரச சார்பற்ற அமைப்புகள் மூலம் நிதியை நேரடியாகத் தாருங்கள்!

### சர்வதேச சமூகத்திடம் தமிழ்ச்செல்வன் கோரிக்கை

கிளிநொச்சி,ஜன.28

போரினால் அழிந்த தமிழர் தாயகத்தைக் கட்டியெழுப்புவதற்கான நிதி உதவிகளை அரசு சார்ந்த அமைப்புகளை விடுத்து அரசசார்பற்ற அமைப்புகள் மூலமாக நேரடியாக வழங்க சர்வதேச சமூகம் முன்வரவேண்டும்.

- இவ்வாறு வேண்டுகோள் விடுத்திருக்கின்றார் விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன்.

வெளிநாடுகளுக்கான பயணம் ஒன்றை ஆரம்பித்து நேற்று கிளிநொச்சியில் இருந்து கொழும்பு புறப்பட்ட சமயம் செய்தியாளர்களிடம் பேசுகையில் தமிழ்ச்செல்வன் இதனைத் தெரிவித்தார்.

கொழும்பில் இருந்து வந்த விசேட ஹெலிகொப்டரில் தமிழ்ச்செல்வனும் அவரது உதவியாளர்களும் நேற்றுப் பிற்பகல் இங்கிருந்து பயணமாகினர்.

கிளிநொச்சி மத்திய விளையாட்டு அரங்கில் வந்திறங்கிய ஹெலியில் ஏறுவதற்கு முன்பாக அங்கு வந்திருந்த செய்தியாளர்களுடன் தமிழ்ச்செல்வன் உரையாடினார். அப்போது அவர் தெரிவித்ததாவது:-

தென்னிலங்கை அரசியல் நெருக்கடி, எமது தரப்பு நிலைப்பாடு ஆகியன தொடர்பாக நோர்வே சமாதானக் குழுவுக்கு விளக்கம் அளிப்பதே எமது விஜயத்தின் முக்கிய நோக்கம். சர்வதேச சமூகத்துக்கு எமது தரப்பு நியாயப்பாட்டை விளக்குவதற்கு இந்தப் பயணத்தைப் பயன்படுத்துவோம்.

கடந்த 2 வருட காலமாக உருப்படியாக எதுவும் நடக்கவில்லை. இதன் காரணமாக உலகநாடுகள் சமாதானத்தில் நம்பிக்கை இழந்துள்ளன; தளர்வு அடைந்துள்ளன.

தெற்கில் சமாதான உறுதிப்பாடோ தெளிவோ இல்லை. இந்த நிலை காரணமாக உலக நாடுகள் இலங்கையை நம்பத் தயாரில்லை. இலங்கையின் தெளிவான நிலைப்பாட்டை அறியாமல் உலக நாடுகள் உதவ முன்வரமாட்டா.

தெற்கில் இரு கட்சிகளுக்கும் இடையில் அரசியல் அதிகாரப் போட்டி நிலவுகின்றது. ஆனால், வடக்கு - கிழக்கில் மனிதாபிமான பிரச்சினை நிலவுகின்றது. இந்நிலையில் எமது மக்களின் அவசரப் பணிகளைத் தீர்க்க உலக நாடுகளின் நேரடி உதவி தேவை.

இவ்வாறு சர்வதேசம் உதவி வழங்குவதன் மூலம் மக்களின் மனிதாபிமானப் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதுடன் சமாதான முயற்சிக்கு உதவமுடியும்.

வெளிநாடுகள் வழங்கும் நிதி விரயமோ, முறைகேடுகளோ இன்றி எமது மக்களின் மனிதாபிமானத் தேவைகளுக்குப் பயன்படுவதை உறுதிசெய்வதற்கு இங்குள்ள அரசு சாராத அமைப்புகள் ஊடாக உதவிகளை வழங்கவேண்டும்.

- இவ்வாறு தமிழ்ச்செல்வன் தெரிவித்தார். (ஐ-3-4)

ரன் சஹன ஈட்டுக் கடனாக ரூபா 5,000/-ஐப் பெறும்போது
40மில்லியன் ரூபா பெறுமதியான பரிசுகளை வெல்லும் வாய்ப்பு

அவசரமாக பணம் தேவையா? அருகிலுள்ள தேசிய சேமிப்பு வங்கிக் கிளைக்கு விரையுங்கள். ரூபா 5,000/- அல்லது அதற்கு மேற்பட்ட ஒவ்வொரு ரன் சஹன ஈட்டுக் கடனுக்கும் நாம் அதிர்ஷ்ட வெள்ளி (ரிதி ரேகா) சான்றிதழ்களை அன்பளிப்பாக வழங்குகின்றோம்.

இச்சலுகை 2004 ஜனவரி 15 முதல் 2004 ஏப்ரல் 15 வரை மட்டுமே.

அதிர்ஷ்ட வெள்ளி (ரிதி ரேகா) பரிசு விபரங்கள்.

- 1வது பரிசு 5மில்லியன் பெறுமதியான வீடு அல்லது பணம்.
- 2வது பரிசு 1.5மில்லியன் பெறுமதியான வாகனம் அல்லது பணம்.
- 3வது பரிசு ஒவ்வொன்றும் ரூபா 10,000 பெறுமதியான 10 பரிசுகள்.
- 4வது பரிசு ஒவ்வொன்றும் ரூபா 5,000 பெறுமதியான 20 பரிசுகள்.
- 5வது பரிசு ஒவ்வொன்றும் ரூபா 1,000 பெறுமதியான 2000 பரிசுகள்.
- 6வது பரிசு ஒவ்வொன்றும் ரூபா 500 பெறுமதியான 2400 பரிசுகள்.



NSB

NSB தேசிய சேமிப்பு வங்கி

# அதிகாரப் பரவலாக்கலுக்கு இணங்குவதாயின் நேர்மையாகச் சேர்ந்து செயற்பட வேண்டும்

## இரத்தினபுரியில் ஜனாதிபதி சந்திரிகா ஐ.தே.கவுக்கு அழைப்பு

அரசாங்கம் எம்மிடம் இருந்தாலும் இல்லாவிட்டாலும் அதிகாரப் பரவலாக்கலுக்கு நான் இணக்கம் தெரிவித்திருந்தேன். அது தொடர்பாக இப்பொழுது செயற்படவேண்டும். முக்கிய பிரச்சினையைத் தீர்க்க, அதிகாரத்தைப் பரவலாக்க இணங்குவதாயின் ஐ.தே.க. நேர்மையாக ஒன்று சேர்ந்து நடவடிக்கை எடுக்கவேண்டும். இனப் பிரச்சினையைத் தீர்க்க மக்கள் இரு கட்சிகளுக்கும் வாக்களித்துள்ளனர்.

- இவ்வாறு ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க நேற்றுமுன்தினம் இரத்தினபுரியில் நடைபெற்ற ஒரு நிகழ்ச்சியில் உரையாற்றுகையில் கூறினார்.

அங்கு ஜனாதிபதி மேலும் கூறியதாவது:-

அதிகாரப் பரவலாக்கல் குறித்து பொ.ஐ.முன்னணி ஆரம்பம் முதலே கூறிவருகிறது. அன்று எதிர்க்கட்சியிலிருந்த ஐ.தே.க. அதற்கு உடன்படவில்லை. ஆயினும், ஐ.தே.க. ஆட்சிக்கு வந்த பின்னர் அதிகாரப் பரவலாக்கல் மூலம் இனப்பிரச்சினையைத் தீர்க்க முடியும் என்பதை ஏற்றுக்கொள்கிறது.

இதேவேளை, சகல கட்சிகளும் அதனை ஏற்றுக்கொண்டிருப்பதால் அது தொடர்பாக இணக்கத்துடன் செயற்பட வேண்டும். நாட்டுப் பிரிவினையை நாம் எதிர்க்கின்றோம். தனியொரு நாடு அமைக்கப்படுவதை எதிர்க்கின்றோம். இருந்தாலும் பிரச்சினை உள்ளது என்பதை ஏற்றுக் கொள்கிறோம்.

இப்பிரச்சினைக்கு ஒரு தீர்வாக பொ.ஐ.மு. அரசு 1995, 1997, 2000 ஆகிய ஆண்டுகளில் விரிவான அரசமைப்புச் சட்டமூல நகலொன்றைச் சமர்ப்பித்தது. அச்சட்டமூல நகலுக்கு பிரதான எதிர்க்கட்சியின் ஒத்துழைப்பு ஏழரை ஆண்டுகளாகக் கிடைக்கவில்லை.

இப்பொழுது ஆட்சியிலிருக்கையில் ஐ.தே.க. அச்சட்ட மூலத்தைச் சமர்ப்பித்திருக்கிறது. அன்று நாம் சமர்ப்பித்ததையே இந்த அரசும் சமர்ப்பித்திருப்பது குறித்து மகிழ்ச்சியடையும் சிலரில் நானும் ஒருத்தி. அன்று நாம் கோரிய இணக்கத்தைப் பெற்றுத் தருவதாகக் கூறுகின்றோம்.

மாகாணசபை மூலம் அபிவிருத்தி நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியும். ஆயினும், சுதந்திரத் தேர்தல் மூலம் தெரிவு செய்யப்படும் மாகாண சபை போன்ற அமைப்புகளூடாக அதிகாரத்தைப் பரவலாக்கக் கூடிய சூழ்நிலையை உருவாக்குவது எமது இரு கட்சிகளினதும் பொறுப்பாகும்.

இந்நாட்டை நிர்வகிக்க நேர்மையான, திறமையான அரசியல்வாதிகளே தேவை. அரசியலை 'பிஸ்னஸ்' ஆக்கவேண்டாம். அரசியல் பதவிகளைப் பெற்று அதன் மூலம் களவு செய்ய, 'பிஸ்னஸ்' செய்ய எண்ணுவதாயின் அவ்வாறானோர் அரசியலை விட்டு விலகி 'பிஸ்னஸ்' செய்யலாம்.

வீதிகளில் மக்களைத் தாக்கும், வாகனங்களில் 'மாபியா' காரர்களை ஏற்றிச்செல்லும் அரசியல் வாதிகளை மக்கள் நிராகரிக்கிறார்கள். இவ்வாறான தகுதியற்ற அரசியல்வாதிகளை விரட்டியடித்து, நாட்டையும் மக்களையும் நேசிக்கும் அரசியல் வாதிகள் விரைவில் தெரிவு செய்யப்படாவிட்டால் வடக்கு, கிழக்கில் போன்று தெற்கிலும் மக்கள் கிளர்ச்சிக்கு ஆயத்தமாவார்கள்.

- இவ்வாறு ஜனாதிபதி கூறினார்.

# உண்ணாவிரதப் போராட்டம் தொடருகிறது

சுகாதார சேவை ஊழியர்களின் சாகும் வரையிலான உண்ணாவிரதப் போராட்டம் நேற்று இரண்டாவது நாளாகத் தொடர்ந்தது. அரசு எமது கோரிக்கைக்கு உரிய தீர்வு தரும் வரை போராட்டம் தொடரும் என்று சுகாதார சேவை தொழிற்சங்கங்களின் கூட்டமைப்பின் இணைப்பாளரான ரவி குமுதேஸ் தெரிவித்தார்.

இந்த உண்ணாவிரதப் போராட்டத்தில் 12 பேர் ஈடுபட்டுள்ளனர். சுகாதார அமைச்சுக்கு எதிரே நடைபெறும் இப்போராட்டத்துக்கு ஆதரவாக பெரும் எண்ணிக்கையான சுகாதார ஊழியர்கள் அந்த இடத்தில் கூடி நிற்கின்றனர்.

கூட்டமைப்பின் இணைப்பாளர் மேலும் கூறுகையில் எம்முடன் பேசி இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு காண அரசு முன்வரவேண்டும் - நாம் இயன்ற வரை எமது சேவைகளையும் நடத்திக்கொண்டே இந்தப் போராட்டத்தை முன்னெடுத்துச் செல்ல முயல்கின்றோம். நாளுக்கு நாள் இங்கு கூடும் ஊழியர்களின் எண்ணிக்கை அதிகரித்துக் கொண்டே செல்கின்றது. இந்த நிலை தொடர்ந்தால் சுகாதார சேவைகள் ஸ்தம்பிதம் அடைந்து விடும். அதற்கு முன் அரசு எம்முடன் பேசி பிரச்சினைக்கு தீர்வுகாண முன் வர வேண்டும் - என்றார்.

அனுராதபுரம்,களுத்துறை,கண்டி ஆகிய இடங்களில் இன்று அடையாள போராட்டங்கள் நடைபெறும் எனவும் அவர் கூறினார்.

# சங்கரி தலைமையில் மீண்டும் கூடுகிறது கூட்டணி மத்திய குழு

வலி.வடக்கு,ஜன.28

பல்வேறு சாச்சைகள், பிரச்சினைகளுக்கு மத்தியில் கடந்த நவம்பர் மாத இறுதியில் ஒத்திவைக்கப்பட்ட தமிழர் விடுதலைக் கூட்டணியின் மத்திய செயற்குழுக்கூட்டம் மீண்டும் எதிர்வரும் முதலாம் திகதி வீ.ஆனந்த சங்கரி தலைமையில் கூடவுள்ளது.

காலை 10 மணிக்கு கொழும்பு அல்விஸ் பிளேஸில் உள்ள தமிழர் விடுதலைக் கூட்டணி தலைமைக் காரியாலயத்தில் இக்கூட்டம் இடம்பெறவுள்ளது எனத் தெரிவிக்கும் கடிதங்களை கட்சியின் செயலாளர்நாயகம் இரா.சம்பந்தன் மற்றும் நிர்வாகச் செயலாளர் நடராசா ரவிராஜ் ஆகியோர் கையொப்பமிட்டு மத்திய குழு உறுப்பினர்களுக்கு நேற்று அனுப்பி வைத்துள்ளனர்.

கட்சியின் தேர்தல் நியமனக் குழுவைத் தெரிவுசெய்தல், கட்சியின் மத்திய செயற்குழுவில் ஏற்பட்டுள்ள வெற்றிடங்களை நிரப்புதல், கட்சியின் மாநாடு மற்றும் பொதுச்சபைகளைக் கூட்டுவது தொடர்பாக ஆராய்தல், முடிவெடுத்தல், கட்சியின் ஒழுங்கு நடவடிக்கைக் குழுவை நியமித்தல் மற்றும் இன்றைய அரசியல் சூழ்நிலை பற்றி ஆராய்தல் ஆகிய விடயங்களே நிகழ்ச்சிநிரலில் முக்கிய விடயங்களாகக் குறிப்பிடப்பட்டுள்ளன. கடந்த நவம்பர் மாதம் 30ஆம் திகதி கூடிய கூட்டணியின் மத்திய குழுக் கூட்டம் ஆனந்தசங்கரியின் தலைமை குறித்து எழுந்த சர்ச்சையினால் பெரும் களேபரங்களுக்கு உள்ளானது.

தலைவர் வீ.ஆனந்தசங்கரியை பதவி விலகியதாக செயலாளர் நாயகம் உட்பட நிர்வாக உறுப்பினர்கள் அறிவித்தனர். ஆனால், மத்திய குழுக கூட்டத்தில் தனக்கு எதிராக எந்த நம்பிக்கையில்லாத் தீமானமும் நிறைவேற்றப்படவில்லை; தானே தலைவர் என்று ஆனந்தசங்கரி அறிவித்தார்.

இந்த விவகாரம் தொடர்பாக அவர் நீதிமன்றத்திலும் வழக்குத் தாக்கல் செய்துள்ளார். இந்த நிலைமையிலேயே மீண்டும் ஆனந்தசங்கரி தலைமையில் கூட்டணி மத்திய குழு கூடவுள்ளமை குறிப்பிடத்தக்கது.(ம-86)

## சமூக நிறுவனங்களும் அரசும் இணைந்து ஆரம்பிக்கும்

# ஜனநாயகத்துக்கும் சமாதானத்துக்குமான அமைப்பு அலரிமாளிகையில் இன்று அங்குரார்ப்பணம்

கொழும்பு, ஜன.28

அரசும் - சிவில் சமூக நிறுவனங்களும் இணைந்து ஜனநாயகத்துக்கும் சமாதானத்துக்குமான நிலையம் ஒன்றை ஆரம்பிக்கவிருக்கின்றன.

இந்த நிலையத்தை நிறுவுவதற்கான ஆரம்ப நிகழ்வு இன்று புதன் கிழமை முற்பகல் 10 மணிக்கு அலரி மாளிகையில் இடம்பெறவுள்ளது.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலைமையில் இடம்பெறும் இந்த நிகழ்வில் யாழ்.மாவட்டத்தில் இருந்தும் சிவில் சமூக நிறுவனப் பிரதிநிதிகள் அழைக்கப்பட்டுள்ளனர்.

அரசமைப்பு விவகார அமைச்சர் பேராசிரியர் ஜி.எஸ்.பீரிஸின் பிரத்தியேக செயலாளர் சிறிலாலலக்திலக இதற்கான அழைப்பை விடுத்துள்ளார்.

ஜனநாயகத்தையும் சமாதானத்தையும் முன்னெடுப்பதற்காக அமைக்கப்படும் இந்த நிலையத்தில் சகல இனத்தைச் சேர்ந்தவர்களும் உறுப்பினர்களாக நியமிக்கப்படவுள்ளனர்.

இந்த நிகழ்வின் தொடர்ச்சியாக எதிர்வரும் 31 ஆம், முதலாம் திகதிகளில் யாழ். நாவலர் மண்டபத்தில் செயலமர்வு இடம்பெறவுள்ளது.

அமைச்சர் பேராசிரியர் பீரிஸின் பிரத்தியேக செயலாளர் சிறிலால் லக்திலக உட்பட பலர் இதில் கலந்து கொள்ளவுள்ளனர்.

(ம-3)

# அச்சுவேலியில் தனியாரின் கல்வி நிறுவனத்துக்குத் தீ!

அச்சுவேலி,ஜன.28

அச்சுவேலி பத்தமேனிப் பகுதியில் இயங்கிவந்த தனியார் கல்வி நிறுவனம் ஒன்று நேற்று இனந்தெரியாதவர்களால் தீ வைத்து எரிக்கப்பட்டிருக்கின்றது.

இந்த நிறுவனத்தில் இருந்த கணனிகளும் வேறு பல உபகரணங்களும் தீயில் எரிந்து போயுள்ளன என்று தெரிவிக்கப்படுகின்றது.

இதே கல்வி நிறுவனத்துக்கு நேற்றுமுன்தினம் இரவும் சிலர் தீ வைத்தனர் என்றும் -

பொலீஸார் விரைந்து செயற்பட்டு தீயை அணைத்துவிட்டனர் எனவும் -

பின்னர் நேற்று மீண்டும் அது தீயிடப்பட்டது என்றும் தெரிவிக்கப்படுகிறது.

இதே இடத்தில் கிணறு ஒன்றில் இருந்து சடலமாக மீட்கப்பட்ட யுவதி ஒருவரின் மரணச் சடங்குகள் நடைபெற்றுக்கொண்டிருந்த சமயத்திலேயே நேற்று இந்த கல்வி நிலையத்துக்கு தீ வைக்கப்பட்டிருப்பதாக பொலீஸ் வட்டாரங்கள் தெரிவித்தன. தீக்கிரையாக்கப்பட்ட கல்வி நிறுவனத்தின் உரிமையாளர் தலைமறைவாகி விட்டார் என்றும் கூறப்படுகிறது.

இச்சம்பவம் தொடர்பாக அச்சுவேலி பொலீஸார் விசாரணை நடத்தி வருகின்றனர்.

(ஐ-11-ரி)

# சேக்கிழார் விழாவில் பங்குபற்ற அரங்க. ராமலிங்கம் வருகிறார்

யாழ்ப்பாணம்,ஜன.28

எதிர்வரும் 2 ஆம் திகதி நெல்லியடி, தடங்கன்புளியடி முருகன் கோவில் மண்டபத்தில் ஆரம்பமாகவுள்ள சேக்கிழார் விழாவில் கலந்து கொள்வதற்காக சென்னைப் பல்கலைக்கழகப் பேராசிரியர் அரங்க. ராமலிங்கம் யாழ்ப்பாணம் வருகிறார். இவரது சிறப்புச் சொற்பொழிவு நல்லூர் கோவில் வீதியில் அமைந்துள்ள கம்பன்கோட்டத்தில் நடைபெற ஏற்பாடகியுள்ளது.

பேராசிரியர் அரங்க. ராமலிங்கம் சென்னைப் பல்கலைக்கழக தொலைதூரக் கற்கைநெறிகள் துறையின் தலைவராகப் பணியாற்றிய வருபவர். அண்மையில் நடைபெற்ற மத்திய மாகாண சாகித்திய விழா நிகழ்ச்சிகளில் கலந்துகொண்டிருந்தார்.

"காணுதி மெய்மை" எனும் தலைப்பிலான பேராசிரியரின் உரை எதிர்வரும் 5 ஆம் திகதி மாலை 6.00 மணிக்கு கம்பன் கோட்டத்தில் நடைபெறும். இந்நிகழ்ச்சிக்கு யாழ்ப்பாணப் பல்கலைக்கழக தமிழ்த்துறைத் தலைவர் பேராசிரியர் அ.சண்முகதாஸ் தலைமைவகிப்பார். தொடக்கவுரையை கொழும்பு கம்பன்கழக தலைவர் தெ. ஈஸ்வரன் வழங்குவார். வாழ்த்துரையை "கம்பகாவலர்" க.சிவராமலிங்கம் நிகழ்த்தவுள்ளார்.

(ஐ)

# பொதுமக்களின் கையெழுத்து சேகரிப்பு

யாழ்ப்பாணம்,ஜன.28

யாழ்.பல்கலைக்கழக சமூகமும் பொதுஅமைப்புக்களும் இணைந்து குடாநாட்டில் மேற்கொள்ளவிருக்கும் கையெழுத்து வேட்டை தொடர்பான கலந்துரையாடல் இன்று பிற்பகல் 3 மணிக்கு யாழ்.நாவலர் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இக்கலந்துரையாடலில் யாழ்மாவட்டத்திலுள்ள பொதுஅமைப்புக்களின் பிரதிநிதிகளை தவறாது கலந்துகொள்ளுமாறு யாழ்.பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் அழைப்பு விடுத்துள்ளது.

தடைப்பட்டுப்போயுள்ள சமாதானப் பேச்சுக்களை முன்னெடுக்குமாறும், தமிழீழ விடுதலைப் புலிகளிடம் இடைக்கால நிர்வாக சபையைக் கையளிக்குமாறும் வலியுறுத்தி குடாநாட்டு மக்களிடம் கையெழுத்து திரட்டும் நடவடிக்கை பெருமெடுப்பில் மேற்கொள்ளப்படவுள்ளமை தெரிந்ததே. (ஐ-4)

# மானிப்பாய் ஆஸ்பத்திரியில் புதிதாக எக்ஸ்றே பிரிவு

## இன்று முதல் இயங்கும்

மானிப்பாய் - கீறின் மெமோறியல் ஆஸ்பத்திரியில் புதிய எக்ஸ்றே பிரிவு திறந்து வைக்கப்படவுள்ளது.

இன்று புதன்கிழமை மாலை 4 மணிக்கு தென்னிந்தியத் திருச்சபைப பேராயர் கலாநிதி அதி.வண.எஸ். ஜெபநேசன் இந்த எக்ஸ்றே பிரிவைத் திறந்து வைப்பார். இதேவேளை -

மேற்படி, கிறீன் வைத்தியசாலையில் தற்போது பல வைத்தியசேவைகள் புதிதாக அறிமுகப்படுத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.(எ-185-152)

# புலமைப் பரிசில் பெறுபேறுகள் மேலும் சில பாடசாலை முடிவுகள்

யாழ்ப்பாணம்,ஜன.28

தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சைப் பெறுபேறுகள் கடந்த ஞாயிற்றுக்கிழமை வெளியாகின. பாடசாலை மாணவர் பெற்ற புள்ளி விவரங்கள் உதயனில் தொடர்ந்து வெளியாகி வருகின்றன. மற்றொரு தொகுதிப் பாடசாலைகளின் பெறுபேறுகள் வருமாறு:-

**யா/இந்துமகளிர் பாடசாலை**

தோற்றியோர் 102, சித்தி 34

வி.ஆரணிஜா (156), ரி.பிரவீணா (133), எம்.நீதினி (154), எஸ்.லக்சனா (132), கே.கவேரி (131), வி.பானுஜா (153), ஏ.வருஜா (130), ஏ.சாம்பவி (152), எஸ்.நிஷானிகா (128), எஸ்.கீர்த்தனா (151), எஸ்.சுகன்யா (126), எஸ்.ஜெனனி (150), வி.சுமித்தா (126), ஜே.விவேகா (125), கே.பஞ்சுகா (146), டிறஜிந்தா ஜெமிவலன்ஷிகா (144), கே.கீர்த்தனா (143), வை.துஷாயினி (124), வி.சஞ்சுதா (143), வி.தேனுஜா (122), எஸ்.பவதாரணி (139), பி.மயூரி (120), என்.நிருஷா (139), எஸ்.தர்மிகா (119), ஜே.கம்சாந்தினி (137), வி.கிகோனி (119), டி.கோபிகா (136), ஜி.லக்ஷ்மி (119), எம்.பானுப்பிரியா (135), ஆர்.சாஜினி (118), எஸ்.சித்திராணி (133), எஸ்.சுபானி (118), எஸ்.சோபிதா (133), வை.மயூரா (118),

**கொக்குவில் இந்து பாடசாலை**

தோற்றியோர் 125, சித்தி 37.

வை.ஆதித்தன் (121), கே.லோகசுதன் (120), வி.கஜலக்ஷன் (165), ஜி.பராபரன் (124), எஸ்.கிரிஷாந் (136), கே.பிரியவருன் (138), பி.கீரன் (137), ஏ.விமோசனன் (151), பி.கோபினி (119), வி.மதுஷா (121), வி.பாலினி (122), ஜி.சனாஜினி (124), எஸ்.சுஜிபா (147), பி.திவ்யா (120), சி.ஜெயகணேஸ் (136), எம்.விபுஷா (157), ஜே.விபிஜா (122), பி.கோகுலன் (136), எஸ்.அர்ஜுன் (155), கே.பதீதன் (118), பி.பிரசாந்தன் (156), பி.றனுஜன் (137), பி.செந்தாழன் (142), எஸ்.சிவலக்சன் (127), கே.ஜதீசன் (121), கம்ஷாஜினி (125), பி.பவிதா (120), எஸ்.சர்மி (134), எஸ்.சஞ்சிதா (119), ஆர்.சகானா (125), எம்.துவாரகா (138), ஆர்.துஷானி (118), ஆர்.யஷிந்தா (127), ரி.தர்மினி (121), ரி.தேவதயராஜ் (136), எஸ்.தர்சன் (137), பி.கிசோபன் (131).

**திருநெல்வேலி இந்து தமிழ்க்கலவன் பாடசாலை**

தோற்றியோர் 35, சித்தி 7.

எஸ்.தேனுகன் (144), ஜி.சாரங்கன் (132), கே.கஜானி (130), ஏ.தாட்சாயினி (122), கே.கஜேந்தினி (120), என்.லக்சிகா (118), கே.கவாஸ்கர் (132),

**கொக்குவில் இராமகிருஸ்ணா வித்தியாலயம்**

தோற்றியோர் - 27, சித்தி ஒருவர்.

பி.டென்சி (130).

**யாழ்/வண்ணை நாவலர் மகாவித்தியாலயம்**

தோற்றியோர் 15 பேர், சித்தி 01

ஜே.சயந்தன் (125)

**நாவாந்துறை றோ.க.வித்தியாலயம்**

தோற்றியோர் 41, சித்தி 3

எவ்.ரபாயேல் (146), ஏ.விதுஷா (132), ஏ.கலிஸ்ரா (123),

**யாழ்/திருக்குடும்ப கன்னியர் மடம்**

தோற்றியோர் 115, சித்தி 17.

ஜோ.மர்லீன் தர்சினி (147), யோ.லோயிதா (146), இ.லோறா ஜெரோஜினி (144), சே.லிசிலேவிதா (130), சா.ஆரபி (134), பி.அனிற்றா (129), க.புவிதாயினி (129), ம.அருளினி (125), அபிரசோபினி (128), அகீர்த்தனா (121), அ.இசபெல்லா (120), ஜெ.றெமிலா (120), ம.மரின் கிரேசியா (120), நநிலானி (123), பு.கனிஸ்ரெலா (120), சி.தர்மினி (119), நா.விதுஷா (119),

**நல்லூர் சென்பெனடிக்ற் றோ.க.த.க.வித்தியாலயம்**

தோற்றியோர் 44, சித்தி 07.

தி.தாரணி (149), ம.சோபிதா (137), ப.வினோதினி (136), தே.பகீரதன் (131), தெ.அபிராமி (121), ஜெ.யுகப்பிரியா (120), தி.தனுசிகா (118),

**ஆனைப்பந்தி மெ.மிஷன் வித்தியாலயம்**

தோற்றியோர் 51, சித்தி 07,

ஏ.லோகானந்தன் (144), கே.அனுசன (143), என்.கோபிகா (135), வி.விதுஷன் (131), என்.கேதரன் (120), வை.யானுஷ் (125), பி.வேணுஜன் (118),

**கோண்டாவில் இராமகிருஸ்ண மகாவித்தியாலயம்**

தோற்றியோர் 16, சித்தி 03,

எஸ்.கிசோத் (148), எஸ். நிவேதிகா (141), எஸ்.நிர்த்திகா (130),

**ஏழாலை தெற்கு அ.மி.த. பாடசாலை சுன்னாகம்**

தோற்றியோர் 18, சித்தி 03.

யோ.நிருஜா (140), த.யோபிதா (133), ச.அபிராம்சங்கர் (125).(ம-7-ரி)

# வேகமாகப் பரவும் பறவைக்காய்ச்சல்; தாய்லாந்தில் மேலும் ஒரு சிறுவன் பலி!

பாங்கொக்,ஜன.28

தாய்லாந்தில் பறவைக் காய்ச்சலால் பீடிக்கப்பட்ட மேலும் ஒரு சிறுவன் உயிரிழந்தான். தலைநகர் பாங்கொக்கிலிருந்து 370 கிலோமீற்றர் தொலைவில் உள்ள பிட்சனோலொக் மாகாண மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்ட 6 வயதுச் சிறுவனே தற்போது இறந்துள்ளான். காஞ்சனாபுரி மாகாணத்தில் பறவைக் காய்ச்சலால் சில தினங்களுக்கு முன்னர் வேறொரு சிறுவன் உயிரிழந்திருந்த நிலையில் தற்போது பறவைக் காய்ச்சலால் இரண்டாவது சிறுவனும் இறந்துள்ளான்.

இதனையடுத்து, பறவைக் காய்ச்சல் மேலும் பரவுவதைத் தடுக்கத் தவிர நடவடிக்கைகளை தாய்லாந்து அரசு மேற்கொண்டுள்ளது.

வியட்நாமில் கோழிகளில் முதலில் பரவிய பறவைக் காய்ச்சல் நோய், பின்னர் மனிதருக்கும் பரவியது. இதில் வியட்நாமில் இதுவரை 6 பேர் பலியாகியுள்ளனர். தற்போது தாய்லாந்திலும் மனிதருக்குப் பறவைக்காய்ச்சல் நோய் பரவத் தொடங்கிவிட்டது.

ஏற்கனவே, சார்ஸ் நோயால் பாரிய உயிரிழப்புகளைச் சந்தித்த சீனாவில் பறவைக் காய்ச்சல் நோய் பரவிவிடாது தடுப்பதற்காக அந்த நாட்டு அரசு தடுப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றது.

இதற்கிடையே, ஆசிய நாடுகளில் பரவும் பறவைக் காய்ச்சல் நோயைத் தடுப்பது குறித்து ஆராய தாய்லாந்து சர்வதேச மாநாடு ஒன்றை இன்று கூட்டுகிறது. சீனா உட்பட 12இற்கும் மேற்பட்ட ஆசிய நாடுகள், ஐரோப்பிய ஒன்றியம் மற்றும் அமெரிக்கா ஆகியவற்றின் பிரதிநிதிகள் இந்த அவசர மாநாட்டில் கலந்துகொள்ளவுள்ளனர்.


பறவைக் காய்ச்சல் தொடர்பான தடுப்பு நடவடிக்கைகளை தாய்லாந்து அரசு முன்கூட்டியே செயற்படுத்தவில்லை என்ற குற்றச்சாட்டு தாய்லாந்து மக்களால் முன்வைக்கப்பட்ட நிலையிலேயே இந்த மாநாட்டுக்கு தாய்லாந்துப் பிரதமர் தக்ஷின் ஷின்வத்ரா அழைப்பு விடுத்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

பறவைகளை, குறிப்பாகக் கோழிகளைப் படித்துவந்த பறவைக் காய்ச்சல் நோய் மனிதருக்கும் தொற்றும் என்பது 1997ஆம் ஆண்டில் உறுதிப்படுத்தப்பட்டது.

தொண்டை வரட்சி, இருமல் மற்றும் காய்ச்சல் ஆகிய அறிகுறிகளைக் கொண்ட பறவைக் காய்ச்சல் நோய்க்கு 'இன்புளுவன்ஸா' என்ற வைரஸ் கிருமியே காரணமாகும். (ஒ)



தொழு நோயாளிகளுக்காக பாப்பரசர் வத்திக்கான் நகரில் சிறப்புப் பிரார்த்தனை நடத்தினார். இந்தப் பிரார்த்தனைக் கூட்டத்துக்குப் பிறகு பாப்பரசர் 2 புறாக்களைப் பறக்கவிட்டார்.



ஜப்பானின் மையப் பகுதியில் பறந்துகொண்டிருந்த சிறியரக விமானம் திடீரென்று கோளாறு காரணமாக அங்குள்ள குடியிருப்பு மீது வீழ்ந்து நொறுங்கியது. இதில் அந்த விமானத்தில் இருந்த 3 பேரும் பலியாகிவிட்டனர். அந்தக் குடியிருப்பு சேதம் அடைந்தது.

# கனேடியப் படையை இலக்கு வைத்து ஆப்கானில் தற்கொலைத் தாக்குதல்!

காபூல்,ஜன.28

ஆப்கானிஸ்தானில் கனேடிய அமைதி காக்கும் படையைச் சேர்ந்த ஒருவர் உட்பட இருவர் நேற்றுக் கொல்லப்பட்டனர். காபூலில் இடம்பெற்ற தற்கொலைத்தாக்குதலிலேயே இவர்கள் இறந்ததாக ஆப்கான் அதிகாரிகள் கூறினர்.

நேற்றுக்காலை உள்ளூர் நேரப்படி 8.25 மணிக்கு இடம்பெற்ற இந்தத் தாக்குதலில் தற்கொலைத் தாக்குதலாளியும் உயிரிழந்தார்.

கனேடியப்படை முகாமிலிருந்து வழக்கமான கண்காணிப்புப் பணிக்கு கனேடிய அமைதிகாக்கும் படையினர் புறப்பட்டுச் சென்றனர் என்றும்- அப்போது வீதியோரமாக நின்றுகொண்டிருந்த ஒருவர் திடீரென்று வீதிக்கு வந்து, தனது உடலில் கட்டியிருந்த வெடிகுண்டை வெடிக்கவைத்தார் என்றும் கூறப்படுகின்றது.

இந்தத் தாக்குதலில் கனேடியப் படையினர் பயணித்த இரு வாகனங்களும் பலத்த சேதமடைந்தன; கனேடிய வீரர் ஒருவரும், அப்பகுதியில் நின்றிருந்த மற்றொருவரும் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தனர்; கனேடிய வீரர்கள் பலர் படுகாயமடைந்தனர்.

ஆப்கானிஸ்தானில் நிலைகொண்டுள்ள கூட்டுப்படையினருடன் இணைந்து சுமார் 2ஆயிரம் கனேடிய இராணுவத்தினர் அங்கு அமைதி காக்கும் பணியில் ஈடுபட்டு வருகின்றனர்.

ஆப்கானில் கடந்த ஒக்ரோபர் மாதம் கண்ணிவெடியில் சிக்கி இரு கனேடிய வீரர்கள் உயிரிழந்தனர். மற்றொரு சம்பவத்தில் கந்தகார் நகரில் அமெரிக்க விமானம் ஒன்று வீசிய குண்டு இலக்குத் தவறி வீழ்ந்து வெடித்ததில் கனேடிய வீரர்கள் நால்வர் கொல்லப்பட்டனர். ஆயினும், கனேடிய வீரர்கள[...]ரிவைத்துத் தாக்குதல் நட[...] இதுவே முதல் தடவை என்று [...]றப்படுகின்றது. இதுவரை காலமும் அமெரிக்க படையினர் மீதே தாக்குதல்களை நடத்திவந்த தலிபான்கள் கூட்டுப் படையில் அங்கம் வகிக்கும் மற்றைய நாட்டுப் படைகள் மீதும் தாக்குதலை நடத்த ஆரம்பித்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ஒ)

# அடுக்குமாடிக் கட்டடம் எகிப்தில் இடிந்து வீழ்ந்தது!

கெய்ரோ,ஜன.28

எகிப்தில் வணிக வளாகம் ஒன்று தீப்பிடித்துத் தகர்ந்து விழுந்தது. இதில் குறைந்தது 5பேர் உயிரிழந்தனர்; மேலும் 40 பேர் வரை காயமடைந்தனர் கட்டட இடிபாடுகளுக்கிடையில் பலர் சிக்கியுள்ளனர் என்று கூறப்படுகின்றது.

உலக அரங்கில்

தலைநகர் கெய்ரோவில் சர்வதேச விமான நிலையம் அமைந்துள்ள நாஸர் பகுதியில் நேற்றுமுன்தினம் இந்தச் சம்பவம் இடம்பெற்றது. பல மாடிகளைக் கொண்ட இந்தக்கட்டடத்தின் கீழ் தளங்களில் வர்த்தக நிலையங்களும், மேல் தளங்களில் குடியிருப்புக்களும் இருந்தன. நேற்று முன்தினம் இரவு கீழ்த்தளத்தில் பற்றிய தீ வேகமாகப்பரவியது. இதனையடுத்து குடியிருப்பாளர்கள் விசேட வழியால் கட்டடத்தைவிட்டு வெளியேற்றப்பட்டனர். இதற்கிடையில் தீ கீழ் தளங்களில் பரவிவிட்டது. சிறிது நேரத்தில் கட்டடம் தகர்ந்து விழுந்தது. கீழ் தளத்தில் இருந்த சிற்றுண்டிச்சாலையில் அல்லது வீட்டு உபகரண விற்பனையகத்தில் இருந்து தீ பரவியிருக்கலாம் என்று அதிகாரிகள் தெரிவித்தனர்.

தகர்ந்து விழுந்த கட்டட இடிபாடுகளுக்கிடையில் சிக்கியவர்களை மீட்கும் பணி இரவிரவாகத் [...]தது. இடிந்த கட்டடத்தின் [...]களிலும் உள்ள கட்டடங்க[...] விபத்தில் சேதமடைந்துள்ளன. [...]னால் அந்தக்கட்டடங்களில் இருந்தவர்களும் வெளியேற்றப்பட்டுள்ளனர்.

இந்தக் கட்டடத்தில் 4 மாடிகள் கட்டவே அனுமதி வழங்கப்பட்டதாகவும் - ஆனால், அனுமதியின்றி மேலும் சில மாடிகள் கட்டப்பட்டிருந்தன என்றும் - கெய்ரோ நகர நிர்வாக அதிகாரிகள் தெரிவித்தனர். எகிப்தில் ஏற்கனவே உள்ள கட்டடங்கள் மீது அடுக்குமாடிக் கட்டடங்களை அரச அனுமதியின்றிக்கட்டுவது சகஜமான ஒரு விடயமாகும். இதனால், கட்டடங்களின் உறுதி குலைந்து, அவை தகர்ந்து விழுவது அடிக்கடி நிகழும் சம்பவமாக மாறிவருகிறது. (ஒ)

# எதிர்வரும் இந்தியத் தேர்தலில் அனைவரும் வாக்களிக்கவேண்டும்

## ஜனாதிபதி கலாம் வித்தியாசமான குடியரசு தின உரை

எதிர்வரும் இந்திய நாடாளுமன்றத் தேர்தலில், ஜனநாயக உரிமையைப் பயன்படுத்தி அனைவரும் வாக்களிக்கவேண்டும் என்று இந்திய ஜனாதிபதி அப்துல்கலாம் நேற்று முன்தினம் கோரிக்கை விடுத்தார். இந்தியாவின் 55 ஆவது குடியரசு தினத்தையொட்டி நாட்டு மக்களுக்காக ஆற்றிய உரையிலேயே அவர் இக்கோரிக்கையை விடுத்தார்.

அனைவரும் தேர்தலில் வாக்களித்தால்தான் 2020ஆம் ஆண்டில் இந்தியா மேன்மை நிலையை எட்ட முடியும் எனவும் ஜனாதிபதி கலாம் தனது உரையில் கூறினார்.

குடியரசு தினத்துக்கு முதல் நாள் தொலைக்காட்சியில் ஜனாதிபதி கலாம் ஆற்றிய இந்த உரை வெறும் சம்பிரதாய உரையாக இல்லாது மககளை, குறிப்பாக இளைஞர்களை உத்வேகப்படுத்துவதொன்றாக அமைந்திருந்தது.

அவர் தனது உரையில் மேலும் குறிப்பிட்டதாவது:-

நமது துணைக் கண்டத்தில் தேசிய மேம்பாடும், பொருளாதார வளர்ச்சியும் தொடர்ந்து இருக்க அமைதி நிலவுவது முக்கியமானது. மறைமுகப்போர்களும், ஆயுதக் குவிப்பும் போர்களும் வளர்ச்சிக்கான பாதையில் இருந்து திசைதிரும்பச் செய்பவை என்பதை பலநாடுகள் உணர்ந்துள்ளன.

விரைவான தேசிய வளர்ச்சியை எட்ட நாம் அனைவரும் ஒன்றிணைந்து சில சவால்களை எதிர்நோக்கவேண்டியுள்ளது. நம் நாட்டுமக்கள் தொகையில் 54 கோடிக்கும் மேற்பட்டோர் 25 வயது வரை உள்ளவர்கள். இந்தியா இளைஞர்களின் நாடாகும். ஊழலற்ற இந்தியாவில் வாழவேண்டும் என்பது இந்திய இளைஞர்களின் விருப்பமாக உள்ளது. வளர்ச்சியடைந்த நாட்டில் வாழும் கனவு அவர்களிடம் உள்ளது.

வரவிருக்கின்ற தேர்தலில் அனைத்து அரசியல் கட்சிகளினதும் தேர்தல் அறிக்கை, இளைய சமுதாயத்தின் எதிர்பார்ப்புகளைக் கருத்திற்கொண்டு அவர்களின் கனவுகளை எதிர்கொள்ளும் வகையில் செயல் திட்டங்கள் கொண்டதாக இருக்கவேண்டும்.

இளைஞர்களுக்கு ஒன்று சொல்ல விரும்புகின்றேன். நாகலாந்தில் குழந்தைகள், பெற்றோர்கள், ஆசிரியர்கள் அடங்கிய 600 பேர் குழுவைச் சந்தித்தேன். பத்தாம் வகுப்புப் படிக்கும் மாணவன் ஒருவன் என்னிடம், ஜனாதிபதி அவர்களே, நாட்டில் எல்லா இடங்களிலும் ஊழல் மலிந்திருக்கும்போது அதை வளர்தத நாடாக உருவாக்குவது சாத்தியமாகுமா, கூறுங்கள் என்றான். இந்தக் கேள்வியைக் கேட்டு அவனது பெற்றோரும் ஆசிரியர்களும், ஐயா இது அவனுடைய வயதுக்கு மீறிய கேள்வி, தயவுசெய்து புறக்கணித்துவிடுங்கள் என்றனர். இவ்வாறு சிந்திக்கும் மனதை எப்படிப் புறக்கணிக்கமுடியும்?

இதற்கு என்ன பதில் இதுதான். எந்தச் சட்டமும் ஊழலை முழுமையாக ஒழிக்கமுடியாது. இதற்கு முப்பரிமாணத் திட்டம் உள்ளது. அப்பா, அம்மா, ஆரம்பக் கல்வி ஆசிரியர் ஆகிய மூன்று உறுப்பினர்கள்தான் ஊழலை அகற்றக்கூடிய உறுப்பினர்கள்.

எனது உரையைக் கேட்கும் இளைஞர்களே! உங்களையே ஒரு கேள்வி கேட்டுக்கொள்ளுங்கள். தங்களது படிப்பிற்கு இடையூறு ஏற்படாவண்ணம் இளைஞர்கள் எத்தகைய பங்களிப்பை அளிக்கமுடியும் என்பதே இக்கேள்வியாகும். உங்கள் குடும்பத்தில் நியாயத்திற்குப் புறம்பாக செயற்படுபவர்களை சரியான முறையில் திருத்துவதன்மூலம் ஊழலை ஒழிக்க மௌனப் புரட்சி ஒன்றை நீங்கள் ஆரம்பிக்கவேண்டும்.

- இவ்வாறு அவர் கூறினார்.

# காங்கிரஸில் இருந்து கண்ணன் விலகல்

சென்னை,ஜன.28

காங்கிரஸ் கட்சியிலிருந்து செயற்குழு உறுப்பினரும் பாண்டிச்சேரி முன்னாள் அமைச்சருமான ப.கண்ணன் விலகினார்.

தி.மு.க. கூட்டணியில் பாட்டாளி மக்கள் கட்சிக்கு பாண்டிச்சேரி தொகுதி ஒதுக்கப்பட்டதே அவரது இந்த முடிவுக்குக் காரணம் என்று அவருக்கு நெருக்கமான வட்டாரங்கள் தெரிவித்தன.

ஆனால், இது குறித்து அவர் செய்தியாளர்களிடம் கூறுகையில், 'காங்கிரஸ் கட்சியில் அனைத்துப் பொறுப்புகளிலிருந்தும் விடுபடுகிறேன். இதற்கு மேல் இப்போது எதுவும் கூறுவதற்கில்லை. இதற்கு நிறையக் காரணங்கள் இருக்கின்றன. உங்களுக்கு நிறைய எழுதத் தெரியும். உங்கள் முடிவுக்கு விட்டு விடுகிறேன்' - என்றார். பாண்டிச்சேரி யூனியன் பிரதேசத்தில் செல்வாக்குப் பெற்ற பிரமுகரான கண்ணன் காங்கிரஸ் கட்சியிலிருந்து விலகி உள்ளமை, அங்கு தி.மு.க. காங்கிரஸ் கூட்டணிக்குப் பின்னடைவை ஏற்படுத்தும் என்று ஆய்வாளர்கள் கருதுகின்றனர். (ஒ)

# விடுதலைச் சிறுத்தைகள் தனித்துப் போட்டியிட முடிவு

## திருமாவளவன் அறிவிப்பு

சென்னை,ஜன.28

இந்தியாவில் எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் விடுதலைச் சிறுத்தைகள் அமைப்பு தனித்துப் போட்டியிடும் என்று அதன் பொதுச் செயலர் தொல். திருமாவளவன் அறிவித்தார்.

சென்னையில் நடந்த அந்த அமைப்பின் மாநில நிர்வாகக் குழுக் கூட்டத்துக்குப் பிறகு செய்தியாளர்களிடம் அவர் கூறியதாவது:-

புதிய தமிழகம், பகுஜன் சமாஜ், மக்கள் தமிழ்த்தேசம், புதிய நீதிக் கட்சி, மூவேந்தர் முன்னணிக் கழகம், தேசிய லீக் உள்ளிட்ட கட்சித் தலைவர்களுடன் பேச உள்ளோம்.

கடந்த சட்டப் பேரவைத் தேர்தலில் விடுதலைச் சிறுத்தைகள் உள்ளிட்ட அமைப்புகளுடன் இணைந்து ஒரு கோடி வாக்குகளைப் பெற்ற தி.மு.க., இத்தேர்தலில் ஜாதிக் கடசி என்று முத்திரை குத்தி எம்மை இழிவுபடுத்தி இருப்பது வேதனைக்குரியது. தி.மு.கவின் இப்போக்கை வன்மையாகக் கண்டிக்கிறோம்.

அப்பட்டமான ஜாதிக் கட்சியான பா.ம.கவை அரவணைத்துக் கொண்டு, ஜாதி ஒழிப்பு இயக்கங்களான விடுதலைச் சிறுத்தைகள், புதிய தமிழகம் ஆகியவற்றைப் புறக்கணித்ததன் மூலம் தலித் மக்களை தி.மு.க. அவமதித்திருக்கிறது.

பா.ஜ.க. இடம்பெறாத அ.தி.மு.க. அணி உருவானால் அதில் சேர்வது பற்றியும் பரிசீலிப்போம். - என்றார் அவர்.

## துயர் பகிர்கின்றோம்

எமது பிரதேச செயலகத்தில் பணிபுரியும்

**திரு.செ.கதிர்காமநாதன்**

அவர்களின் அன்புத் தாயார்

### அமரர் இராமாசிப்பிள்ளை செல்லையா

அவர்கள் காலமானதையிட்டு அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அவரது ஆத்மசாந்திக்காகப் பிரார்த்திக்கின்றோம்.

பிரதேச செயலாளரும்,
அனைத்து உத்தியோகத்தர்களும்.

நலன்புரிச்சங்கம்,
பிரதேச செயலகம்,
உடுவில.

(C/32959)(21-19-18)

## கண்ணீர் அஞ்சலி

எமது பிரதேச செயலக திட்டமிடல் பிரிவின் பிரதம லிகிதர்

**திருமதி குணசிங்கம் மகாராணி**

அவர்களின் அன்புக் கணவர்

### செல்லப்பா குணசிங்கம்

23.01.2004 அன்று காலமாகியதையிட்டு
மிகுந்த துயரடைவதோடு அன்னாரின் ஆத்மா
சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

உதவி பிரதேச செயலரும்
செயலக அலுவலர்களும்.

நலன்புரிச்சங்கம்,
கோப்பாய். (27718)

(21-19-18)

## இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி

வையத்துள் அரிமுகம் 18 06 1942



தெய்வத்துள் சங்கமம் 20 01 2002

திருமதி

### சுசீதலட்சுமி இராசதுரை

ஈரைந்து மாதம் எமைச் சுமந்து
ஈன்றெடுத்த தாயே!
ஈராண்டு சென்றதுவே - எம்
இதய தெய்வமே எமைப்பிரிந்து
ஈரவிழி இன்னும் காயவில்லை
ஈராண்டு என்ன எத்தனை ஆண்டுகள்
சென்றிடினும் தீராதுதாயே உன்நினைவு...

அம்மா உங்கள் ஆன்மா சாந்தியடைய எல்லாம் வல்ல
எங்கள் குல தெய்வத்தைப் பிரார்த்திக்கின்றோம்.

தாவடி தெற்கு,
கொக்குவில். (27719)(26-21-19-18)

பிரிவால் வாடும்:
குடும்பத்தினர்.

### பாடசாலைகளில் மிதிவெடி அபாயக் கல்வி

பருத்தித்துறை,ஜன.28

வடமராட்சி கல்விவலயத்திலுள்ள (இராணுவக் கட்டுப்பாடு) பாடசாலைகளில் தரம்1 முதல் தரம்11 வரை வகுப்புகளில் மேலதிக பாடமாக மிதிவெடி அபாயக் கல்வி கற்பிக்கப்படவுள்ளது.

இவ்விடயத்தை சுற்றாடல் கல்வி பாடத்தில் உள்ளடக்கிக் கற்பிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. ஆசிரியர்களுக்கான வழிகாட்டல் செயலமர்வு எதிர்வரும் முதலாம் திகதி காலை 8.30 மணிக்கு நெல்லியடி மத்திய மகா வித்தியாலய மண்டபத்தில் நடைபெறுமென ஆரம்பக்கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர் க.கமலானந்தன அறிவித்துள்ளார். (ம-118)

### அறிமுக நிகழ்வு பிற்போடப்பட்டது

யாழ் பல்கலைக் கழகத்தில் இன்று புதன்கிழமை நடைபெறவிருந்த முகாமைத்துவ கற்கைகள் வணிகபீட புகுமுக மாணவர்களின் அறிமுக நிகழ்வு பிற்போடப்பட்டுள்ளதெனவும் நடைபெறும் திகதி பின்னர் அறிவிக்கப்படுமெனவும் முகாமைத்துவ கற்கைகள வணிகபீட மாணவர் ஒன்றியம் அறிவித்துள்ளது. (ஒ-8)

### உயர்தர மாணவருக்கு விஷேட வழிகாட்டுகை வகுப்புகள்

யாழ்ப்பாணம்,ஜன.28

யாழ்.தேசிய கல்வியியல் கல்லூரி நுண்கலைத்துறையின் சித்திரக்கலை பிரிவினரால் நடத்தப்படும் ஜி.சீ.ஈ. உயர்தர வகுப்புக்கான விஷேட வழிகாட்டுகை வகுப்புகள் மீண்டும் எதிர்வரும் பெப்ரவரிமாதம் முதலாம் திகதி ஆரம்பமாகி நடைபெறவுள்ளன.

வாராந்தம் ஞாயிற்றுக்கிழமைகளில காலை 9மணிமுதல் முற்பகல் 11 மணி வரை நடைபெறவுள்ள இந்த இலவச விஷேட வழிகாட்டுகை வகுப்புகளில் முன்னர் கற்ற மாணவர்களும் புதிதாக இணைந்துகொள்ள விரும்பும் மாணவர்களும் சமுகமளிக்க முடியுமென அறிவிக்கப்பட்டுள்ளது.(ஒ-8)

### இந்துநாகரிக மாணவருக்கு முன்னோடிப் பரீட்சை

யாழ்ப்பாணம்,ஜன.28

யாழ்சைவபரிபாலன சபையினரால ஜி.சீ.ஈ. உயர்தரப்பரீட்சையில் இந்து நாகரிகம், இந்துசமயம் ஆகிய பாடங்களுக்குத் தோற்றும் மாணவர்களுக்கான வருடந்தோறும் நடத்தப்படும் முன்னோடிப்பரீட்சைக்கான விண்ணபபங்கள் கோரப்பட்டுள்ளன.

மேற்படி, முன்னோடிப்பரீட்சை தொடர்பான அறிவுறுத்தல்கள் அனைத்தும் சம்பந்தப்பட்ட பாடசாலைகளுக்குத் தபால் மூலம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன என்றும் -

விண்ணப்பங்கள் யாவும் அடுத்த மாதம்.5ஆம் திகதிக்கு முன்னர் தமக்கு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என்றும்-

சைவபரிபாலன சபையின் தலைவரும் பரீட்சை செயலாளருமான சைவப்புலவர் வ.கந்தசாமி அறிவித்துள்ளார்.

முன்னோடித் தேர்வு மார்ச் மாதம 8ஆம், 9ஆம் திகதிகளில் நடைபெறும் என்றும் - அறிவிக்கப்பட்டுள்ளது.(எ)

## கண்ணீர் அஞ்சலி

காரைநகர் உதவி அரசாங்க அதிபர்

**வே.சாம்பசிவம்** அவர்களின் அன்புத் தாயார்


**திருமதி வேலுப்பிள்ளை பொன்னம்மா**

அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய ஈழத்து சிதம்பர சௌந்தராம்பிகை சமேத சுந்தரேசப் பெருமானைப் பிரார்த்திக்கின்றோம்.

பணிப்பாளர்கள், பணியாளர்கள்
பல நோக்குக் கூட்டுறவு சங்கம்,
காரைநகர்.

(32968)(21-19-18)

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்



### கந்தசாமி குழந்தைவேலு

(தம்பி அண்ணா)

தோற்றம் 15-01-1934 | மறைவு 30-12-2003

கடந்த 30.12.2003 செவ்வாய்க்கிழமையன்று இறைபதமடைந்த எமது குடும்ப விளக்கு கந்தசாமி குழந்தைவேலு (தம்பி அண்ணா) அவர்களின் ஆத்ம சாந்திக்கான கிருத்தியங்கள் நாளை (29.01.2004) வியாழக்கிழமை காலை 7மணிக்குத் திருநாவலூர் தெணிஅம்மன் ஆலய முன்றிலில் நடைபெறும். இந்நிகழ்விலும் தொடர்ந்து வீட்டில் நடைபெறும் கிருத்தியங்களிலும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்களை அன்புடன் அழைக்கின்றோம். எமது துயரத்தில் பங்குகொண்டு கண்ணீர் அஞ்சலிகளைச் செலுத்திய அனைவருக்கும் அன்னாரின் குடும்பத்தினர் நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

கல்லூரி வீதி (ஓடக்கரை),
பருத்தித்துறை.
021-226 3437. (27730)(26-19-21-18)

மனைவி
(குழந்தைவேலு இராதாதேவி),
மக்கள், மருமக்கள்.

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றிநவிலலும்



அமரர்

### நடேசர் சிவசோதி

(சங்கானை)

*(ஓய்வுபெற்ற பதவிநிலை உத்தியோகத்தர்)*

எமது அன்புத் தந்தையார் சிவபதமடைந்த செய்திகேட்டு நேரில் வந்து அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும், தொலைபேசி, தந்தி மூலம் ஆறுதல் கூறியவர்களுக்கும், இறுதிக்கிரியைகளில் பங்குபற்றியவர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

அத்துடன் இன்று (28-01-2004) புதன்கிழமை அன்னாரது இல்லத்தில் நடைபெறும் வீட்டுக் கிருத்தியத்திலும், மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

- குடும்பத்தினர்.

தோற்றம் 02-10-1932 | மறைவு 29-12-2003

மாலியவத்தை,
சங்கானை.

(சி-32965)(21-19-18)

## மரண அறிவித்தல்

### திருமதி செல்லமணி மார்க்கண்டு

(முகாமையாளர், ஸ்ரீவராகி அம்பாள் தேவஸ்தானம்,
கொக்குவில் மேற்கு, கொக்குவில்)

'வெண்மதி' ஆனைக்கோட்டையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி செல்லமணி மார்க்கண்டு 22.01.2004 வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற முத்தையா மார்க்கண்டுவின் (முன்னாள் முகாமையாளர், ஸ்ரீவராகி அம்பாள் தேவஸ்தானம்) அன்பு மனைவியும் காலஞ்சென்ற செல்லத்துரை - சிவக்கொழுந்து தம்பதியினரின் அன்பு மகளும் இந்திராணி (கனடா), காலஞ்சென்ற பரமேஸ்வரன் (முன்னாள் கப்பல் பொறியியலாளர், முன்னாள் முகாமையாளர் ஸ்ரீவராகி அம்பாள் தேவஸ்தானம், கொக்குவில் மேற்கு, கொக்குவில், ஸ்ரீவராகி அம்பாள் ரேடர்ஸ் உரிமையாளர், K.K.S. வீதி, யாழ்ப்பாணம்), தேவிகாராணி (கனடா), தவராணி (ஜேர்மனி) ஆகியோரின் அன்புத் தாயாரும் நல்லையா (Ceylon brewery Limited, Forest department), காலஞ்சென்ற தவராசா, பற்குணம் (ஜேர்மனி), வசந்தகுமாரி ஆகியோரின் அன்பு மாமியாரும் டில்க்குஷா விக்னேஸ்வரராஜா (கனடா), இந்துஷா அசோக்குமார் (கனடா), ஸ்ரீஉஷா குருபரன் (கனடா), நிருஷா (கனடா), தவநிருஷன் (கனடா), அனுஷா, கோபிநாத், கௌதமன் (ஜேர்மனி), கவிதாஸ் (ஜேர்மனி) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் மாறன் (கனடா), மாசிலன் (கனடா), துவாரகி (கனடா), வராகன் (கனடா), அபிராம் (கனடா), அஸ்வின் (கனடா) ஆகியோரின் அன்புப் பூட்டியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (28.01.2004) புதன்கிழமை பிற்பகல் 2மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக கோம்பையன்மணல் இந்துமயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்.

'வெண்மதி'',
ஆறுகால்மடம், ஆனைக்கோட்டை. (27724)(26-19-18-21)

யாழ்ப்பாணம்



உதயன்

## சொல்லிலும் செயலிலும் தேவை - ஒருமைப்பாடு

இந்தியக் குடியரசுத் தினமான நேற்றுமுன்தினமும், நேற்றும் வெளியான சிலசெய்திகள் ஈழத்தமிழரைப் பெரும் குழப்பத்தில் ஆழ்த்தியிருக்கின்றன.

இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையிலான உத்தேச பாதுகாப்பு ஒப்பந்தம் ஈழத்தமிழர்களுக்குப் பெரிதும் பாதிப்பைத்தரும் விதத்தில், தற்போதைய சமாதான நடவடிக்கைகளில் மோசமான எதிர்விளைவுகளை ஏற்படுத்தும். தற்போதைய இராணுவச் சமநிலையில் தமிழருக்குப் பெரும் பாதிப்பை உருவாக்கும் நிலையையும் அது தோற்றுவிக்கும். - இவ்வாறு புலிகள் கடும் விசனமும் கவலையும் வெளியிட்டிருக்கின்றார்கள்; இது குறித்து தமது ஆட்சேபத்தை இந்திய அரசுக்கு தெரியப்படுத்தியிருக்கிறார்கள்.

இந்த ஆபத்து நிலை குறித்து - அபாயச் சூழல் குறித்து - இப்பத்தியில் ஏற்கனவே சுட்டிக்காட்டியிருந்தோம். இப்போது அது புலிகள் தரப்பிலிருந்து பகிரங்கமாக வெளிப்படுத்தப்பட்டிருக்கின்றது.

இந்தச் சமயத்தில் கொழும்புக்கான இந்தியத் தூதுவர் நிருபம்சென் கடந்த இரண்டு நாள்களில் வெளியிட்ட கருத்துக்களை மீண்டும் நினைவுறுத்துவது பொருத்தமானது எனக் கருதுகிறோம்.

முதலாவது - நேற்றுமுன்தினம் கொழும்பில் இந்தியக் குடியரசுத் தினவிழா உரையில் அவர் கூறியது. "இந்தியா எந்த ஒரு சந்தர்ப்பத்திலும் அதன் அணிசேராக் கொள்கையிலிருந்து விலகிச்செல்லாது" - என்று அங்கு கூறினார் சென்.

மற்றது - இந்தியக் குடியரசுத் தினத்தை ஒட்டி தாம் வெளியிட்ட செய்தியில் அவர் குறிப்பிட்ட தகவல். "இலங்கையின் எல்லாப் பிரிவினருக்கும் ஏற்புடையதான பேச்சு மூலத் தீர்வைக் காண்பதற்கான செயற்பாடுகளை இந்தியா வரவேற்கின்றது. ஆனால், அதேசமயம், அத்தகைய நிலையான தீர்வு முழுமையாக உள்நாட்டு அரசியல் நடவடிக்கைகள் மூலமே எட்டப்படவேண்டும் என்ற உறுதியான கருத்தையும் இந்தியா கொண்டிருக்கின்றது." - இது நிருபம் சென் தனது செய்தியில் தெரிவித்த விடயம்.

இந்த இரண்டு நிலைப்பாட்டிலிருந்தும் வார்த்தையளவில் - பேச்சளவில் - மட்டுமல்லாமல் செயலளவிலும் இந்தியா மாறக்கூடாது என்பதைத்தான் ஈழத்தமிழர்கள் இந்தியாவிடமிருந்து எதிர்பார்க்கின்றார்கள்.

இலங்கை இனப்பிரச்சினையில் முக்கிய இரண்டு தரப்புகள் உள்ளன. ஒன்று, பேரினவாதத்தில் தீவிரம் கொண்டுள்ள சிங்களவர் தரப்பு. இலங்கை அரசும், நாட்டின் தலைவியான ஜனாதிபதியின் தரப்பும் சேர்ந்து பிரதிநிதித்துவப்படுத்துகின்றன. மற்றைய தரப்பு தமிழர்கள். அவர்களின் ஏக மற்றும் அதிகாரபூர்வப் பிரதிநிதிகளாகப் புலிகள் இயக்கம் பிரதிநிதித்துவப்படுத்துகின்றது.

நாடுகளுக்கு இடையிலான பரஸ்பர பிரச்சினையில் மூன்றாவது நாடான இந்தியா அணிசேராக் கொள்கையைக் கடைப்பிடிக்கின்றது. ஏன், கொழும்பு அரசியல் தலைமைகள் இடையேயான - ஜனாதிபதி மற்றும் பிரதமர் இடையேயான - இருதரப்புப் பிரச்சினையில் கூட, இந்தியா உட்பட ஏனைய நாடுகள் எந்தப் பக்கமும் சேராமல் அணிசேராப் போக்கையே கடைப்பிடிக்கின்றன.

அதுபோல, இலங்கை இனப்பிரச்சினை விடயத்திலும் சம்பந்தப்பட்ட தரப்புகள் தொடர்பாகவும் இந்தியா அணிசேராக் கொள்கையைக் கடைப்பிடிக்க வேண்டும் என்றே தமிழர்கள் எதிர்பார்க்கின்றார்கள். தெளிவாகச் சொல்லுவதானால், ஈழத்தமிழருக்கு மாறாக - சிங்களவர் பக்கம் இராணுவ ரீதியில் சாயும் விதத்திலான - பக்கச்சார்பை இந்தியா கைக்கொள்ளக் கூடாது என்பதையே தமிழர்கள் சுட்டிக்காட்ட விரும்புகின்றனர்.

அதேபோன்று, இலங்கை இனப்பிரச்சினைக்கான அமைதித் தீர்வு, முழுமையாக உள்நாட்டு அரசியல் நடவடிக்கைகள் மூலமே எட்டப்படவேண்டும் என்ற தனது வாய்ப்பேச்சில் இந்தியா உண்மையாக, உறுதியாக இருக்குமானால், வெளிச்சக்தியான அது, தான் இவ்விடயத்தில் தலையீடு செய்வதை முதலில் தவிர்க்கவேண்டும்.

இராணுவ ரீதியிலான பாதுகாப்பு ஒப்பந்தம் ஒன்றை இலங்கையோடு செய்துகொள்வதன் மூலம் இலங்கைக்குள் அமைதித் தீர்வு காணும் முயற்சியை முதலில் முறியடிக்கும் வெளிச்சக்தியாக இந்தியாவே உள்நுழைகின்றது என்றே எவரும் கருதுவர்.

வெளியில் ஒன்று பேசிக்கொண்டு - போதனை செய்துகொண்டு - செயலில் புறம்பாக நடப்பது இந்தியா போன்ற கௌரவம் மிக்க நாட்டுக்குப் பொருத்தமானது அல்ல.

இலங்கையில் தற்போதைய யுத்த நிறுத்தம் தெளிவாகப் பேணப்படுவதற்கு இராணுவச் சமநிலையும் தொடர்ந்து சீராகப் பேணப்பட வேண்டும் என்பதை அரசு - புலிகள் புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்தான காலத்தில் இருந்தே இவ்விடயத்தில் அனுசரணைப் பணியாற்றிவரும் நோர்வே வலியுறுத்தி வருகின்றது.

உயர்பாதுகாப்பு வலயப் பிரச்சினை தொடர்பாக இலங்கை அரசுக்கு நிபுணத்துவ ஆலோசனை வழங்குவதற்காக இந்தியாவிலிருந்து வந்த - அந்த நாட்டின் முன்னாள் இராணுவ உயரதிகாரியான - ஜெனரல் சதீஷ் நம்பியார் கூட, தற்போதைய இராணுவச் சமநிலை பாதிக்கப்படக்கூடாது என்ற அடிப்படையில்தான் தனது சிபாரிசை வழங்கியிருந்தார்.

இந்தியாவின் மூத்த இராணுவ நிபுணரும், இராணுவ மூல வள ஆலோசகருமான ஜெனரல் நம்பியார் வழங்கிய ஆலோசனைக்கு முரணாக இராணுவச் சமநிலையைப் பாதிக்கச் செய்யும் வகையில் - தமிழருக்குப் பின்னடைவை ஏற்படுத்தும் விதத்தில் - செயற்பட இந்தியா முனைவதாகவே கருதவேண்டி உள்ளது.

"உத்தேச ஒப்பந்தம் அதிகார சமநிலை விடயத்தில் புலகளுக்குப் பாதகமான விளைவை ஏற்படுத்தும். இராணுவ சமநிலையில் ஏற்படும் குழப்பம், இலங்கை சமாதான முயற்சிகளுக்கு அடிப்படையான யுத்தநிறுத்த உடன்படிக்கையையே குழப்பிவிடும்." - என்று எச்சரித்திருக்கின்றார்கள் புலிகள்.

இந்த எச்சரிக்கையில் பொதிந்துள்ள அர்த்தத்தை, இது வடயத்தில் அடுத்த அடியை முன்னெடுத்து வைக்க முன்னர் இலங்கை அரசுத் தரப்பு ஒரு தடவை கவனத்தில் எடுத்துக்கொள்வது ஆக்கபூர்வமானதாக அமையும்.

---

யாழ். குடாநாட்டில்

# கண்ணி அகற்றும் பணியை இரட்டிப்பாக்குவதற்குத் திட்டம்

யாழ்ப்பாணம்,ஜன.28

குடாநாட்டில் கண்ணிவெடி அகறறும் பணிகளை இரட்டிப்பாக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது என்று யாழ். செயலக கண்ணிவெடி அகற்றும் செயற்பாட்டுப் பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

ஹலோ ட்ரஸ்ட், டெனிஸ் கண்ணி அகற்றும் நிறுவனம் மற்றும் ஸ்ரீலங்கா இராணுவத்தின் பொறியியல் பிரிவு ஆகியன தற்போது குடாநாட்டில் கண்ணி அகற்றும் பணிகளை மேற்கொண்டு வருகின்றன.


ஹலோ ட்ரஸ்ட் நிறுவனத்தில் தற்சமயம் 200 பேர் பணியாற்றுகின்றனர். இத்தொகையை இரட்டிப்பாக்க அந்த நிறுவனம் முடிவுசெய்துள்ளது. மேலதிகமாக கண்ணி அகற்றும் உபகரணங்களையும் அது எடுத்துவரவிருக்கின்றது.

டெனிஸ் கண்ணி அகற்றும் பிரிவினர் தமது பணியை விரிவுபடுத்த கண்ணிகளைக் கண்டுபிடிக்கும் நான்கு நாய்களையும் இயந்திர சாதனங்களையும் எடுத்துவரவிருக்கின்றனர்.

ஸ்ரீலங்கா இராணுவமும் தனது சேவையை விரிவுபடுத்தத் திட்டமிட்டுள்ளது. (ம-3)

# காலதாமதமற்ற, பாரபட்சமற்ற நீதியை வழங்குவதில் கவனமாக உள்ளோம்

## நீதி, நிர்வாகப் பொறுப்பாளர் பரா தெரிவிப்பு



கிளிநொச்சி,ஜன.28

எமக்குரிய சட்டங்களை உருவாக்கி, அந்தச் சட்டங்களுக்கு அமைவாகக் காலதாமதமற்ற, பாரபட்சமற்ற நீதியை அனைவருக்கும் வழங்குவதில் கவனமாகவிருக்கிறோம்.

- இவ்வாறு தெரிவித்துள்ளார் தமிழீழ நீதி, நிர்வாகத் துறைப் பொறுப்பாளர் பரா.

தமிழீழ சட்டக்கல்லூரியின் 4ஆம் அணி மாணவர்களுக்கான பட்டமளிப்புவிழா கிளிநொச்சியில் நடைபெற்றபோது அதில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

தனிப்பட்ட உணர்வுகளுக்கும் பந்த பாச உறவுகளுக்கும் இடமளிக்காது நேர்மையுடன் பிரச்சினைகளை அணுகிச் சத்தியத்தின் அடிப்படையில் மக்களுக்கு நீதி வழங்கவேண்டும் என்ற தேசியத் தலைவரின் சிந்தனைக்கேற்ப பத்து வருடகால சேவையை நீதி, நிர்வாகத்துறை பூர்த்திசெய்துள்ளது.

இதன்படி, மனித உரிமைகள் மதிக்கப்படவும், மனிதாபிமானம் கௌரவிக்கப்படவும், சமத்துவம் பேணப்படவும் வேண்டும் என்ற இலக்குடன் 1993ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம். 19ஆம் திகதி தமிழீழ சட்டக்கல்லூரி தனது முதலாவது அணி மாணவர்களை நீதியாளர்களாகவும் சட்டவாளர்களாகவும் வெளியேற்றியது.

தமிழீழ நீதிமன்றுகள் முல்லைத்தீவு, கிளிநொச்சி, வவுனியா, மன்னார், திருகோணமலை, மட்டு. - அம்பாறை ஆகிய மாவட்டங்களில் தற்போது நீதிச் சேவையாற்றி வருகின்றன. எமது நீதித் துறையின் செயற்பாடுகளை மக்கள் வரவேற்றுள்ளதுடன், நீதிமன்றுகளின் தீர்ப்புக்களை ஏற்று அதன்படி ஒழுகியும் வருகின்றனர்.

இதற்கெல்லாம் காரணகர்த்தாக்கள் எமது நீதியாளர்களும் சட்டவாளர்களுமேயாவர். எனவே, நீதித் துறைச் செயற்பாட்டின் உந்துசக்திகளாக விளங்கிய, விளங்கவுள்ள அனைவரையும் இத்துறையின் வளர்ச்சிக்குத் தொடர்ந்து பணியாற்றுமாறு கேட்டுக்கொள்கிறேன் - என்றார்.

தமிழீழ அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச் செல்வன் தனதுரையில் தெரிவித்ததாவது:-

தமிழீழ நீதித்துறையும் காவல்துறையும் எமது எதிரிகளாலேயே புகழ்ந்து பேசப்படும் அளவுக்குப் பெரும் வளர்ச்சி கண்டுள்ளன. சர்வதேச நாடுகளின் பிரதிநிதிகள் கூட இங்கு வருகின்றபோது எமது இத்தகைய கட்டமைப்புக்களைக் கண்டு வியப்பதுடன், தமது பாராட்டுக்களையும் தெரிவித்து வருகின்றனர்.

போர் நடைபெறுகின்ற இடங்களில் பொதுவாகச் சமூகச் சீரழிவுகளும் மோசடிகளும் ஏற்படுவதுடன், சட்டம், ஒழுங்கு என்பனவும் சீர்குலைந்து காணப்படும். ஆனால், எமது தேசத்தில் அவ்வாறானதொரு நிலையில்லை. அதற்குக் காரணம் எமது நீதி, நிர்வாகக் கட்டமைப்புக்கள்தான்.

கட்டுக்கோப்புள்ள, உயர் விழுமியங்களைப் பேணுகின்ற சமூகமாக எமது இனத்தைக் கட்டியெழுப்பவேண்டும் என்ற நோக்குடன் எமது தலைவர் கட்டியெழுப்பிய இந்த நீதி, நிர்வாகத்துறை இன்று பெருவளர்ச்சி கண்டுள்ளது.

ஆனால், ஸ்ரீலங்கா உட்படப் பல நாடுகளில் குற்றவாளிகளைக் காப்பாற்ற முனையும் சட்டவாளர்கள்தான் அதிகம் உள்ளனர். எமது தேசத்தில் அவ்வாறு இல்லை. ஒழுக்கமான, இறுக்கமான பண்பாட்டுடன்கூடிய மக்கள் சமூகத்தைக் கட்டியெழுப்பவேண்டிய பாரிய பொறுப்பு இவர்களுக்கு உண்டு.

சர்வதேச அழுத்தம் காரணமாகத்தான் ஸ்ரீலங்கா அரசு புலிகளுடன் பேச்சுக்களில் ஈடுபட்டது. இது சர்வதேச சமூகத்தைத் திருப்திப்படுத்தவும் சிதைந்துபோன தனது பொருளாதாரத்தைக் கட்டியெழுப்பவுமே ஆகும். ஏனெனில், இந்த யுத்தநிறுத்த உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டு இரண்டு வருடங்களாகியும் உடன்படிக்கையில் குறிப்பிடப்பட்ட விடயங்கள் எதுவும் நிறைவேற்றப்படவில்லை. தமிழ் மக்களை ஒடுக்கவும் அவர்களை அழிக்கவும் சர்வதேச சமூகத்தை ஏமாற்றவுமே அரசு இதனைப் பயன்படுத்தி வந்துள்ளது - என்றார். (ம-10-5)

# சுதந்திர முன்னணி மாநாட்டில் ஜே.வி.பி. தலைவர் நாளை உரை?

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் முதலாவது தேசிய மாநாட்டில் ஜே.வி.பி தலைவர் சோமவன்ஸ அமரசிங்க உரையாற்றுவார் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியும், ஜே.வி.பியும் இணைந்து ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி என்ற பெயரில் கூட்டமைப்பு ஒன்றைக் கடந்த 20ஆம் திகதி ஏற்படுத்தியிருந்தன. இதற்கான உடன்படிக்கை கைச்சாத்திடப்படும் நிகழ்வில் பங்கேற்க ஜே.வி.பியின் தலைவர் சோமவன்ஸ அமரசிங்க பிரிட்டனில் இருந்து இலங்கை திரும்பியிருந்தார். ஜே.வி.பி. கிளர்ச்சி தொடர்பாக பொலீஸாரால் தேடப்பட்டபோதே அவர் பிரிட்டனுக்குத் தப்பிச் சென்றிருந்தார்.

கடந்த தேர்தலின் பின்னர் மீண்டும் அவர் நாடு திரும்பியுள்ளார்.

நாளை கொழும்பில் இடம்பெறவுள்ள ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் முதலாவது தேசிய மாநாட்டில் அவர் உரையாற்றுவார் என்று ஜே.வி.பி.வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

கொழும்பிலுள்ள பிரபல ஹோட்டல் ஒன்றில் ஜே.வி.பி தொண்டர்களின் பலத்த பாதுகாப்பின் மத்தியில் அமரசிங்க தற்போது தங்கியுள்ளார்.

இந்த ஹோட்டலில் சமீபத்தில் ஜே.வி.பியின் உயர்மட்டக் கூட்டம் இடம்பெற்றதாகவும் -

சுதந்திரக் கட்சியுடன் கூட்டு ஏற்படுத்தப்பட்டபின்னர் மேற்கொள்ளப்படவேண்டிய அரசியல் நடவடிக்கைகள் குறித்து இந்தக் கூட்டத்தில் ஆராயப்பட்டது என்றும் -

தேசிய மாநாட்டில் சோமவன்ஸ உரையாற்றுவர் என்ற முடிவு அப்போது எடுக்கப்பட்டது என்றும் - கூறப்படுகிறது. (ஒ-து)

**நாளை**

தை 15
வியாழக்கிழமை
(29.01.2004)
திதி : அட்டமி
பின்னிரவு 3.36 வரை
நட்சத்திரம்: அச்சுவினி
பகல் 11.45 வரை
அட்டமி நவமி
சுபநேரம்: 08.06 - 09.36
ராகுகாலம்: 02.06 - 3.36
(பழைய நேரப்படி)

**உதயவாக்கு**

ஆயிரம் மனங்கள் தூற்றுவதை விடவும் ஒரு வாய் தூற்றுவது கொடியது.

# கூரையிலிருந்து விழுந்த கோப்ரல் நான்கு நாள்களின் பின்னர் மரணம்!

தெல்லிப்பழை,ஜன.28

காங்கேசன்துறைப் படைத்தளத்தில் கடந்த 21ஆம் திகதி இடம்பெற்ற விபத்தில் படுகாயமடைந்தவர் என்று கூறப்படும் இராணுவ கோப்ரல் ஒருவர் மருத்துவமனையில் மரணமானார்.

2ஆவது சிங்கப் படைப்பிரிவில் பணியாற்றிய எல்.கே.என். பி.ராஜபக்ஷ (வயது 35) என்பவரே உயிரிழந்தவராவார். எம்பிலிப்பிட்டியவைச் சேர்ந்த இவர் 2 பிள்ளைகளின் தந்தை ஆவார்.

காங்கேசன்துறையில் உள்ள விடுமுறையில் செல்லும் படையினர் தங்கும் விடுதியில் ராஜபக்ஷ கடந்த 21ஆம் திகதி தங்கியிருந்தார் என்றும் -

அந்தவேளை - விடுதியின் கூரைப் பகுதியில் அவர் நடந்து சென்றபோது, கூரைப் பகுதி உடைந்து அவர் கீழே விழுந்து படுகாயமடைந்தார் என்றும் - கூறப்படுகிறது.

படுகாயமடைந்த அவர் பலாலி இராணுவ மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுப் பின்னர் மேலதிக சிகிச்சைக்காக கொழும்பு பொதுமருத்துவமனைக்கு அனுப்பப்பட்டார். அங்கு சிகிச்சை பயனளிக்காமல் அவர் மரணமானார்.

இந்த மரணம் தொடர்பான விசாரணையை மல்லாகம் மேலதிக நீதிவான் வசந்தசேனன் மேற்கொண்டார்.

சம்பவம் இடம்பெற்ற விடுதியின் காப்பாளரையும், விபத்து நடந்ததாகக் கூறப்படும் சமயத்தில் உடனிருந்தவர்கள் என்று கூறப்படும் படையினரையும் நீதிமன்றில் ஆஜர்படுத்துமாறு இராணுவப் பொலீஸாருக்கு நீதிவான் உத்தரவிட்டுள்ளார். (ஓ-150)

வடக்கு - கிழக்கு உட்பட

# சகல மாகாணங்களிலும் தகவல் தொழில்நுட்பம்

## மூன்றாம் நிலைக்கல்வி அமைச்சு நடவடிக்கை

மூதூர்,ஜன.28

வடக்கு - கிழக்கு மாகாணம் உட்பட நாட்டில் சகல மாகாணங்களிலும் தகவல் தொழில்நுட்பக் கல்வி விஸ்தரிக்கப்படும். இதற்கான நடவடிக்கையினை மூன்றாம் நிலைக் கல்வி மற்றும் பயிற்சி அமைச்சு மேற்கொண்டு வருகிறது.

நாட்டின் சகல பிரதேசங்களிலும் படித்துவிட்டு வேலை வாய்ப்பின்றியிருக்கும் சகல இளைஞர், யுவதிகளின் எதிர்கால நலனைக் கருத்திற்கொண்டு 5 பிராந்திய தகவல் தொழில்நுட்ப நிலையங்கள் திறக்கப்படவிருக்கின்றன.

கிழக்குப் பிராந்தியத்திற்கான நிலையம் மட்டக்களப்பு மாவட்டத்திலும் மற்றும் கொழும்பு, கண்டி, காலி, அநுராதபுரம் ஆகிய மாவட்டங்களில் ஏனைய நிலையங்களும் அமைக்கப்படும். இவ்வேலைகளுக்கு ஆசிய அபிவிருத்தி வங்கி நான்கு கோடி ரூபாவை வழங்கியிருப்பதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

# இவர் உண்மையில் மோட்டார் சைக்கிள் ஒன்றின் பாவனையாளர்.

"மாணவர்களின் கல்விக்குப் பெருந்துணை, எனக்கும், எனது சேமிப்புக்கும் உறுதுணை!"




அஷோக்க பண்டார சமரக்கோன்
ஆசிரியர்,
வேவல வெவ மஹா வித்தியாலயம்
வேவல, தம்புள்ளை

"நான் ஒரு பின் தங்கிய கிராமத்தில் ஆசிரியராகக் கடமை புரிகிறேன். தம்புள்ளையிலிருந்து பாடசாலைக்கு வருவதானால் ஏறக்குறைய ஒன்றரை முதல் இரண்டு மணித்தியாலங்கள் ஆகும். மணிக்கு ஒரு பஸ் தான் உள்ளதென்பதால் தினமும் கண்டி, வத்தேகமையிலிருந்து வேலைக்குச் செல்வதற்கு நான் பட்ட பாடு எனக்கு மட்டுமே தெரியும்.

ஆனால் இந்தத் தொல்லைகள் அனைத்தும் BOXER மோட்டார் சைக்கிளை வாங்கியதன் பின் மாயமாய் மறைந்து விட்டன. இப்பொழுதெல்லாம், பாடசாலைக்குத் தாமதமின்றி மிக எளிதில் போக முடிகிறது. BOXER மோட்டார் சைக்கிள் உள்ளதால் வார இறுதி நாட்களில் வீட்டு அலுவல்களை இலகுவில் முடித்துக் கொள்ளவும், வெளிப்பயணம் செல்லவும் வசதியாகவுள்ளது.

எமது பாடசாலை பின்தங்கிய கிராமப் பகுதியில் தான் அமைந்துள்ளது. BOXER மோட்டார் சைக்கிளின் டபிள் கிறேடில், செஸி மற்றும் ஷொக் அப்ஸோபர் என்பன இப் பாதைக்கு நன்கு பொருந்துகிறது. அதன் 35/35W முன்புற விளக்கின் கூடிய வெளிச்சம் இராப் பொழுதிலும் பாதுகாப்புடன் பயணிக்க ஏற்றது. BOXER மோட்டார் சைக்கிளை மிகச் சுலபமாக ஓட்டிச் செல்லலாம்.

டேவிட் பீரிஸ் மோட்டார் கம்பனி லிமிட்டட்டின் சேவை மற்றும் மேலதிக உதிரிப்பாக விற்பனை வலையமைப்பானது என்றும், என்னை நிழலாகத் தொடர்ந்து, துணைபுரிகிறது. என்னுடன் பணியாற்றும் ஆசிரியர்களும் BOXER மோட்டார் சைக்கிளைத் தான் பயன்படுத்துகிறார்கள்."

"ஏனையோரைவிட மோட்டார் சைக்கிளின்
பெருமையையும், பெறுமதியையும் நன்குணர்ந்தவர்கள்,
அதைப் பாவித்துப் பயனடையும் நாம் மட்டுமே."

**பஜாஜ்** இலங்கையில் மும்முரமாக விற்பனையாகும் மோட்டார் சைக்கிள்.

**BOXER CT Deluxe**

**DPMC டேவிட் பீரிஸ் மோட்டார் கம்பனி லிமிட்டட்.**
75, ஹைட் பார்க் கோனர், கொழும்பு - 2. தொலைபேசி : 4700600 தொலைநகல் : 4700677, 2687175
மோட்டார் சைக்கிள் பற்றிய விபரங்களுக்கான அவசர அழைப்பு : 4715050
இணைய தளம் : http://www.dpmco.com

பிராந்திய அலுவலகங்கள் : நீர்கொழும்பு, பக்கலை, மத்துகமை, கண்டி, நுவரெலியா, மாத்தறை, அனுராதபுரம், தெஹிவத்தகண்டிய, பதுளை, குருநாகல், புத்தளம், இரத்தினபுரி, அம்பாறை, திருகோணமலை.
சகல பிராந்திய அலுவலகங்களினதும் பொதுவான தொலைபேசி எண்கள்: 4700600.

ads 04/01/3006

# சுகாதாரச் சீர்கேடாக உணவு தயாரித்த உணவகத்துக்குச் 'சீல்'

யாழ்ப்பாணம்,ஜன.28

சுகாதாரச் சீர்கேடான முறையில உணவு தயாரித்ததாகக் குற்றஞ்சாட்டப்பட்ட உணவகம் ஒன்றினை 'சீல்' வைக்குமாறு யாழ்.நீதிமன்றம் பொலீஸாருக்கு உத்தரவிட்டது.

அழைப்பாணை விடுக்கப்பட்டிருந்தும் மன்றுக்குச் சமுகமளிக்காததற்காக பிரஸ்தாப உணவகத்தின் உரிமையாளருக்கு எதிராக பகிரங்க பிடியாணையும் பிறப்பிக்கப்பட்டது.

யாழ். ஆஸ்பத்திரி வீதியிலுள்ள மேற்படி உணவகத்தில் கடந்த சில நாள்களுக்கு முன்னர் திடீர் சோதனை செய்த யாழ். மாநகர சபை சுகாதாரப் பரிசோதகர்கள் அங்கு சுகதாரச் சீர்கேடான முறையில் உணவு தயாரிக்கப்படுவதைக் கண்டுபிடித்தனர்.

இருவாரங்களுக்குள் அந்தச் சுகாதாரச் சீர்கேடுகள் நீக்கப்பட்டு நல்ல முறையில் சுத்தம் பேணுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படவேண்டும் என்று பிரஸ்தாப கடையின் உரிமையாளருக்கு சுகாதரப் பரிசோதகர்கள் அறிவுறுத்தியிருக்கின்றனர்.

ஆனால், இரு வாரங்களுக்குப் பின்னரும் அங்கு சுகாதாரம் பேணப்படாமையினால் அக்கடையின் உரிமையாளருக்கு எதிராக சுகாதாரப் பரிசோதகர்களால் நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது.

இந்த வழக்கு நேற்றுமுன்தினம் யாழ. நீதிவான் இ.த.விக்னராஜா முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோது நீதிவான், கடையை 'சீல்' வைக்குமாறும் கடையின் உரிமையாளரைக் கைதுசெய்யுமாறும் உத்தரவிட்டார். (ம-4-5)

# லயன்ஸ் கழகங்களின் அனுசரணையுடன் குடாநாட்டில் இலவச மருத்துவ முகாம்.

கொழும்பு '306ஏ' லயன்ஸ் கழகங்களின் அனுசரணையுடன் யாழ். மாவட்ட '306பி' லயன்ஸ் கழகங்கள் இணைந்து எதிர்வரும் 31ஆம் திகதி குடாநாட்டில் இலவச மருத்துவமுகாம் ஒன்றினை நடத்தவுள்ளன.

இந்த மருத்துவ முகாமை நடத்துவதற்கென கொழும்பிலிருந்து 10 மருத்துவர்கள் வரவுள்ளனர்.

இவர்கள் மூன்று பிரிவினராக தென்மராட்சி, தீவகம், குருநகர் ஆகிய இடங்களில் மருத்துவ முகாம்களை நடத்துவார்கள்.

கண் சிகிச்சை உட்பட சகல வகையான பொதுமருத்துவ சிகிச்சைகளும் இதில் வழங்கப்படவுள்ளன.

நோயாளர்களுக்கான இலவச மருந்துகள் அனைத்தையும் கொழும்பு '306 ஏ' லயன்ஸ் கழகங்கள் வழங்கியுள்ளன. (ம-4-8)

## சுவிஸ் எம்.பிக்கள் அடுத்த மாதம் யாழ். வருவர்

யாழ்குடாநாட்டு நிலைமை குறித்து ஆராய்வதற்காக சுவிஸ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் குழு ஒன்று அடுத்த மாதம் 12ஆம் திகதி யாழ்ப்பாணம் வருகின்றது.

இலங்கைக்கு எட்டுநாள் விஜயம் மேற்கொண்டு வரும் இக்குழு 12ஆம், 13ஆம் திகதிகளில் யாழ்ப்பாணத்துக்கு விஜயம் மேற்கொள்கின்றது.

யாழ். அரச அதிபர் மற்றும் தொண்டர் நிறுவனங்களின் பிரதிநிதிகளையும் இக்குழு சந்திக்கும்.(ம-3)



வலிகாமம் தென்மெற்கு கிராம அபிவிருத்தி முன்னேற்ற மாதர் சங்கம், அண்மையில் வடலியடைப்பு தலைவாணி வீதியில் உள்ள கட்டடத்தில் திறந்துவைக்கப்பட்டது. நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட சமூக சேவையாளரும் சமாதான நீதிவானுமாகிய வீ.துரையப்பா மங்கள விளக்கேற்றி நிகழ்வை ஆரம்பித்து வைப்பதைப் படத்தில் காணலாம். மாதர் சங்கத் தலைவி யோகேஸ்வரன் பத்மாவதியும் அருகில் உள்ளார். (ம-185)

# போராளிகள் நினைவிடத்தில் அரச மரக்கன்று நடுவதா?

## பொதுமக்கள் விசனம்

வலி.வடக்கு,ஜன.28

கந்தர்மடம், பழம்வீதி, ஆலடிச் சந்தியில் போராளிகளின் நினைவுத் தூபி இருந்த இடத்தில் அங்கு நிலைகொண்டுள்ள படையினர் அரச மரக்கன்றை நட்டு வளர்த்து வருகின்றனர். படையினரின் இச்செயல் பொதுமக்களை விசனம் கொள்ளவைத்துள்ளது.

இந்திய இராணுவம் இங்கு நிலைகொண்டிருந்தவேளையில், வெடிகுண்டு பொருத்தப்பட்ட வாகனத்துடன் சென்ற மேஜர் சுபாஸ், லெப்டினன்ட் சூட்டி ஆகியோர் உட்படப் போராளிகள் வீரமரணத்தைத் தழுவியதை நினைவுகூரும் முக்கோண வடிவிலமைந்த தூபி இந்த இடத்தில் அமைக்கப்பட்டிருந்தது.

1995ஆம் ஆண்டு இராணுவம் யாழ். குடாநாட்டைக் கைப்பற்றியபோது இந்தத் தூபியும் உடைத்துத் தகர்க்கப்பட்டது.

தற்போது இவ்விடம் துப்புரவு செய்யப்பட்டு அங்கு அரசமரம் நடப்பட்டுள்ளது. அரச மரத்தைத் தொடர்ந்து அப்பகுதியில் இன்னும் சிறிது காலத்தில் புத்தர் சிலையும் வைக்கப்படலாம் எனப் பொதுமக்கள் அச்சம் தெரிவிக்கின்றனர்.

சமாதான காலத்தில் இத்தகைய தேவையற்ற செயல்களைப் படையினர் தவிர்த்துக் கொள்வதே சிறந்தது என்று பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள் கருத்துத் தெரிவித்துள்ளனர். (ம-86)

# தேர்தலுக்கான ஏற்பாடுகளில் ஈடுபடுகின்றார் ஆனந்தசங்கரி

## தெல்லிப்பழைக் கருத்தரங்கில் மாவை எம்.பி. பாய்ச்சல்

வலி.வடக்கு,ஜன.28

தேர்தலுக்கான முன்னேற்பாடுகளைச் செய்வதில் தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர் வீ.ஆனந்தசங்கரி ஈடுபட்டு வருகின்றார் என்று தமிழ்க் கூட்டமைப்பு எம்.பி. மாவை சேனாதிராசா குற்றஞ்சாட்டினார்.

தேர்தலுக்கான வேட்பாளர் பட்டியலைத் தயாரிப்பதிலும் அவர் முனைப்பாக இருக்கிறார் என்றும் சேனாதிராசா கூறினார்.

தெல்லிப்பழை காசிப்பிள்ளையார் ஆலயத்துக்கு அருகில் தமிழர் விடுதலைக் கூட்டணியின் கருத்தரங்கு அண்மையில் நடைபெற்றது. அதில் உரையாற்றிய மாவை சேனாதிராசா மேலும் தெரிவித்ததாவது:-

தமிழீழ விடுதலைப் புலிகள் உலகில் இரகசியம் காப்பதில் முன்னிற்பவர்கள். இத்தகையவர்களைச் சந்திப்பதற்கு நம்பகத்தன்மை அற்ற ஒருவரையும் இரகசியம் பேணாதவரையும் மாற்றுக் கருத்து உடையவரையும் எவ்வாறு அழைத்துச்செல்லமுடியும்.

கட்சியின் தலைவர் என்பவர் நம்பகத் தன்மை உடையவராகவும் இலட்சியப்பற்று உடையவராகவும் இருக்கவேண்டும். அத்தகைய செயற்பாடுகளுக்கு எதிரானவர் கட்சியின் தலைவராக இருக்கமுடியாது.

தற்போது ஆனந்தசங்கரி தேர்தலுக்கு முன்னேற்பாடாக ஆள்களுடன் கதைக்கும் முன்முயற்சியில் ஈடுபட்டுள்ளதுடன் தேர்தலுக்கான வேட்பாளர் பட்டியலைத் தயாரிக்கும் முன்முயற்சியிலும் ஈடுபட்டுள்ளார்.

தமிழீழ இலட்சியத்தை அடைய வேண்டுமாக இருந்தால் நமக்கென்று ஒரு படைப் பலம் இருக்கவேண்டியது அத்தியாவசியம். ஆரம்பத்தில் எமது கட்சியின் உறுப்பினர்கள் ஒவ்வொரு இயக்கத்தின் பின்னால் இருந்தும் செயற்பட்டுக்கொண்டுதான் இருந்தனர்.

1972ஆம் ஆண்டு அரசியல் யாப்புக் கொண்டுவரப்பட்டபோது எமது கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள் அனைவரும் எதிர்த்து நின்றது.

ஆனால் தியாகராசா, அருளம்பலம், ஆனந்சங்கரி போன்றோர் சிறிமாவோ அம்மையாரின் சேலைக்குப் பின்னால் நின்றார்கள்.

தலைமைத்துவத்தில் இருக்கும் ஒருவர் உண்மை பேசுபவராகவும் நிதானமானவராகவும் இருக்கவேண்டும். அத்தகைய தன்மை கொண்ட ஒருவராக இருந்தால் நாம் எதனையும் பேச முடியும். ஆனால், சங்கரியிடம் இத்தகைய பண்புகள் இல்லை. அடிக்கடி மாற்றிமாற்றிப் பேசும் தன்மையே காணப்படுகிறது.

பத்திரிகைகளில் நாளுக்கு நாள் வரும் செய்திகளைப் பார்த்து யாரும் குழப்பமடையத்தேவையில்லை.

அவர் பத்திரிகைகளில் விடும் அறிக்கைகளில் கூறுவதொன்று; செய்வது அதற்கு எதிர்மாறாகவே இருக்கிறது.

நான் கனடா சென்றிருந்தபோது என்னிடம் ஒருவர் கேட்டார் நீங்கள் புலிகள் வா என்றால் வருவதும் போ என்றால் போவதுமாக இருக்கின்றீர்களே ஏனென்று. நான் கூறினேன் போனவர்கள் வரவில்லை, வந்தவர்கள் போகவில்லை என்று.

இன்றைய காலகட்டத்தில் சர்வதேச நாடுகளும் புலிகளையும் அவர்களின் ஆயுதப் போராட்டத்தையும் ஏற்றுக்கொண்டுள்ளன.

இநிலைமையிலேயே, கிளிநொச்சிக்குப் பல நாட்டின் பிரதிநிதிகளும் சென்று பேச்சுக்களில் ஈடுபட்டுக்கொண்டிருக்கின்றனர்.

இந்நிலைமையில் நாம் அவர்களுகக்குப் பக்கத்துணையாக இருக்கவேண்டியது காலத்தின் தேவையும் அத்தியாவசியமும் ஆகும். எமது தலைமைத்துவத்தைப் பொறுத்தவரை இத்தகைய நிலைமை இல்லை. எதிர்ப்புக் காட்டும் நிலைமையே காணப்படுகின்றது. அறிக்கைகள் கூடத் தன்னிச்சையாக வெளியிடப்படுகின்றன. கட்சியின் ஏனைய முழு உறுப்பினர்களுடன் கூடக் கதைப்பதில்லை - எனவும் அவர் குறிப்பிட்டார்.

வி.ஜி.தங்கவேல், சி.சிவமகாராசா ஆகியோரும் கருத்தரங்கில் உரையாற்றினார்கள். (ம-86-150)

## நூலகப் பொறுப்பாளர்களுக்கு பயிற்சிப்பட்டறை

இலங்கையில் உள்ள பாடசாலைகளில் கடமையாற்றும் நூலகப் பொறுப்பாளர்களுக்கு பாடசாலை நூலகங்களின் நூலக சாதனங்களைப் பேணல் தொடர்பான செயல்ரீதியானதும், கோட்பாட்டு ரீதியிலானதுமான பயிற்சிப் பாடநெறியொன்று விரைவில் நடைபெறவுள்ளது.

தேசிய நூலக ஆவணவாக்கல் சேவைகள் சபையால் மேற்படி பயிற்சியை நடத்துவதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது.

பங்குபற்றும் பயிற்சியாளர்களுககு பாடநெறி முடிவில் சான்றிதழ்கள் வழங்கப்படும்.

அத்துடன், பயிற்சியில் பங்குபற்றும் பயிற்சியாளர்களுக்கு கடதாசி வெட்டும் கத்தி, இரும்பு அடிமட்டம், தூரிகை, கடதாசி துளைக்கும் ஊசி, கத்தரிக்கோல், பிளாஸ்ரிக் கோப்பை, தையல் ஊசி, சுத்தியல் போன்ற பொருள்களைக் கொண்ட உபகரணத் தொகுதியொன்றும் வழங்கப்படவுள்ளது. (எ-152)

# ஜனாதிபதியின் பதவிப்பிரமாணம்: உயர் நீதிமன்ற மனு தள்ளுபடி

கொழும்பு,ஜன.28

ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்கா குமாரதுங்க இரண்டு தடவைகள் ஜனாதிபதியாகப் பதவிப்பிரமாணம் செய்து கொண்டமைக்கான சட்டவாக்கத்தன்மை குறித்து விளக்கமளிக்குமாறு கோரி தாக்கல் செய்த மனுவை உயர்நீதிமன்றம் திங்கட்கிழமை நிராகரித்துள்ளது.

சட்டத்தரணி தர்மதாஸ கோமஸ் தாக்கல் செய்த இந்த மனுவில், அரசமைப்பின் 125ஆவது சரத்தின் கீழ் இதற்கான விளக்கத்தை அளிக்குமாறு கோரியிருந்தார்.

சட்டப்பிரகாரம், அவ்வாறான விளக்கத்தை சட்டவாக்க நீதிமன்றம் அல்லது சட்டமன்றம் முன்பு மாத்திரமே கோரமுடியும் என்று உயர்நீதிமன்றம் அதன் தீர்ப்பில் தெரிவித்துள்ளது. (ம-9)

# யுத்தத்தினால் பாதிக்கப்பட்டோருக்கு இழப்பீடு வழங்க நிதி ஒதுக்கீடு இல்லை

## ரூபா 18 கோடி தேவை; கிடைத்ததோ ரூபா 80 லட்சம்

குடாநாட்டில் கடந்தகால யுத்தத்தால் உயிரிழந்த மற்றும் காயமடைநதவர்களுக்கான இழப்பீடுகளை வழங்குவதில் யாழ் செயலகம் பெரும் நெருக்கடிகளை எதிர்நோக்குகின்றது. இந்தக் கொடுப்பனவுகளுக்காக 18 கோடியே 20 லட்சம் ரூபா தேவைப்பட்டபோதும் கடந்த வருடம் 80 லட்சம் ரூபா மட்டுமே அரசினால் இதற்கென ஒதுக்கப்பட்டுள்ளது.

யுத்தத்தில் உயிரிழந்த மற்றும் ஊனமுற்றோரின் குடும்பங்களுக்கு நஷ்டஈடு வழங்கும் திட்டத்தில் கடந்த டிசெம்பர் மாதம் வரை விண்ணப்பம் சமர்ப்பித்தவர்களில் 3 ஆயிரம் பேரின் விண்ணப்பங்கள் கொடுப்பனவு வழங்கப்படாமல் யாழ். செயலகத்தில் தேங்கிக் கிடக்கின்றன.

இக்கொடுப்பனவை வழங்குவதற்கு 18 கோடியே 20 லட்சம் ரூபா தேவை என மதிப்பீடு செய்யப்பட்டு புனர்வாழ்வு, அகதிகள் மீள்குடியமர்வு அமைச்சுக்கு விவரம் அனுப்பப்பட்டிருந்தது.

ஆனால், "யுத்தத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கான கொடுப்பனவுகளை வழங்க 185 கோடியே 50 லட்சம் தேவையாக உள்ளது. 5 கோடியே 75 லட்சம் ரூபா மட்டும் எமக்குக் கிடைத்தது. மேலதிக நிதியைப் பெறுவதற்கு முயற்சிகள் எடுக்கப்பட்டுள்ளன" என்று அந்த அமைசசு யாழ். செயலகத்துக்கு பதிலளித்துள்ளது.

கடந்த வருடம் 80 லட்சம் ரூபாவை மட்டுமே செயலகத்துக்கு அனுப்பியதால் பெரும்பாலானவர்களுக்குக் கொடுப்பனவு வழங்கமுடியாத நிலை நிலவுகின்றது என்று செயலக வட்டாரங்கள் தெரிவித்தன. (ம-3)

# இப்படியும் நடக்கிறது!

யாழ்ப்பாணம்,ஜன.28

தலையில் காயமடைந்து சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்ட பெண் ஒருவர் தனது நெஞ்சுச் சட்டையினுள் சிறிய கசிப்புப் போத்தல் ஒன்றை மறைத்து வைத்திருந்தார்.

இந்தச் சுவாரசியமான சம்பவம் குறித்துத் தெரியவருவதாவது:-

யாழ்.பஸ் நிலையத்தில் பஸ்ஸினுள் ஏறும்போது மிதிபலகையிலிருந்து தவறிவிழுந்து பெண் ஒருவர் காயமடைந்தார்.

அவர் சிகிச்சைக்காக யாழ். ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டார். அப்பெண்ணை சிகிச்சைக்குட்படுத்த டாக்டர்கள் முற்பட்டபோது அவர் திமிறிக்கொண்டு அவர்களை சிசிச்சை செய்யவிடாது அடம்பிடித்தார். வைத்தியசாலை ஊழியர்கள் சிலர் அப்பெண்ணை கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர முயன்றபோது, பெண்ணின் நெஞ்சுச் சட்டைக்குள் கனமான பொருள் ஒன்று இருப்பது தெரியவந்தது. சந்தேகம் ஏற்பட்டதனால் அவளை [illegible] னைக்குட்படுத்தியபோது [illegible] ருந்து கசி[illegible] மீட்[illegible]

இழந்த சக்தியை மீண்டும் பெற்றிட டாக்டர்கள் சிபார்சு செய்வது

றோயல் குளுக்கோஸ்

100/%

சுத்தமானது!

உங்கள் வியாபாரிகளிடம் நீங்கள் குளுக்கோஸ் வாங்கும் போது குளுக்கோஸ் என்று கேட்காமல்

றோயல் குளுக்கோஸ் தாருங்கள்! என்று கேட்டு வாங்குங்கள்!

Packed By:
Royal Industries, Colombo.
☎ 0112334603




ஏக விநியோகத்தர்கள்:

சிவா நறுமணப் பூங்கா

288, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
☎: 021 222 2567

சந்திரத்துச் சந்திக்கு அருகில் ⇨


# வடக்கு-கிழக்கு கல்விப் புல பதவி நியமனத்தில் செல்வாக்குப் பிரயோகம் தடுக்கப்பட வேண்டும்

## தமிழர் ஆசிரியர் சங்கம் கோரிக்கை

காரைதீவு,ஜன.28

வடக்கு - கிழக்கு மாகாணத்தின் கல்வித் திணைக்களத்தில் அவ்வப்போது ஏற்படும் உதவிக்கல்விப் பணிப்பாளர், சேவைக்கால ஆசிரிய ஆலோசகர், அதிபர் போன்ற பதவி வெற்றிடங்களை நிரப்பும் போது அரசியல் செல்வாக்குப் பிரயோகிக்கப்படுவதை முற்றாகத் தடைசெய்ய வேண்டும்.

- இவ்வாறு இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் வடக்கு - கிழக்கு மாகாண கல்வி அமைச்சைக் கேட்டுக் கொண்டிருக்கிறது.

சங்கத் தலைவர் எஸ். தண்டாயுதபாணி, செயலாளர் த.மகாசிவம் ஆகியோர் கூட்டாக ஒப்பமிட்டு கல்விச் செயலாளர் ஆர்.தியாகலிங்கத்திற்கு நீண்டதொரு மகஜரை இது தொடர்பாக அனுப்பிவைத்துள்ளனர்.

அம்மகஜரில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:-

"மேற்படி பதவிகளை நிரப்புகின்ற போது ஜனநாயகத் தன்மையும், சிறந்த தன்மையும் பேணப்படுவதோடு ஆசிரியர்களின் கல்வித் தகைமை, சேவைமூப்பு என்பன கட்டாயம் கவனத்திற் கொள்ளப்படவேண்டும்.

வெற்றிடம் ஏற்படும் பட்சத்தில் அனைவரும் அறியக்கூடியவாறு விளம்பரப்படுத்தல் அவசியம், பின்பு விண்ணப்பம் கோரி பரீட்சை/நேர்முகப் பரீட்சையினூடாக உரியவர்கள் தெரிவு செய்யப்படவேண்டும்.

இவைகள் சுற்றுநிருபத்திற்கு மாத்திரம் பொருந்தக்கூடாது மாறாக நடைமுறைக்கும் பொருந்தவேண்டும். நிரந்தர அதிபர் தேவைப்படுமிடத்து அதிபர் சேவையைச் சேர்ந்தோரிடமிருந்து தெரிவு செய்ய வேண்டும். அநாவசியமான அரசியல்தலையீடோ, பழிவாங்கும் எண்ணமோ இத்தெரிவில் இருத்தல் கூடாது. கொழும்பிலிருந்து செல்வாக்குச் செலுத்துவோரிடம் கல்வியமைச்சு பகிரங்கமாகக் கூறவேண்டும். வடக்கு - கிழக்கை விட்டு ஓடிப் போனவர்களுக்கு கல்வியில் ஏன் மூக்கை நுழைக்க வேண்டும்?

வலிகாமத்திலுள்ள ஒரு பாடசாலையில் அதிபர் வெற்றிடம் ஏற்பட்ட போது உரியநேர்முகப் பரீட்சை வேண்டுமென்று தாமதப்படுத்தப்பட்டு குறைந்த சேவை மூப்புடைய ஒருவருக்கு அப்பதவி வழங்கப்பட்டுள்ளது. அங்கு சேவை மூப்புக்கூடிய தகுதியுடையவர் புறந்தள்ளப்பட்டுள்ளார். இங்கு கொழும்புச் செல்வாக்குப் பிரயோகிக்கப் பட்டுள்ளதாக எமக்குத் தகவல்கள் கிடைத்துள்ளன.

திருமலையில் ஒரு பாடசாலைக்கு அதிபர் வெற்றிடம் ஏற்பட்டவேளை சிரேஷ்ட ஆசிரியர்களை ஒதுக்கி விட்டு தேசிய பாடசாலையிலிருந்து மத்திய அரசின் அனுமதியின்றி ஓர் ஆசிரியரை அங்கு அதிபராக நியமித்துள்ளனர். இதேபோன்று, அம்பாறைப் பகுதியில் எதுவித விளம்பரப்படுத்தலுமின்றி ஆசிரிய ஆலோசகர் பதவியொன்றுக்கு சேவை மூப்புகுறைந்த ஆசிரியர் ஒருவர் நியமிக்கப்பட்டுள்ளார். இதில் பணம் சம்பந்தப்பட்டதாகவும் கூறப்படுகிறது. இப்படி இன்னும் பல தகவல்கள் உள்ளன.

எனவே, உரியவர்களிடம் உரிய பதவி இருக்கும் பட்சத்தில்தான் கல்வி வளர்ச்சியை எதிர்பார்க்க முடியும்.

- இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது.


## போட்டிப்பரீட்சைக்கான வகுப்புகள்

ஆசிரியர்களைத் தேர்ந்தெடுப்பதற்கான போட்டிப் பரீட்சைக்குத் தயார்ப்படுத்தும் வகுப்புக்கள் ஆரம்பமாகவுள்ளன.

★ வியாழக்கிழமைகளில் காலை 9.00மணிக்கு
- வாரவகுப்புகள் -

★ சனிக்கிழமைகளில் மாலை 3.00மணிக்கு
- வார இறுதி வகுப்புக்கள் -

ஆசிரியர்: A.குமாரவேல்

JAFFNA COLLEGE
UNDER GRADUATE DEPT.,
464, HOSPITAL ROAD,
JAFFNA.

(C/32912)(35-13-17-31)


# தேர்தல் குறித்து அடுத்தவாரத்தில் முடிவு: கூட்டமைப்பு நிர்வாகிகளும் தெரிவாவர்

## சு.க. பொதுச்செயலாளர் மைத்திரிபால சிறிசேன தகவல்

கொழும்பு,ஜன.28

மாகாண சபைத்தேர்தல்களையா அல்லது பொதுத்தேர்தலையா முதலில் நடத்துவது என்பது குறித்து அடுத்தவாரத்தில் தீர்மானிப்போம் என்று சுதந்திரக்கட்சியின் பொதுச்செயலாளர் மைத்திரிபால சிறிசேன கூறியிருக்கிறார்.

முதலில் மாகாணசபைத் தேர்தலா அல்லது பொதுத்தேர்தலா என்பது குறித்து ஆராய்ந்து வருகின்றோம். மாகாணசபைத் தேர்தல்கள் குறித்தே இப்பொழுது கவனம் செலுத்துகிறோம் எனவும் அவர் தெரிவித்திருக்கிறார்.

சிங்களத் தினசரி ஒன்றுக்கு வழங்கிய செவ்வியில் இவற்றைத் தெரிவித்திருக்கும் அவர் மேலும் கூறியிருப்பதாவது:-

மாகாணசபைத் தேர்தல்களை நடத்துவதாயின் அனைத்தையும் ஒன்றாகவே நடத்துவோம். நாம் நிச்சயமற்ற தீர்மானங்களை மேற்கொள்ள மாட்டோம். தோல்வியை எதிர்பார்த்து அல்லது ஐ.தே.க. மீண்டும் அரசமைக்க வழியேற்படும் பின்னணியை உருவாக்கும் ஒரு தேர்தலை நடத்த நாம் தயாராக இல்லை. வெற்றியேயன்றி தோல்வியடையும் ஒரு தேர்தலில் ஒரு போதும் ஈடுபடமாட்டோம்.

புதிய கூட்டமைப்புக்கு ஒத்துழைப்பு வழங்கி, அதில் இணைவதாக மக்கள் ஐக்கிய முன்னணி, தேசிய ஐக்கிய முன்னணி, மக்கள் கட்சி, தேசவிமுக்தி கட்சி ஆகியவை தெரிவித்துள்ளன. சமசமாஜக் கட்சி, கம்யூனிஸ் கட்சி ஆகியவை கால அவகாசம் கோரியிருக்கின்றன.

கூட்டமைப்பில் சேர்ந்துகொள்ள அவ்விருகட்சிகளும் புதிய யோசனைகளையும், திருத்தங்களையும் முன்வைத்துள்ளன. அடுத்த 10 தினங்களுக்குள் கூட்டமைப்பு குறித்து இறுதி முடிவைத் தெரிவிப்பதாக இருகட்சிகளும் தெரிவிக்கின்றன.

சுதந்திரக் கட்சி அதிகாரத்தைப் பகிர்ந்துகொள்ளும் நிர்வாகத்தைப் பரவலாக்க ஜே.வி.பி தயார். இருப்பினும், நாட்டில் உருவாகும் அரசியல் சூழ்நிலைக்கு ஏற்ப மக்களின் எண்ணப்படி யுத்தத்துக்குத் தீர்வு வழங்க நாம் இணங்கியிருக்கிறோம்.

- இவ்வாறு அவர் கூறியிருக்கிறார்.

(ஐ)

## 31ஆம் நாள் கண்ணீர் அஞ்சலி

கைத்தொழில் அபிவிருத்திச் சபையின் வடமாகாணக் காரியாலயத்தில் தொழில் முயற்சி மேம்பாட்டு முகாமையாளராகக் கடமையாற்றும் மாலியவத்தை, சங்கானையைச் சேர்ந்த

திரு.சிவகெங்காதரன் அவர்களின் அன்புத் தந்தையார்

### நடேசர் சிவசோதி

அவர்கள் 29.12.2003இல் இயற்கையெய்திய 31ஆம் நாளான இன்று (28.01.2004) புதன்கிழமை அன்னாரின் ஆத்மசாந்திக்காய் பிரார்த்திக்கின்றோம். அவரது பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

வடமாகாண அலுவலகம்.
கைத்தொழில் அபிவிருத்திச்சபை. (27665)(35-17-13-31) - அலுவலர்கள்.

## 31ஆம் நாள் கண்ணீர் அஞ்சலி

CEFE யாழ். நிறுவனத்தின் ஊக்குநர்களில் ஒருவரான மாலியவத்தை, சங்கானையைச் சேர்ந்த

திரு.சிவகெங்காதரன் அவர்களின் அன்புத் தந்தையார்

### நடேசர் சிவசோதி

அவர்கள் இயற்கையெய்திய 31ஆம் நாளான இன்று (28.01.2004) புதன்கிழமை அன்னாரின் ,பிரிவால் வாடும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு,

அவரின் ஆத்ம சாந்திக்காக எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கிறோம்.

CEFE அலகு, யாழ்ப்பாணம். (27666)(35-13-17-31) – ஊக்குநர் குழாம்.


## பெண்களின் சுயதொழில் வாய்ப்புக்கான பயிற்சி

பெண்களின் முன்னேற்றத்துக்குரிய சுயதொழில் வாய்ப்புக்கான பயிற்சி பெற விரும்புவோர் தமது விண்ணப்பங்களை கீழ்க் குறிப்பிட்ட முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

விண்ணப்பத்திகதி : 28-01-2004 முதல் 10-02-2004 வரை.

இப்பயிற்சிக் காலம் 3 மாதம்

பாதிக்கப்பட்ட பெண்களுக்கும் முன்னுரிமை வழங்கப்படும்.

பயிற்சி விவரம் :

★ தையல் ★ மனையியல் ★ தலையலங்காரம்
★ பூவேலைப்பாடுகள் ★ ஐசிங்
★ வூல் நூல் வேலைப்பாடுகள்

யாழ். சமூக செயற்பாட்டு மையம்,
159, 4ஆம் குறுக்குத்தெரு,
யாழ்ப்பாணம்.

(C/32944)(35-13-17-31)


## 4ஆவது ஆண்டு நினைவுப்பூக்கள்

மலர்வு
08 - 01 - 1982



உதிர்வு
28 - 01 - 2000

2ஆம் லெப்டினன்ட் சுகந்தி
செல்வி நடராஜா சுபாஜினி

பெண்ணுக்குள் பெருமையுடன் திகழ்ந்தவளே!
சுகந்தி! நீ மரணிக்கவில்லை!
மண்ணுக்குள் புதைக்கப்பட்டு விதைக்கப்பட்டவளே!
நீ மெழுகுவர்த்தி போல் தியாக வேள்வியிலே
விண்ணுக்குள் ஆகுதியானவளே!
நான்கு ஆண்டுகள் நகர்ந்து மறைந்தாலும்
கண்ணுக்குள் உனது முகம்
கவினுறவே என்றும் தெரியுதம்மா!

மொரட்டுவ,
கொழும்பு. (26948)(35-17-13-31)


பெற்றோர், சகோதரர்,
உறவினர்கள், நண்பர்கள்.

## நெஞ்சைவிட்டகலாத நினைவு அஞ்சலி

6ஆம் ஆண்டு | 3ஆம் ஆண்டு



அமரர்
சின்னப்பு வல்லிபுரம்
தோற்றம் : 05.02.1912
மறைவு : 03.02.1998



அமரர்
வல்லிபுரம் மாணிக்கலிங்கம்
தோற்றம் : 09.06.1948
மறைவு : 28.01.2001

எங்கள் வாழ்விற்கும் வளர்ச்சிக்கும் ஆதாரமாய் இருந்த எந்தையரே!
என்றும் எங்கள் நீங்கா நினைவுகளில்....

566/3, கே.கே.எஸ். வீதி,
யாழ்ப்பாணம். (27692)(3113-17)

- குடும்பத்தினர்.

# ஸ்ரீல.சு.க.-ஜே.வி.பி.கூட்டு ஒப்பந்தம் குறித்து ஐ.தே.க.ஊடகப் பேச்சாளர் கேள்விக்கணை

கொழும்பு,ஜன.28

ஸ்ரீல.சு.கட்சியும் ஜே.வி.பியும் செய்துள்ள கூட்டு குறித்து ஐக்கிய தேசிய கட்சியின் ஊடகப் பேச்சாளர் கேள்விக்கணைகளைத் தொடுத்திருக்கிறார்.

இந்தக் கூட்டுக் குறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கை வருமாறு:-

ஜே.வி.பிக்கும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்கும் இடையே செய்துகொள்ளப்பட்ட ஒப்பந்தத்தை அடுத்து விளக்கம் அளிக்கப்படவேண்டிய பல கேள்விகள் பதில் கிடைக்காத நிலையில் உள்ளன. எந்தவொரு சிரத்தையுள்ள அரசியல் கட்சியும் தனது கொள்கைகள் செயற்படுத்தப்படக்கூடியனவையா? என்பதைத் தெரிந்து கொள்வதற்கு அவை தீவிர சோதனைக்குள்ளாக்கப்பட வேண்டும் என்பதை எதிர்பார்த்தே இருக்கும். எனினும், இந்த ஒப்பந்தம் குறிப்பிடும்படியான விடயங்கள் எதனையும் கொண்டிருக்கவில்லை. எனவே, இந்த ஒப்பந்தத்தை தீவிரமாக கருத்திற்கொள்ள வேண்டுமா? என்பதை தெரிந்துகொள்ள சில முக்கிய கேள்விகளுக்கு பதில் தேவையாக உள்ளது.

## இடைக்கால நிர்வாகம்

தமிழீழ விடுதலைப் புலிகளின் இடைக்கால தன்னாட்சி அதிகார சபை ஆலோசனைகளை மக்கள் விடுதலை முன்னணி மற்றும் ஸ்ரீலங்கா சுதந்திரக கட்சிகளின் கூட்டு நிராகரிப்பதாகக் கூறப்படுகிறது. எனினும், கடந்த ஜனவரி 13ஆம் திகதி செவ்வாய்க்கிழமை ஐ.ரி.என். தொலைக்காட்சிச் சேவையில் உரையாற்றிய ஜனாதிபதி, இடைக்கால நிர்வாகம் ஏற்றுக்கொள்ளக்கூடிய ஒன்று என்பதைத் தான் ஏற்றுக்கொள்வதாகக் குறிப்பிட்டிருந்தார். அவ்வாறானால் நாம் யாரை நம்புவது? அத்துடன், அதிகாரத்தில் இருப்பது யார்? குறிப்பிட்டுச் சொல்வதானால் மக்கள் விடுதலை முன்னணி மற்றும் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி அரசாங்கமொன்று அமைந்தால் எவரது எண்ணங்கள் பிரதிபலிக்கப் போகின்றன? அதேவேளை, சமஷ்டித் தீர்வு தேவையென்றும் ஜனாதிபதி கூறியுள்ளார். எனினும், புரிந்துணர்வு ஒப்பந்தம் இதனை முற்றாக நிராகரிக்கிறது. சமாதான நடைமுறை இந்தத் தீர்மானங்களிலேயே தங்கியுள்ளது. எனவே, இந்தக் கேள்விகளுக்குப் பதில் தெரிந்து கொள்ள வேண்டியது முக்கியமாகும்.

## அதிகாரப் பகிர்வு

அடுத்ததாக மாகாணங்களுக்கு அதிகாரத்தைப் பகிர்வதில் மக்கள் விடுதலை முன்னணி மற்றும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்கூட்டு எத்தகைய கொள்கைகளைக் கொண்டிருக்கிறது என்பது தெளிவுபடுத்தப்படவேண்டும். அவ்வாறான பகிர்வை அவர்கள் ஆதரிக்கின்றனரா? அல்லது எதிர்க்கின்றனரா? சமாதான நடைமுறை இந்தத் தீர்மானங்களில் தங்கியுள்ளதால் இந்தக் கேள்விகளுக்குப் பதில் தெரிந்து கொள்வது முக்கியமாகும்.

தமிழீழ விடுதலைப் புலிகளின் ஆலோசனைகள் பேச்சுக்கு அடிப்படையாக உள்ளன என்று ஜனாதிபதி அண்மையில் கூறியிருந்தார். கேள்வி என்னவென்றால், மக்கள் விடுதலை முன்னணி, ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சிக் கூட்டு ஜனாதிபதியின் கூற்றுக்கு இணங்குகின்றதா? என்பதாகும். இதுவரையிலான அவர்களது அறிக்கைகள் பல பொருள்படும் வகையில் உள்ளன. புலிகளுடன் பேச்சு நடத்தப்போவதாக ஒரு புறம் கூறிவரும் அவர்கள், மறுபுறம் எந்த வகையில் பேச்சுகளை ஆரம்பிக்கப் போகிறார்கள் என்பதைக் கூறவில்லை. சமாதான நடைமுறை இந்தத் தீர்மானங்களில் தங்கியுள்ளதால் இந்த கேள்விகளுக்குப் பதில் தெரிந்து கொள்வது அவசியமாகும்.

## தவறு என்ன?

சமாதான நடைமுறை தொடர்பான ஐக்கிய தேசியக்கட்சியின் நிலைப்பாட்டை மக்கள் விடுதலை முன்னணி மற்றும் ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் புரிந்துணர்வு ஒப்பந்தம் கடுமையாக விமர்சித்துள்ளது. யுத்தநிறுத்த ஒப்பந்தத்தின் மூலம் கடந்த இரண்டு வருடங்களாக நாட்டில் அமைதியை ஏற்படுத்த முடிந்திருப்பதுடன், 4 ஆயிரம் உயிர்களையும் பாதுகாக்க முடிந்துள்ளது என்பதை ஒரு கணத்துக்கு மறந்துவிடுவோம். இந்நிலையில், மக்கள் விடுதலை முன்னணி மற்றும் ஸ்ரீ லங்கா சுதந்திரக்கட்சி புரிந்துணர்வு ஒப்பந்தம் ஐக்கிய தேசியக் கட்சியின் நிலைப்பாட்டை கடுமையாக விமர்சித்துள்ளதால், பிரதமரும் அரசாங்கமும் இழைத்த தவறு என்ன என்பதை பொது மக்கள் தெரிந்து கொள்ளவேண்டும். நாட்டில் பிரிவினை என்ற பேச்சுக்கே இடமில்லை என்று பிரதமர் தொடர்ந்து கூறிவருகிறார். அத்துடன், இனப்பிரச்சினையின் இறுதித்தீர்வு சர்வஜன வாக்கெடுப்புக்கு உள்ளாக்கப்படவிருக்கிறது. எனவே, ஈழம் உருவாக அரசாங்கம் வழிவகுக்கின்றது என்று மக்கள் விடுதலை முன்னணியும் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியும் எவ்வாறு கூறமுடியும்? சமாதான நடைமுறை இந்தத் தீர்மானங்களில் தங்கியுள்ளதால் இந்தக் கேள்விகளுக்கும் பதில் தெரிந்து கொள்வது முக்கியமானதாகும்.

## யுத்த நிறுத்த ஒப்பந்தம்

அடுத்ததாக, யுத்தநிறுத்த ஒப்பந்தம் பற்றி கேள்வி எழுகிறது. யுத்த நிறுத்த ஒப்பந்தம் தமக்கு மகிழ்ச்சி தரவில்லை என்று ஜனாதிபதி கூறுவதாக மக்கள் விடுதலை முன்னணி மற்றும் ஸ்ரீ லங்கா சுதந்திரக்கட்சியின் புரிந்துணர்வு ஒப்பந்தம் குறிப்பிடுகிறது. முழுமையான நிறைவேற்று அதிகாரத்தைத் தன்வசம் வைத்துள்ள ஜனாதிபதிக்கு யுத்தநிறுத்த ஒப்பந்தம் மகிழ்ச்சி தராதிருந்தால் அந்த நடைமுறையை முன்னரே நிறுத்தாமல் இரண்டு வருடகாலம் ஏன் வீணே காலத்தைக் கடத்தினார். அத்துடன் மூன்று அமைச்சுக்களைக் கைப்பற்றிய பின்னரும் கூட பிரதமர் சமாதான நடைமுறையை தொடரவேண்டும் என்று ஜனாதிபதி ஏன் கூறவேண்டும்?

மக்கள் விடுதலை முன்னணி மற்றும் ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் புரிந்துணர்வு ஒப்பந்தம் விடுதலைப் புலிகள் மீது மூன்று குற்றச்சாட்டுக்களை விடுத்துள்ளது. விடுதலைப் புலிகள் தமது கடற் புலிகளுக்காக கடல் வலயம் ஒன்றை கேட்டிருக்கிறார்கள் என்றும் அதி உயர் பாதுகாப்பு வலயத்தில் பாதுகாப்புப் படையினர் பெரும் நெருக்குதலுக்கு உள்ளாக்கப்பட்டிருக்கிறார்கள் என்றும் தமிழ்ச் சிறுவர்கள ஆயிரக்கணக்கில் புலிகளால் கடத்தப்பட்டிருக்கிறார்கள் என்றும் குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

அத்துடன், திருகோணமலையைச் சுற்றி புலிகளின் முகாம்கள் அமைந்துள்ளன என்றும் குற்றம் சாட்டப்பட்டிருக்கிறது.

## குறைகூறுவது ஏன்?

இந்தக் குற்றச்சாட்டுகள் சரியோ, பிழையோ தெரியாது. ஆனால், ஒரு முக்கியமான கேள்வி, பதில் அளிக்கப்படாமல் உள்ளது. ஆயுதப் படையினர் மற்றும் பொலீஸ் சேவையின் கட்டுப்பாடு, கிட்டத்தட்ட கடந்த மூன்று மாத காலமாக ஜனாதிபதியிடமே இருந்து வருகிறது. அந்தக்காலகட்டத்தில் இதனை சரிசெய்ய ஜனாதிபதி என்ன நடவடிக்கைகளை மேற்கொண்டார்? ஜனாதிபதிக்கும் மக்கள் விடுதலை முன்னணி மற்றும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி ஆகியவற்றுக்கும் இந்த விடயங்களில் அக்கறை இருக்குமானால் அவற்றை மாற்றக்கூடிய கருவிகள் கைகளிலேயே இருக்கும்போது ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கத்தை ஏன் குறைகூற வேண்டும்?

ஒப்பந்தத்தின் முதல் நான்கு பக்கங்களில் இடம் பெற்றுள்ள ஐக்கிய தேசியக் கட்சி மீதான வரைவிலக்கணம், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்கு ஏற்புடையதல்ல. லங்கா சுதந்திரக் கட்சியைப் பற்றி நல்லதாக எதுவும் கூற ஐக்கிய தேசிய கட்சிக்கு சிறிதளவு விடயங்களே உள்ளன. எனினும், ஒருகாலத்தில் அது பெருமைக்குரியதுடன், சிறந்த சேவையிலும் ஈடுபட்ட கட்சி. இன்று அதன் தனித்துவம் இழக்கப்பட்டுள்ளதுடன் மார்க்சிச மக்கள் விடுதலை முன்னணி போன்ற சிறிய கட்சியின் ஆதிக்கத்துக்குள்ளாகும் நிலையை அது ஏற்படுத்திக் கொண்டுள்ளது. அதிகாரத்தைக் கைப்பற்றும் ஆசைக்கு இவை அனைத்தும் அவசியம்தானா? என்று அதில் பல கேள்விகள் எழுப்பப்பட்டுள்ளன.

# அரசியல் பலாத்காரங்களை ஒழிப்பது சிறந்த ஜனநாயகம்

## 'பவ்ரல்' அமைப்பு வலியுறுத்து

அரசியல் கட்சிகள் ஜனநாயகத்தைக் கௌரவிப்பதாக இருந்தால் தமது கட்சி ஆதரவாளர்கள் அரசியல் பலாத்காரத்தில் ஈடுபடாதவாறு பார்த்துக்கொள்ளவேண்டும்.

- இவ்வாறு சுதந்திரமானதும் நீதியானதுமான தேர்தல்களுக்கான மக்கள் செயற்பாடு (பவரல்) அமைப்பு கோரியுள்ளது.

அமைப்பின் தலைவர் கிங்ஸ்லி ரொட்ரிகோ வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது:-

கடந்த பல வாரங்களாக நாட்டின பல பாகங்களிலும் அரசியல் சம்பந்தப்பட்ட வன்செயல்கள் அதிகரித்திருப்பதாக எமது அங்கத்தவர்கள் பல பாகங்களிலும் இருந்து எமக்கு அறிவிக்கிறார்கள். மாகாணசபைத் தேர்தல்கள் நெருங்கும்போது இவ்வன்செயல்கள் மேலும் அதிகரித்துப் பரவ இடமுண்டு என்பதை நாம் கவலையுடன அவதானிக்கின்றோம்.

ஜனாதிபதிக்கும் பிரதமருக்கும் இடையில் அதிகாரத்தைப் பகிர்ந்து கொள்வதில் உள்ள முரண்பாட்டை பேச்சுவார்த்தை மூலம் தீர்த்துக் கொள்ள முடியாததால் இலங்கை மேலும் ஒரு தேர்தல் மோதலை நோக்கிப் போவதாக எம்மால் உணர்ந்து அறியக்கூடியதாக இருக்கிறது. எனவே, அரசியல்கட்சிகளின் அங்கத்தவர்கள் மீது எதிர்மறையான அழுத்தங்களை இந்நிலைமை உருவாக்குகிறது.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்கும் மக்கள் விடுதலை முன்னணிக்கும் இடையில் உருவாகிய கூட்டணி ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்ட தினத்திற்கு முன்தினம் திடீரென அதிகரித்த வன்செயல்களைப் பற்றி நாம் விசேடமாகக் கவலையுடன் சிரத்தை கொண்டுள்ளோம். புத்தளத்தில் சிலர் கொல்லப்பட்டதாக அறிந்தோம் மேலும், நிக்கரவெட்டிய, மாவத்தகம, பானதுறை, வலப்பனை, கதிர்காமம், அம்பிலிப்பிட்டிய போன்ற இடங்களில் பாரதூரமான பலாத்கார சம்பவங்களும் ஏற்பட்டன என்று அறிகிறோம்.

புதிய கூட்டணிகளில் சேர்ந்து கொள்ளலும், அவற்றை விட்டு விலகுதலும் ஜனநாயக அரசியல் முறைமையின் இயல்பாகும். இதுபோன்ற கூட்டணிகள் உருவாகுவதையோ அல்லது உருவாகுவதைத் தவிர்க்கவோ ஜனநாயகத்தை மதிக்கும் சகல அரசியல் கட்சிகளும் தமது அங்கத்தவர்கள் பலாத்கார செயல்களில் ஈடுபடுவதை அனுமதிக்கக்கூடாது. விசேஷமாக ஐக்கிய தேசியக் கட்சி, மக்கள் கூட்டணி, மக்கள் விடுதலை முன்னணியின் அரசியல் தலைவர்கள் தமது உறவினர்கள், ஆதரவாளர்கள் மீது ஒழுக்கத்தைப் பேணவேண்டும்.

- இவ்வாறு 'பவ்ரல்' அமைப்பு கோரியிருக்கிறது.

# வளர்ப்புக் கோழிகளுக்கு காப்புறுதி வழங்கத்திட்டம்

கமத்தொழில் காப்புறுதிச்சபை பல்வேறு காப்புறுதித்திட்டங்களை நடைமுறைப்படுத்தி வருகின்றது. தற்போது, அத்திட்டத்தின் கீழ் இறைச்சிக் கோழிகளுக்கும் கோழி வளர்ப்போர் காப்புறுதி செய்துகொள்ளமுடியும்.

- இவ்வாறு கமத்தொழில் காப்புறுதிச் சபையின் மட்டக்களப்பு மாவட்ட உதவிப் பணிப்பாளர் எம்.விநாயகமூர்த்தி தெரிவித்தார்.

பல்வேறு திட்டங்களின் அடிப்படையில் கோழிகளை வளர்ப்போர் ஒரு குஞ்சுக்கு ஒரு ரூபா பத்துசத வீதமும், தனிப்பட்ட ரீதியில் வளர்ப்போர் ஒரு குஞ்சுக்கு ஒரு ரூபா இருபத்தைந்து சதவீதமும் கட்டுப்பணம் செலுத்த வேண்டும்.

இத்திட்டத்தில் 100 கோழிகளுக்கு மேல் வளர்க்கும் விவசாயிகள் மாத்திரமே சேர்த்துக்கொள்ளப்படுவர். இத்திட்டத்தில் சேரவிரும்புவோர், மாவட்ட கமத்தொழில் காப்புறுதிச்சபை அலுவலகத்திடமோ அல்லது பிரதேச மிருக வைத்திய அதிகாரியிடமோ மேலதிக விவரங்களைப் பெற்றுகொள்ளலாம்.

விபத்துமரணம், இடி, வெள்ளம், தீ, சூறாவளி, வறட்சி போன்றபாதிப்புகளுக்கும் காப்புறுதிப் பணம் வழங்கப்படும்.

வளர்ப்பின்போது காப்புறுதி செய்யப்பட்ட கோழிக்குஞ்சுகள் இறந்தால் உச்சக்கட்டமாக ஒரு கோழிக்கு 120 ரூபா காப்புறுதிப் பணமாக வழங்கப்படுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

# ஏனைய மதத்தை மதிக்கத் தெரியாதவர்கள் அரசியலில் நிச்சயம் வெற்றிபெற முடியாது!

## அமைச்சர் எம்.எச்.முஹமட் தெரிவிப்பு

கொழும்பு,ஜன.28

ஏனைய மதத்தவரை மதிக்காத எவரும் அரசியலில் வெற்றிபெற முடியாது.

- இவ்வாறு கூறினார் மேற்குப் பிராந்திய அபிவிருத்தி அமைச்சர் எம்.எச்.முஹமட்.

மருதானையில் கடந்த வெள்ளியன்று முஸ்லிம் சமய கலாசார நிலையத்தை திறந்துவைத்த பின்னர், நடந்த பொதுக்கூட்டத்தில் கலந்து கொண்டு உரைநிகழ்த்தியபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர், அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில் கூறியதாவது:-

"நான் எனது மதத்தை மதிக்கின்றேன் குர் ஆன் சொன்ன வழியைப் பின்பற்றுகின்றேன். அதைப் போல் ஏனைய மதங்களையும் மதிக்கின்றேன். சிங்கள பௌத்த குருமார்கள் எத்தனையோ பேர் என்னைக் கௌரவிக்கின்றனர். அதைப்போல் அவர்களை நான் கௌரவிக்கின்றேன்."

- இப்படி அவர் கூறினார்.

அவரைத் தொடர்ந்து இந்துகலாசார விவகார அமைச்சர் தி.மகேஸ்வரன் உரையாற்றுகையில் கூறியதாவது:-

இலங்கையில் உள்ள ஒவ்வொரு மதப்பிரிவுக்கும் தனித்தனியே அமைசசுக்களை அமைத்து மதங்களுக்கு மதிப்பளித்திருக்கிறார் பிரதமர்.

யாழ். மாவட்டத்தில் சுமார் 30 இற்கும் மேற்பட்ட பள்ளிவாசல்கள் சேதமுற்றுள்ளன. அவற்றைப் புனரமைக்குமாறு கடந்தவருடம் யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்த அமைச்சர் அஸ்வரிடம் வலியுறுத்தியுள்ளேன்.

மதத்தால் வேறுபட்டிருந்தாலும் நாம் மொழியால் ஒற்றுமைப்பட்டுள்ளோம். நாம் நீண்ட உறவுகளைக் கொண்டவர்கள். இஸ்லாத்துடன் தமிழ் எப்படிப் பின்னிப்பிணைந்துள்ளதோ, அதுபோன்று நாமும் எமது உறவுகளைத் தொடர்ந்து பேணிப் பாதுகாக்க வேண்டும்.

- இப்படி அவர் கூறினார்.

இந்த நிகழ்வில் பிரதம உரையாற்றிய ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும், துறைமுக, கப்பற்றுறை அபிவிருத்தி அமைச்சருமான ரவூப் ஹக்கீம் கூறியதாவது:-

முஸ்லிம் மக்களின் தனித்துவத்தைப் பேணிப் பாதுகாப்பதற்கான இந்த நிலத்தை எமக்கு வழங்கிய ஜனாதிபதிக்கும், அதை நிர்மாணிப்பதற்கு ஒத்துழைப்பு நல்கிய பிரதமருக்கும் நான் நன்றி கூறுகிறேன். புதிதாக நிர்மாணிக்கப்படவிருக்கும் ஒன்பது மாடிக் கட்டடம் தொடர்பான வரைவுகளுக்கு மட்டும் 60 லட்சம் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது. விரைவில் அதற்கான நிர்மாணப் பணிகள் ஆரம்பமாகும்.

அடுத்த மீலாத் விழா நிகழ்வுகளை மூதூர் மற்றும் கிண்ணியா பகுதிகளில் நடத்துவதற்குத் திட்டமிட்டுள்ளோம்.

அங்குள்ள தமிழ் பாடசாலையொன்றுக்குக் கேட்போர் கூடமொன்று அமைத்துக் கொடுக்கவும் நாம் முடிவு செய்துள்ளோம். அது போல், பௌத்த விகாரைக்கும் நாம் உதவிசெய்யவுள்ளோம்.

வருடாவருடம் மீலாத் விழாவின் போது மாற்று மதங்களுக்கு எம்மால இயன்ற உதவிகளை நாம் செய்து வருகிறோம்.

- இப்படி அவர் தெரிவித்தார்.

இந்த நிகழ்வில் பௌத்த கலாசார அமைச்சர் லொக்கு பண்டார, நாடாளுமன்ற விவகார அமைச்சர் ஏ.எச்.எம். அஸ்வர், முன்னாள் அமைசசரான லக்ஷ்மன் ஜயக்கொடி, நாடாளுமன்ற உறுப்பினர் ஏ.எச்.எம். பௌஸி, கிறிஸ்தவ விவகார அமைச்சர் ஜோன் அமரதுங்க, நாடாளுமன்ற உறுப்பினர் மையோன் முஸ்தபா, பிரதியமைச்சர் பஷீர் சேகுதாவுத், மேல்மாகாண ஆளுநர் அலவி மௌலானா, அமைச்சர் நூர்தீன் மசூர் மற்றும் வெளிநாட்டு ராஜதந்திரிகள் உட்பட முக்கிய பிரமுகர்கள் பலரும் கலந்துகொண்டனர். (ம)



யாழ். பண்ணையில் சுகாதாரத் திணைக்களத்துக்கான பிராந்திய மருந்துக் களஞ்சியம் அமைப்பதற்கான அடிக்கல்லை யாழ். சுகாதார சேவைகள் மாகாணப் பிரதிப் பணிப்பாளர் கே.ரி.சிவபாதம் நடுவதைப் படத்தில் காணலாம். (ம-6)

# சின்னஞ்சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

இரும்புக் கதிரைகள் 75 விற்பனைக்குண்டு. தொடர்பு: சி.தேவராசா, நுணாவில் கிழக்கு, கல்வயல், சாவகச்சேரி. (27637)

Sony (பாவித்த) T.V.களும், Pana sonic (Japan) டெக்கும் விற்பனைக்குண்டு. 2197-22000/=, 2167-20,000/= (ஸ்ரீரியோ), 2060-10,000= SD200 டெக் 6000/=. தொடர்பு: R.மகேஸ்வரன், கே.கே.எஸ். வீதி (சிறுவர் பூங்கா முன்பாக), மல்லாகம். (27520)

நல்ல நிலையிலுள்ள ஒறிஜினல் இத்தாலியன் வெஸ்பா செல்வ் ஸ்ராட மொடல் மற்றும் பஜாஜ் கிளேசிக் SL மொடல் ஸகூட்டர்கள் விற்பனைகது உண்டு. தொடர்பு: இல.06 பஸ்நிலையம், யாழ்ப்பாணம். (27712)

பாம் கன்று (Farm Trees) பஷன புறுட் கன்றுகள் (Passion fruit trees) விற்பனைக்குண்டு. தொடர்பு: 85, செம்மணி வீதி (கல்விக் கந்தோா அருகில்), நல்லூர். (27674)

RX 100 Yamaha மோட்டார் சைக்கிள் விற்பனைக்குண்டு. தொடர்பு: டாக்டர் A.செல்வரட்ணம், 91, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம் (எந்த நேரமும் பார்வையிடலாம்). (27688)

## கோழிக்குஞ்சு விநியோகம்

தரமான Prima, Broiler குஞ்சுகள விலை 44/=, அதிவிசேட Prima பேட்டுக்குஞ்சுகள் விலை 65/=, 02.02.2004 பிற்பகல் விநியோகிக்கப்படும். முன்கூட்டியே பதிவுசெய்யவும். எம்மிடமும் பருத்தித்துறைக்கிளையிலும் பெற்றுக கொள்ளும் Prima குஞ்சுகளுக்கு Prima கம்பனியால் உத்தரவாதம் வழங்கப்படும் (நல்லூர் வீடியோ சென்ரா வளவு),19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச்சந்தையடி, நல்லூர்.(27472)

தடுப்பூசி போடப்பட்ட தரமான சேவல் குஞ்சுகள் விலைரூபா15/= 02-02-2004 பிற்பகல் விநியோகிக்கப் படும். முன்கூட்டியே பதிவுசெய்யவும். தொடர்பு: க.தனபாலசிங்கம் (நல்லூர் வீடியோ சென்ரர் வளவு), 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர். (27662)

பகிரா இன புறொயிலர் குஞ்சுகள 28-01-2004 இன்று மாலை விநியோகிக கப்படும். பதிவு செய்தோரும் தேவைப் படுவோரும் உடன் தொடர்புகொள்ளவும். றாஜீவ், ஆனைக்கோட்டை சந்தி. T.P.: 3529, ரீபன் ஜோர்ச் சண்முகம் லேன், சங்கத்தானை. (27614)

## இறைச்சிக்கோழி விற்பனை

Prima, Broiler இறைச்சிக்கோழிகள் சுகாதாரமுறைப்படி உடன்சுத்தம் செய்து தினமும் பெற்றுக்கொள்ளலாம (Electronic நிறுவை), (நல்லூர் வீடியோ சென்ரர் வளவு), 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச சந்தையடி, நல்லூர். (27471)

## தவறிவிட்டது

யாழ்ப்பாணம், நல்லூர், 130, இராசாவின்தோட்டம் வீதியைச் சேர்ந்த செ.நடேசபிள்ளை அவர்களுடைய சாரதி அனுமதிப்பத்திரம், மூக்குக் கண்ணாடி மற்றும் முக்கிய ஆவணங்கள் என்பன யாழ். சத்திரத்துச்சந்தியடியில் பையுடன் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் மேலுள்ள முகவரியில் ஒப்படைத்துதவவும். சன்மானம் வழங்கப்படும். (27669)

பலாலி வீதி, திருநெல்வேலி (சச்சி கராஜ்)யைச் சேர்ந்த எஸ். ஆனந்தராஜா என்பவருடைய வங்கிப புத்தகம், குடும்ப அட்டை, நிவாரண அட்டை, உதவுதொகை (25,000) கொடுப்பனவுப் படிவம் என்பன 25.01.2004 ஞாயிறன்று திருநெல்வேலிச் சந்திக்கும் பாம் ஸ்கூல் சந்திக்கும் இடையில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் மேற்காணும் முகவரியில் ஒப்படைத்துதவவும்.(27704)

செல்வி துளசி சுந்தரலிங்கம் என்பவரின் தேசிய அடையாள அட்டையும் (837662729V), விசேட அடையாள அட்டையும் யாழ் போதனா வைத்தியசாலையில் காணாமற் போய்விட்டன. இதனைக் கண்டெடுத்தவர்கள் 150, நெடுங்குளம் வீதி, அரியாலை, யாழ்ப்பாணம் எனும் விலாசத்தில் ஒப்படைக்கவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். தொலைபேசித் தொடர்புகளுக்கு:- 222-2894. (27680)

## ஈட்டுக்கு அல்லது விற்பனைக்கு

ஆவரங்கால் சந்தைக்கு அருகில பழைய விதானையார் வளவில் 7½ பரப்புக் காணியும் வீடும், கிணறும் வான்பயிர்களும் உடனடியாக ஈட்டுக்கு அல்லது விற்பனைக்குண்டு. வேண்டுவோர் நேரடியாக தயவுசெய்து கீழ்க் காணும் முகவரியில் என்னுடன் தொடர்புகொள்ளவும். சே.ஐயாத்துரை பழைய விதானையார் வளவு, சந்தை வீதி, ஆவரங்கால். (27683)

## காணி விற்பனைக்கு

பெரியவிளான், பண்டத்தரிப்பு வீதியில் பெரியவிளான் பிள்ளையார் கோயிலுக்கு அண்மித்துள்ள வீடும் கிணற்றுடன் அமைந்துள்ள 75 பரப்புக் காணியும் விற்பனைக்குண்டு. தொடர்புகளுக்கு: அ.யோ.சவுந்திர நாயகம் (சந்திரன்), St.Henry's கல்லூரி வீதி, இளவாலை. தொ.பேசி இலக்கம் 021-222-7313. (27703)

## திருமண சேவை

1975, விசாகம் 2, செவ்வாய் 7, அழகிய U.K. Accountancy மாணவிக்கு படித்த மணமகன் P.R. உடன் தேவை. சீதனம் உண்டு. உள்ளூர், வெளியூர் மணமக்களுக்கு உடன் தொடர்பு: இலகு திருமண சேவை, துரைவிமலா நாச்சிமார் கோயிலடி, யாழ்ப்பாணம். (27706)

## மீள்பரீட்சை

கடந்த ஆண்டு நடைபெற்ற முறைசாராக் கல்வி இறுதிப் பரீட்சை யில் சித்தியடையாத மாணவர்களுக் கான மீள்பரீட்சை அடுத்த மாதம் 2ஆம் திகதி காலை 9 மணிக்கு யாழ் மத்திய கல்லூரியில் நடைபெறவுள் ளது என யாழ்.வலயக் கல்விப் பணிப்பாளா ப. விக்னேஸ்வரன் தெரி வித்துள்ளார்.

இப் பரீட்சைக்குத் தோற்றவுள்ள 85 மாணவர்களுக்குமான அனுமதி அட்டைகள்கள் வலயக் கல்விப் பணிமனையின் முறைசாராக் கல்விப் பிரிவிற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. (ம-6)

## 31ஆம் நாள் நினைவு அலைகள்

மண்ணில் 1921 - 04 - 24



விண்ணில் 2003 - 12 - 28

### திருமதி சுந்தரேஸ்வரி சபாரத்தினம்

உதிரத்தில் எம்மைச் சுமந்து உதிரத்தினால் உணவூட்டு
தரத்தில் எமை உயர்த்தி அகரத்தால் உணர்வூட்டி
கரங்களால் அரவணைத்து காலமெல்லாம் காத்ததாயே!
ஈரவிழிகளில் உமைத்தாங்கி எப்போ காண்போமென
ஏங்கியே நின்று ஆத்மசாந்தி பெறுகவென வேண்டுகின்றோம்.

இன்று 2004-01-28 புதன்கிழமை தெல்லிப்பழையில் உள்ள அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் கேட்டுக்கொள்கிறோம்,

பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.
திரு. திருமதி ச. சதானந்தன்,
Dr.திரு. திருமதி ச. சண்முகானந்தன்,
லயன் திரு. திருமதி க. நாகராஜா,
திரு. திருமதி சு. இராஜேந்திரம்,
திரு. திருமதி கு. விகவலிங்கம்.

8ஆம் கட்டை,
தெல்லிப்பழை.

(27708)(35-18-21-19)

## ஆவரங்கால் மேற்கில் திருட்டு!

புத்தூர், ஆவரங்கால் மேற்குப் பகுதியிலுள்ள கிராமசேவையாளர் க.இராசதுரையின் வீட்டில் திங்கட்கிழமை அதிகாலை 20பவுண் நகை மற்றும் 25ஆயிரம் ரூபா ரொக்கப் பணம் என்பன திருடப்பட்டுள்ளன.

இதேவேளை - அதற்கு அருகிலுள்ள தவக்குமார் என்பவரது வீட்டில 11பவுண் தாலிக்கொடி மற்றும் 6ஆயிரம் ரூபா ரொக்கப்பணம் என்பன களவாடப்பட்டுள்ளன.

இந்தத் திருட்டுச் சம்பவங்கள் தொடர்பாக அச்சுவேலி பொலீஸ் அதிகாரி அன்ரன் மத்தியூ தலைமையிலான குழு விசாரணைகளை மேற்கொண்டுள்ளது. (ம-11)


**SMAK** - Natural First Drink

இயற்கைச் சுவை நிறைந்த பழரசம்
இப்பொழுது யாழ்ப்பாண மாவட்டத்தில்
விற்பனைக்கு உள்ளது.

கீழ்விவரம் தரங்கள்
Mixed Fruit, Mango, Passion Fruit, Pineapple, Woodapple
Coffee flavoured Milkdrinks, Chocolate flavoured Milk drinks.

**SMAK brand table water bottles available in convenient sizes.**
**500ml, 750ml, 1000ml, 1500ml, & 5000ml**

Trade inquiries welcome Jaffna peninsula Agent

யாழ் மாவட்ட முகவர்:
WRIGHT BROTHERS - NALLIAH- T.P. 021-2263694

யாழ் நகர முகவர்:
மல்லிகா மிக்சர் விலாஸ் (சிவராஜா) T.P 021222 4590104
149, மின்சார நிலைய வீதி, பஸ்தரிப்பு நிலையம், யாழ்ப்பாணம்.

வடமராட்சி முகவர்:
சாராஸ். சாந்தலிங்கம் T.P 021-2264038.

யாழ் முகவர்கள்:
1) லிங்கம் கூல் பார், யாழ்ப்பாணம். T.P 021 2222534.
2) M.P.C.S. Canteen- Jaffna T.P.: 021 2222587.
3) பாரதத் உணவகம், ஆரியகுளம.
4) Jaya பார்மசி~நல்லூர். T.P.: 021 2225483.
5) சசிரேகா, கல்வியங்காடு.
6) Master, நீர்வேலி. T.P.:021 2225769.
7) லிங்கம் உணவகம், சாவகச்சேரி.
8) சாந்தன் உணவகம், கொடிகாமம்.
9) கஜீ கூல்பார்~கொடிகாமம்.
10) ஹம்சிகா ~அச்சுவேலி
11) விஜயன் கூல் ஸ்பொட், V.V.T.
12) மோகன் சபாபதிப்பிள்ளை ~ ஊறணி.
13) சிறி கிருஷ்ணா ~ நெல்லியடி. T.P.: 021 2263282.
14) Lovely Cool Bar ~ நெல்லியடி.
15) வேலவன் ~ பருத்தித்துறை.
16) நிதர்சன் ~ பருத்தித்துறை.
17) பிள்ளையார் கூல் பார், உடுப்பிட்டி.
18) மயூராபாலன் ~துன்னாலை.

மங்களகரமான திருமண வைபவங்கள்.
பூப்புனித நீராட்டுவிழா மற்றும்
பிறந்தநாள் விழாக்கள் போன்ற விசேட நிகழ்வுகளின்போது விருந்தினர்களை மனங்குளிர வைப்பதற்கு இயற்கைச் சுவைநிறைந்த தரமான பானங்கள் தொடர்புகளுக்கான விவரம் மேல்தரப்பட்டுள்ளது.

சுவைநிறைந்த பழரசம்! இன்றே சுவைத்து மகிழுங்கள்!

(27690)(2119-18)



# Direct Start 2004

O/L பரீட்சை எழுதிய மாணவர்களுக்கு ASIAN வழங்கும்
COMPUTER பாடநெறிகளும் சிறப்புக் கட்டணச் சலுகையும்
புதிய பிரிவுகள் ஒவ்வொரு வாரமும் ஆரம்பம்

- Diploma in MS Office (DMO)
- Dip. in Computer Studies (DMO)
- Dip. in Computer Programming (DCP)
- Dip. in Desktop Publishing (DTP)
- Diploma in Web Design (DWD)

விசேட கட்டணச் சலுகை 3,750/- ஜனவரி 31 மட்டுமே!



Registered with Ministry of Tertiary & Vocational Education

- இலவச பாடநூல்கள்
- தவணைமுறை கட்டணங்கள்
- 100% செயல்முறை பயிற்சி

## ASIAN COMPUTER SYSTEMS

2 G, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். ✆021-222 5677

PRASHANNAA COMPUTER STUDY CENTRE
108, K.K.S. வீதி, சுன்னாகம். ✆ 071-2501589

கொடிகாமம் வீதி, நெல்லியடி. (கரவெட்டி தபாலகத்துக்கு முன்பாக) ✆ 0777-878160

தற்பொழுது புதிய பிரிவுகளுக்கான பதிவுகள் ஏற்றுக்கொள்ளப்படுகின்றன



# இளவரசி டயானா கொலை மர்மம் துலங்குமா?

**இளவரசி டயானா இறந்து இன்று ஆண்டுகள் பல கடந்த நிலையில் புதிய தகவல்கள் கிடைத்துள்ளன. அவற்றைத் தொடர்ந்து புதிதாக மரண விசாரணை ஆரம்பமாகவுள்ளது. இந்த விசாரணைகளின்போது டயானாவின் மரணம் தொடர்பான பல்வேறு வினாக்களுக்கு விடை கிடைக்கும் என எதிர் பார்க்கப்படுகிறது என்கிறார் லண்டனில் வசிக்கும் சட்டத்தரணி அனுரா ஹாகொட.**

இளவரசி டயானா இறந்து ஆறு ஆண்டுகளுக்கு மேலாகின்றன. அவரது மரணம் பற்றிப் பலவிதமாக விமர்சிக்கப்பட்டபோதும், கடந்த ஜனவரி 7ஆம் திகதி பிரிட்டனே ஆட்டம் காணும் அளவுக்கு, வெளியாகியுள்ளது போன்ற தகவல் ஒன்று இது வரையில் வெளிவரவில்லை.

டயானா வாகன விபத்தில் இறந்தாரா? அல்லது கொல்லப்பட்டாரா?

இதற்கு விடைகாணுமுகமாக அண்மையில் மரணவிசாரணையொன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது. டயானாவின் காதலரான டோடியின் தந்தையால் முடுக்கிவிடப்பட்டுள்ள தொடர் முயற்சிகளின் பிரதிபலனே இம்மரணவிசாரணை எனக் கூறலாம். இவ்விசாரணை மூலம் இளவரசர் சார்ள்ஸுக்கும், அரச குடும்பத்துக்கும் ஏற்படவிருக்கும் பிரச்சினைகளும், சிக்கல்களும் எவ்விதமாக இருக்குமென எவராலுமே கூறமுடியாது. ஆயினும், டயானாவின் மரணம் தொடர்பாக இளவரசர் சார்ள்ஸை நோக்கி நீட்டப்பட்டுள்ள விரல் நல்ல விளைவுகளுக்கு அடையாளமல்ல.

இளவரசர் சார்ள்ஸ் தன்னைக் கொன்று அந்தக் கொலையை வாகன விபத்தாகச் சித்திரிக்க முயற்சிப்பதாக, இளவரசி டயானா அவரது மரணத்துக்குப் 10 மாதங்களுக்கு முன்னரே கடிதமொன்றில் குறிப்பிட்டுள்ளார். அவரது தனிப்பட்ட பாதுகாவலரான போலபரேலிடம் வழங்கப்பட்ட அக்கடிதம் இம்மரண விசாரணையில் மிக முக்கிய சாட்சியமாக இடம்பெறக் கூடும்.

முடிக்குரிய மரண விசாரணை அதிகாரியான மயில்கல் பர்ப்ஸ் விசாரிக்கவுள்ள இம்மரண விசாரணைக்கு இங்கிலாந்தின் பொலீஸ் ஆணையாளரான ஆர்.ஜோன் ஸ்ரீவன்ஸ் தனது தனிப்பட்ட ஒத்துழைப்பை வழங்க முன்வந்துள்ளார். அவ்விசாரணையில் அவர்களால் அவிழ்க்கப்படவேண்டிய முக்கிய முடிச்சுக்கள் நிறையவே உள்ளன.

✪ விபத்து நடந்த அன்று, டயானாவும் டோடியும் பயணித்த வாகனத்தைச் செலுத்திய ஹென்றி போல், இங்கிலாந்து இரகசியப் புலனாய்வுத் துறையான எம்-16 இன் உறுப்பினரா? அவரது 13 வங்கிக் கணக்குகளிலும் லட்சம் பவுண்களுக்கும் அதிகமான தொகை எவ்வாறு வைப்பிலிடப்பட்டுள்ளது?

✪ அதிக போதை காரணமாக, விடுமுறை பெற்றிருந்த போல் அவ்வாகனத்தைச் செலுத்துவதற்கு யாரால ஈடுபடுத்தப்பட்டார்?

✪ போல் அவ்வாகனத்தை டோடியின் இல்லம் இருந்த திசைக்கு எதிர்த் திசையில் செலுத்திச் சென்றது ஏன்? அவ்வாகனம் திரும்பவேண்டிய கிளைப் பாதையின் மத்தியில் தடையாக மோட்டார் சைக்கிள் நிறுத்தி வைக்கப்பட்டது ஏன்? இவ்விபத்து நடந்த அல்மா சுரங்கப் பாதையினுள் வாகனத்தைச் செலுத்தப் போலுக்கு இருந்த தேவை ஏன்?

✪ டயானா சென்ற வாகனத்தை உரசிச் சென்ற பியட் கார் அவ்வாறு உரசியது தேவை கருதித்தானா? அன்று அந்த பியட்டைச் செலுத்திய பத்திரிகைப் புகைப்படப் பிடிப்பாளரான மேஸ் அன்டர்சன், இரு ஆண்டுகளின் பின்னர் அவ்வாகனத்தின் உள்ளேயே எரிந்து சாம்பலான சம்பவம் எவ்வாறு நிகழ்ந்தது.?

✪ வாகன விபத்து நடத்தப்படுவதற்கு முன்னர் அச்சுரங்கப் பாதையினுள் கண்களைக் குருடாக்கும் அளவுக்கு மின் ஒளி பாய்ச்சப்பட்டிந்தது எவ்வாறு?

✪ அந்தச் சுரங்கப் பாதையினுள் பொருத்தப்பட்டிருந்த வீடியோ கமராக்கள் சுவர்களைநோக்கி திருப்பப்பட்டிருப்பது ஏன்? விபத்து நடந்த சில மணி நேரங்களுக்குள்ளாகவே, அச்சுரங்கப் பாதை நீர் பாய்ச்சிக் கழுவப்பட்டது ஏன்?

✪ விபத்து நடந்தவுடனேயே அங்கு வந்த மூன்று அம்புலன்ஸ் வண்டிகளும், இளவரசி டயானாவை மூன்று மைல் தூரத்தில் இருந்த மருத்துவமனைக்குக் கொண்டு செல்ல ஏன் ஒன்றரை மணிநேரம் பிடித்தன. அவ்வாகனங்கள் இரு மருத்துவமனையைக் கடந்து வேறு மருத்துவமனைக்குச் சென்றது ஏன்?

✪ டயானா கர்ப்பமுற்று இருந்தாரா?

பிரான்ஸின் சட்டங்களின்படி மரண விசாரணைகள் இடம்பெறுவதற்கு முன்னர் உடலை "எம்பாம்" செய்வது சட்டத்துக்கு முரணானது என்று தெரிந்தபோதும் டயானாவின் சடலம் அவசர அவசரமாக "எம்பாம்"செய்யப்பட்டுள்ளது சாட்சியங்களை அழிப்பதற்கா?

✪ வாகனச் சாரதியின் மாதிரி இரத்தம் மாற்றப்பட்டுள்ளதா? அவ்வாறின்றேல், அந்த மாதிரி இரத்தத்தில் அதிகளவில் காபன் மொனொக்ஸைட காணப்படுகிறதே? அதற்கு என்ன விளக்கம் தரமுடியும்?

✪ விபத்து நடந்த கணத்தில், எடுக்கப்பட்ட புகைப்படங்கள், பாதுகாத்து வைக்கப்பட்டிருந்த, பாரீஸ் மற்றும் லண்டனிலுள்ள புகைப்பட நிறுவனங்களுக்குள் புகுந்து அவற்றை அபகரித்துச் சென்ற ஆயுததாரிகள் யார்?

இவ்வாறான மர்மங்கள் நிறைந்த தொடர் வினாக்களுக்கு முடிக்குரிய மரண விசாரணை அதிகாரி விடைகாணவேண்டியுள்ளது. இந்த விசாரணைகளின்போது விசாரணைக்கு அழைக்கப்படவுள்ளவர்களில் சார்ளஸ், வில்லியம் மற்றும் ஹரி ஆகிய இளவரசர்களும் அடங்கியுள்ளனர் என்று தெரிகிறது.

இளவரசர் சார்ள்ஸிடம் எவ்வாறு விசாரணைகளை மேற்கொள்வது என்பது தொடர்பாக உரிய விதிமுறைகள் இல்லாதிருப்பினும் அவரை நேருக்குநேர் விசாரிப்பதா? அல்லது வினாக்கொத்தொன்றை தயாரித்து அவரது சட்டத்தரணிகளுக்கு அனுப்புவதா? இந்த இரண்டில் ஒன்று இடம்பெறக் கூடும்.

இதற்கிடையில், இறக்கும்போது, இளவரசி டயானா கர்ப்பிணியாக இருக்கவில்லை என பிரான்ஸில் இடம்பெற்ற மரணவிசாரணையின்போது சாட்சியமளித்துள்ள மருத்துவர் உறுதிப்படுத்தியுள்ளார்.

டயானாவின் காதலர்களில் ஒருவரான பாகிஸ்தானியரான மருத்துவர் ஹசன்ந் கான் மூலமாகப் பெண் குழந்தையைப் பெறுவதற்கு அவர் மிகுந்த பிரயாசை எடுத்துள்ளாரென டயானாவின் நெருங்கிய தோழியான, ஷோஸ்ட்ஸ்மித் அண்மையில் தெரிவித்திருந்தார். அப்பெண் குழந்தைக்கு "அபிகேல்" என்று பெயர் சூட்டுவதும் அவரது எதிர்பார்ப்பாக இருந்துள்ளதாகத் தெரியவந்துள்ளது. இளவரசி டயானா, தமது அக்காதலரை தனது மாளிகைக்கு அழைத்து வரும்போது, பெரும்பாலும், தமது வாகனத்தின் பின்புறமுள்ள பொருள்கள் வைக்கப்பயன்படுத்தும் இடமான "டிக்கியில்" இருத்தி கம்பளத்தால் மறைத்தே அழைத்து வந்துள்ளார். "போல் பர்ல்" செலுத்தும் வாகனத்திலும் டயானா மாறுவேடமணிந்து செலுத்தி வந்துள்ள வாகனத்திலும் இவ்வாறே அவர் அழைத்துவரப்பட்டுள்ளார்.

இம்மரணவிசாரணை ஆரம்பமானதைத் தொடர்ந்து, இன்னும் என்னென்னவோ நடக்கவுள்ளன. இம்மரணம் கொலைதானென நிருபணமாகும் பட்சத்தில் தொடர்புடையவர்களை நீதியின் முன் நிறுத்த எப்போதாவது முடியுமா? என்பதே நீதிமன்றம் எதிர் நோக்கும் பெரும் வினாவாகும். ✳



காதலன் ஹசன்ந் கான்

- சரா -

---

# வறுமையின் காரணமாக யாழ்.குடாநாட்டு மாணவர்களின் கல்வி பாதிக்கப்படக்கூடாது

## லங்கா நிப்பொன் கலாசார நிலையச் செயலாளர் நாயகம் தெரிவிப்பு

யாழ்ப்பாணம்,ஜன.28

வறுமையின் காரணமாக மாணவர்களின் கல்வி பாதிக்கப்படக் கூடாது என்பதற்காகவே ஜப்பான் நாடு குடாநாட்டு மாணவர்களுக்கு உதவிகளை வழங்க முன்வந்துள்ளது.

- இவ்வாறு லங்கா நிப்பொன் கலாசார நிலையத்தின் செயலாளர் நாயகம் வண.மேகாகற்றரி சந்திர ஸ்ரீ தேரர் தெரிவித்தார்.

கடந்த 20 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை யாழ். மத்திய கல்லூரியில் குடாநாட்டிலுள்ள ஐந்து கல்வி வலயங்களைச் சேர்ந்த 77 மாணவர்களுக்கு ஜப்பானின் நிதியுதவியுடன் லங்கா நிப்பொன் நிறுவனம் பெறுமதியான கல்வி உபகரணங்களை வழங்கியது.

இந்த நிகழ்வு யாழ். மத்திய கல்லூரி அதிபர் க.இராசதுரை தலைமையில் நடைபெற்றது.

சந்திர ஸ்ரீதேரர் மேலும் தெரிவிக்கையில் கூறியதாவது:-

குடாநாட்டில் மாணவர்கள் பலர் பாடசாலைகளுக்குச் செல்வதில்லை. வறுமையின் காரணமாக அவர்களுடைய கல்வி பாதிக்கப்படக்கூடாது.

இதன் காரணத்தாலேயே ஜப்பான் அரசு மாணவர்களுக்கு உதவிகளை வழங்க முன்வந்தது.

அத்தோடு, யுத்தத்தால் பாதிக்கப்பட்ட மாணவர்களுக்குத் தேவையான உதவிகளையும் வழங்கவுள்ளோம்.

இதேவேளை -

வெளிநாட்டு உதவிகள் இலங்கையைப் பொறுத்தவரை அத்தியாவசியமானதொன்று. வெளிநாடுகளில் இருந்து கிடைக்கப்பெறும் நிதி உண்மையில் பாதிக்கப்பட்ட மக்களைச் சென்றடைகின்றதா என்று நாங்கள் பார்க்கவேண்டும்.

எதிர்காலத்தில் வடக்கு - கிழக்குப் பகுதிகளுக்கு ஜப்பானியக் குடும்பம் புலமைப் பரிசில் வழங்கும் திட்டங்களையும் நடைமுறைப்படுத்த உள்ளது.

நாம் மாணவர்களின் தேவைக்கு ஏற்ப உதவிகளை மேற்கொண்டு வருகின்றோம்.

ஜப்பான் குடும்பம் வழங்கும் நிதி குடாநாட்டு மாணவர்களுக்கு முழுமையாகச் சென்றடைய வேண்டும். எம்மால் முடிந்த அளவே நாம் உதவிகளைச் செய்வோம். அதைவிட்டு அரசியல் கட்சிகள் போல அதைச் செய்துதருவோம், இதைச் செய்து தருவோம் என்று நாம் சொல்ல விரும்பவில்லை.

இலங்கையைப்போலவே ஜப்பான் நாடும் பின்தங்கிய நிலையில் இருந்துதான் வளர்ச்சியடைந்தது.

ஒரு பொருளை ஆக்குவது மிகவும் கடினம். அதனை அழித்து விடுவது சுலபம். எனவே, மாணவர்கள் இதனைக் கவனத்தில் எடுத்துச் செயற்படவேண்டும்.

நிகழ்வில் கலந்துகொண்ட தமிழீழக் கல்வி மேம்பாட்டுப் பேரவைத் தலைவர் வணபிதா ஜோசப் பிரான்ஸிஸ் தனது உரையில் தெரிவித்ததாவது:-

இலங்கையின் ஒரு பகுதிதான் வன்னிப் பிரதேசமும். அங்கும் இப்படியான திட்டங்களைச் செய்ய ஜப்பான் குடும்பம் முன்வரவேண்டும். அப்படி முன்வருமானால் அதனை நாம் வரவேற்போம் - என்றார்.

இந்த நிகழ்வில் யாழ். வலயக் கல்விப் பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன், யாழ். மாவட்டக் கல்விக் கழகப்பொறுப்பாளர் கை.கவியன்பன், யாழ். நாக விகாரை பௌத்த குரு, யாழ். பொலீஸ் நிலையப் பொலீஸ் அத்தியட்சகர் செனவிரட்ண, யாழ். நகர இராணுவ பொறுப்பதிகாரி கேணல் விக்கிரமரட்ண ஆகியோரும் கலந்து கொண்டனர்.

நிகழ்வின் இறுதியில் மாணவர்களின் கலை நிகழ்ச்சிகளும் இடம் பெற்றன. (ம-7-8)

---

# சமாதானப் பேச்சில் முஸ்லிம்களுக்கு உரிய இடம் தரப்பட வேண்டும்

## ஆனந்தசங்கரி ஜனாதிபதிக்குக் கடிதம்

கொழும்பு,ஜன.28

சமாதானப் பேச்சுக்கள் மீண்டும் ஆரம்பிக்கப்படும் போது அதில் முஸ்லிம் தரப்புக்கு உரிய இடம் வழங்கப்பட வேண்டும்.

- இவ்வாறு யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் வீ.ஆனந்தசங்கரி ஜனாதிபதி சந்திரிகாவுக்கு அனுப்பியுள்ள கடிதத்தில் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

சமாதான முயற்சிகளை ஜனாதிபதி பொறுப்பேற்று செயற்படுத்தவேண்டும் எனவும் -

நோர்வேத் தரப்பினை மத்தியஸ்தப் பணிகளில் மீண்டும் ஈடுபடுமாறு ஜனாதிபதி அழைப்பு விடுக்கவேண்டும் எனவும் - அதில் குறிப்பிடப்பட்டிருக்கிறது.

இந்தப் பேச்சுக்களில் முஸ்லிம் சகோதரர்களுக்கு உரிய இடம் வழங்கப்படவேண்டும் என்பதை அக்கடிதத்தில் ஆனந்தசங்கரி வலியுறுத்தியுள்ளார்.

(ம-4)

---

# ஆவணங்களை அனுப்பாததால் ஒய்வூதியக் கணிப்பீட்டில் சிரமம்

யாழ்ப்பாணம்,ஜன.28

ஓய்வூதியம் பெறுவதற்கு விண்ணப்பிப்பவர்கள் தமது விண்ணப்பங்களுடன் கேட்கப்பட்ட தேவையான ஆவணங்களை இணைத்து அனுப்பாததால ஓய்வூதியக் கணிப்பீட்டில் பெரும் சிரமங்கள் மற்றும் காலதாமதங்கள் ஏற்படுவதாகச் சுட்டிக் காட்டப்பட்டிருக்கிறது.

இந்த விடயம் தொடர்பாக மாகாணப் பொது நிர்வாக அமைச்சின் உதவிச் செயலாளர் எம்.ஞானநேசன் சகல திணைக்களத் தலைவர்களுக்கும் சுற்றறிக்கை ஒன்றினை அனுப்பி வைத்துள்ளார்.

ஓய்வூதிய விண்ணப்பப் படிவங்களைப் பூரணமாக நிரப்புவதுடன் உரிய ஆவணங்களையும் அதனுடன் இணைத்து அனுப்பி வைக்குமாறும் -

இதன்மூலம் ஓய்வூதியக் கணிப்பீட்டில் ஏற்படும் காலதாமதங்கள், வீண் சிரமங்களைத் தவிர்த்துக் கொள்ள முடியும் எனவும் - அந்த சுற்றறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (-4)

---

# ஈழத்துப் பூதந்தேவனார் தமிழ்ப் புலவர் கழகத் தொடக்க விழா

யாழ்ப்பாணம்,ஜன.28

ஈழத்துப் பூதந்தேவனார் தமிழ்ப் புலவர் கழகத்தின் தொடக்கவிழா எதிர் வரும் முதலாம் திகதி ஞாயிற்றுக் கிழமை காலை 9.30 மணிக்கு வண்ணார்பண்ணை நாவலர் தமிழ் மகா வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.

இலங்கை சைவப் புலவர் சங்கத் தலைவர் மு.திருஞானசம்பந்த பிள்ளை தலைமையில் நடைபெறவுள்ள இவ்விழாவில் ஆசியுரையை நல்லை ஆதீன முதல்வரும், தொடக்கவுரையை யாழ். மேலதிக அரச அதிபர் திருமதி ப.திலகநாயகம் போலும் வழங்குவார்கள்.

வாழ்த்துரைகளை யாழ். வலயக் கல்விப் பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன், யாழ். பல்கலைக்கழக ஊடக வளங்கள் பயிற்சித்துறையின் ஆலோசகர் எஸ்.அருட்செல்வன் ஆகியோர் வழங்குவார்கள்.

(6-4)

உ

## யா/பிளவத்தை அ.மி.த.க. பாடசாலை
### சித்தன்கேணி

## பாராட்டி வாழ்த்துகின்றோம்

கடந்த பல வருடங்களாக சுமார் 10இற்குக் குறைவான மாணவர்கள் இருந்தபோதும் தொடர்ச்சியாக "புலமைப்பரிசில் பரீட்சைக்குத் தோற்றியவர்களில் 33% இற்கு மேல" சித்தியெய்தியும் 2001 ஆம் ஆண்டு சங்கானைக் கோட்டத்தில்

*முதலாமிடம் பெற்றும்*

2003 ஆம் ஆண்டு கோட்டமட்ட மாதிரிப் பரீட்சையில் முதலாமிடம் தங்கப்பதக்கம் பெற்றும் மகத்தான சாதனை நிகழ்த்தியுள்ளார்கள்.

2003 ஆம் ஆண்டு பரீட்சையில்

- ❋ சிவபாலன் கோபிநாத் - 147
- ❋ சரவணபவன் சுஜிதன் - 140

ஆகியோர் சித்தியெய்தியுள்ளார்கள்.

சித்தியெய்திய மாணவர்களையும், அவர்களை வழிநடத்திய அதிபர், ஆசிரியர்களையும் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

- பாடசாலை அபிவிருத்திச் சங்கம்.

(C-32958(32-14)

'பொருளோ பொருள்'
நாடகத்தின் விளக்கமும் விமர்சனமும்

பேராசிரியர் க.கணபதிப்பிள்ளையின்
மாணவனான
கலாபூஷணம்
அராலியூர் ந.சுந்தரம்பிள்ளை
எழுதியது. ரூபா 25.00

(27707) (32-14-18-24)

## 31ஆம் நாள் விழிநீர் சிந்தும் நினைவும்
ஆத்மசாந்திப் பிரார்த்தனை அழைப்பும்

| எங்களுக்காக | விழிநீர்சொரிய |
|---|---|
| 18 - 01 - 1934 | 29 - 12 - 2003 |



### அமரர் வேலுப்பிள்ளை கந்தசாமி

(ஓய்வுபெற்ற சாரதி இ.போ.ச)

பாசப் பெருமலையாய் -நின்றுயர்ந்து
எம்மை அரவணைத்து -வளர்த்தெடுத்த
ஆளுமையின் சிகரமே....!

ஐயா, உங்கள் ஆத்மா சிவன் சேவடிகளில் சாந்தியும், சமாதானமும் பெறப் பிரார்த்திக்கின்றோம்.

இன்று 28-01-2004 புதன்கிழமை நடைபெறும் எங்கள் அருமைத் தந்தையாரின் ஆத்மசாந்திக் கிரியைகளிலும், மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு எங்கள் நேசத்துக்குரிய உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் வாஞ்சையுடன் அழைக்கின்றோம்.

*சாத்தியத்தோட்டம்*
*கரவெட்டி மத்தி.* (27709)(35-14) -குடும்பத்தினர்.

## தொழில்நுட்பக் கல்லூரிக்கு இயந்திர உபகரணங்கள்

யாழ்ப்பாணம்,ஜன.28

யாழ். தொழில்நுட்பக் கல்லூரியின் தன்னியக்க இயந்திரவியல் பயிற்சி நெறிக்குத் தேவையான ரூபா 12 லட்சம் பெறுமதியான தொழில்நுட்ப இயந்திரங்கள் கொழும்பிலிருந்து எடுத்து வரப்பட்டுள்ளன.

மூன்றாம் நிலைக் கல்வி அமைச்சிற்கு விடுத்த வேண்டுகோளின்படியே இந்த இயந்திரங்கள் வழங்கப்பட்டுள்ளதாக தொழில்நுட்பக் கல்லூரியின் பிராந்திய இயக்குநரும் அதிபருமான என்.யோகராஜா தெரிவித்தார்.

மூன்றாம்நிலைக் கல்வி அமைச்சிடம் இருந்து இலத்திரனியல் பயிற்சி நெறிக்கான உபகரணத் தொகுதியினைப் பெற்றுக்கொள்வதற்காக அதிபர் கொழும்பு செல்வார். (ம-6)

## பிரிவுபசார விழா

யாழ்ப்பாணம்,ஜன.28

மாகியப்பிட்டி கிராம அபிவிருத்திச் சங்கம் கிராம அலுவலர் இருவருக்கு விழா எடுக்கவுள்ளது.

எதிர்வரும் முதலாம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு சண்டிலிப்பாய் வடக்கு தமிழ்க்கலவன் பாடசாலையில் இந்த விழா நடைபெறும.

மாகியப்பிட்டி கிராம அலுவலராகக் கடமையாற்றி இடம்மாற்றம் பெற்றுச்செல்லும் ச.ஸ்ரீஸ்கந்தராசாவுக்கு பிரிவுபசார விழாவும் -

அதே இடத்திற்கு நியமனம் செய்யப்பட்டுள்ள திருமதி எஸ்.சிவகுமாருக்கு வரவேற்புபசாரமும் நடத்தப்படவுள்ளது.

மாகியப்பிட்டி கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவர் ஐ.மார்க்கண்டன் இந்த நிகழ்வுகளுக்குத் தலைமை வகிப்பார். (எ-185)

## பிள்ளையார் ஆலயம் புனரமைக்கப்படவில்லை

தென்மராட்சி,ஜன.28

மட்டுவில் தெற்கு வளர்மதி வீதியில் சேதமடைந்த பிள்ளையார் ஆலயம் திருத்தப்படாத நிலையில் உள்ளதாக அப்பகுதி மக்கள் தெரிவித்தனர்.

யுத்தத்தின்போது இவ்வாலயத்தின் கட்டடம் முற்றாகச் சேதமடைந்து இன்னமும் திருத்தப்படாததால் பிள்ளையார் விக்கிரகம் வெய்யில், மழையில் காய்வதாகவும் தெரிவித்தனர்.

ஆலய பரிபாலகர் தற்போது வன்னியில் இருப்பதால் ஆலயத்தைப் புனரமைக்க முடியவில்லையெனவும் கவலையுடன் மக்கள் தெரிவித்தனர். (ம-117)

## ஆள்களற்ற வீட்டில் பட்டப்பகலில் திருட்டு!

அரியாலை,ஜன.28

ஆள்கள் இல்லாத சமயம்பார்த்து பகல்வேளை வீடொன்றினுள் புகுந்த திருடர்கள் அங்கிருந்த மோட்டார் சைக்கிள், கையடக்கத் தொலைபேசி, வீடியோசாதனம், நகைகள், ஒரு தொகைப்பணம் ஆகியவற்றை அபகரித்துச் சென்றனர். சுண்டுக்குளி, பாண்டியன்தாழ்வுப் பகுதியிலுள்ள இந்த வீட்டிலிருந்த அனைவரும் திருமண நிகழ்வொன்றிற்குச் சென்ற சமயமே இந்தத் திருட்டு இடம்பெற்றுள்ளது. (ஒ-17)

"ஓம் விராட் விஸ்வப்பிரம்மனே நம"

## ஓராண்டு நினைவலைகள்

| தோற்றம் | மறைவு |
|---|---|
| 16 . 04 . 1925 | 08 . 02 . 2003 |



### சரவணை சின்னத்துரை (ஆச்சாரியார்)

திதி :- ஸப்தமி - 28.01.2004

ஆனதே ஆண்டொன்று
ஆறவில்லை ஐயா எம்மனது!
நெஞ்சிருக்கும் வரை உங்கள்
நினைவும் நிலைத்திருக்கும!

உங்கள் ஆத்மசாந்திக்காக இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.
ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

*"சந்திரபுரம்"*
*மட்டுவில் வடக்கு,*
*சாவகச்சேரி.*
(27545)(13-14-21)

மனைவி, மக்கள்,
மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

## நெஞ்சினிலே நினைவு முகம்



எங்கள் வங்கிப் பெருந்தகை
திரு.க.பாலசுப்பிரமணியம் அவர்களின் இல்லற ஜோதி

### திருமதி லோகநாயகி பாலசுப்பிரமணியம்

அவர்கள் எம்மை விட்டுப் பிரிந்து சென்றாலும் எம் நெஞ்சினிலே என்றும் நீங்காத நினைவாக வாழ்கின்றார்.

செயலில் மலைமகளாக
செல்வத்தில் திருமகளாக
அறிவில் கலைமகளாக
திகழ்ந்து
பதிபத்தினியாக இல்லறத்திலும்
தனிப்புத்திரனின் பந்தத்திலும்
நம் அனைவரின் பாசத்திலும்
பங்கேற்று

இன்று எல்லோரையும் ஆறாத்துயரில் தவிக்கவிட்டு இறைபாதம் சென்ற எம் அன்புத் தாயே! தங்கள் ஆத்மா சாந்தியடைய எல்லாம்வல்ல ஆண்டவரைப் பிரார்த்திக்கின்றோம்.

*இலங்கை வங்கி,*
*யாழ்ப்பாணம்.*
(27729) (24-14-19)

தகவல்:
திருமதி கி.கா.பாலகுமாரநாதன்.

## நீங்காத நினைவுகளில் ஆண்டுகள் ஐந்து

| அன்னை மடியில் | ஆண்டவன் அடியில் |
|---|---|
| 24 - 11 - 1942 | 06 - 02 - 1999 |



அமரர்

### சிவஸ்ரீ சோமாஸ்கந்தக் குருக்கள் விஜயரட்ணக்குருக்கள்

*(முன்னாள் பிரதம குரு, புற்றளை சித்திவிநாயகர் தேவஸ்தானம்)*

திதி: 28-01-2004


*எங்கள் குடும்பத் தலைவனாய் அன்பின் திருவுருவாய்*
*வாழ்ந்து எங்களுக்கு வாழ்வளித்த வழிகாட்டியே!*
*எங்களுக்காகவே வாழ்ந்து, எங்களுக்காகவே பிரார்த்தித்து*
*எங்கள் நினைவுடனேயே இயற்கை எய்திய*
*நீங்கள் எம்மைவிட்டுப் பிரிந்து ஆண்டுகள் ஐந்து*
*கடந்தாலும் உங்கள் திருவுருவம், பாச நினைவுகள்*
*என்றென்றும் எங்கள் மனதில் நீங்காது நிலைத்து நிற்கும்*
*நீங்கள் காட்டிய பாதையிலேயே நாங்களும் வாழ்ந்து*
*என்றும் உங்கள் இலட்சியத்தைப் பின்பற்றி நிற்போம்.*

(27710) (24-14)

*நீங்காத நினைவுகளுடன்:*
தாய் – சிவபாக்கியம்.
மனைவி – சந்திரகுமாரி.
மக்கள்: கீதா. பத்மபபிதா. ஆனந். பிரியா.
மருமக்கள்: மாதவன். ஸ்ரீராஜ்குமார்.
பேரப்பிள்ளைகள்: கோபிகா. கீர்த்திகா.
சகோதரர்கள். பெறாமக்கள்.

கஜானன் தொலைத்தொடர்பு சேவை,
"கீதா கோட்டம்"
புற்றளைப் பிள்ளையார் கோயிலடி,
புலோலி தெற்கு, புலோலி.
T.P. No.: 021 2263112
E-mail - ananthog @ sltnet.lk

## 45ஆம் நாள் வீட்டுக்கிருத்திய அழைப்பும் நன்றி நவிலலும்



V.H. லேன்,
இருபாலை.

| தோற்றம் | மறைவு |
|---|---|
| 08-12-1940 | 15-12-2003 |

### திருமதி இரத்தினம் தங்கேஸ்வரி

*15–12–2003 அன்று சிவபதமடைந்த எமது அன்புத் தாயாரின் துயரச்செய்திகேட்டு நேரடியாகவந்து அனுதாபந் தெரிவித்தோருக்கும் தபால், தந்திமூலம் துயர் பகிர்ந்தோருக்கும் பத்திரிகையில் கண்ணீர் அஞ்சலி பிரசுரித்த யாழ். கல்வியங்காடு இந்து தமிழ்க் கலவன் பாடசாலை அதிபர், ஆசிரியர்கள் மற்றும் கண்ணீர் அஞ்சலி அச்சிட்டு வெளியிட்ட நண்பர்களுக்கும் உறவினர்களுக்கும் மற்றும் இறுதிக்கிரியையில் கலந்து கொண்ட அனைவருக்கும் எமது நெஞ்சம் நெகிழ்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்வதுடன், நாளை (29. 01. 2004) வியாழக் கிழமை எமது இல்லத்தில் நடைபெறவுள்ள வீட்டுக்கிருத்திய நிகழ்விலும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அனைவரையும் அன்போடு கேட்டுக்கொள்கின்றோம்.*

(27701)(35-14-18-24) ***பிள்ளைகள், மருமக்கள்.***

# வடக்கு - கிழக்கு கலாசார மேம்பாடு; விரிவான திட்டம் விரைவில் தேவை

**வடக்கு - கிழக்கு மாகாணத்தில் கடமையாற்றும் கலாசார அலுவலர்களுக்கான வதிவிட செயலமர்வு கடந்த வாரம் திருகோணமலையில் நடத்தப்பட்டது. இந்தச் செயலமர்வில் "திட்டமிடுதலிலும், செயற்படுத்தலிலும் மாகாணசபை எதிர்கொள்ளும் நெருக்கடிகளும், அவற்றிலிருந்து விடுபட அலுவலர்களின் வகிபாகமும்" என்ற பொருளில் மாகாண திட்டமிடல் பிரதிப்பிரதம செயலாளர் வி.செ.சுவாமிநாதன் நிகழ்த்திய உரை இங்கு பிரசுரமாகிறது.**

திட்டமிடுதலானது பொருத்தமான இலக்குகளைத் தெரிவுசெய்து அந்த இலக்குகளைக் குறித்த காலத்தில் சிக்கனங்களைக் கையாண்டு, வளங்களைப் பொருத்தமான வகையில் இணைத்து நிறைவுறுத்தும் அறிவாற்றலாகும். இந்த நுட்பத்தினைச் சொந்த வாழ்க்கையிலும், அரசியல் பொருளாதார, சமூக, கலாசாரச் செயற்பாடுகளிலும் பிரயோகித்த தனியாரும், பொது நிறுவனங்களும மேம்பாடடைந்த வரலாற்றனுபவத்தின் காரணமாகத் திட்டமிடுதல் பல்வேறு மட்டங்களிலும் கைக்கொள்ளப்படும் அடிப்படை வழிகாட்டற் கோட்பாடாக வளர்ந்து வருகின்றது.

### மாகாண சபையின் இன்றைய நிலை

வடக்கு - கிழக்கு மாகாண சபையானது தங்களது விவகாரங்களைத் தாங்களே நிர்வகிக்க வேண்டும். தமது கடந்தகால அனுபவங்களின் - பாடத்தின் அடிப்படையில் பேண்தகு நிலையிலான சிறந்த ஓர் எதிர்காலத்தினைக் கட்டியெழுப்பவேண்டும் என்ற இடையறா ஆசையினால் உந்தப்பட்ட, பல வடிவிலான போராட்டத்தின் பயனாக எழுந்த ஓர் அமைப்பே வடக்கு - கிழக்கு மாகாணசபையாகும். இந்நிறுவனமானது, அரசமைப்பு முறைமைக்குள் - தேசிய மட்டக் கொள்கை வரம்பிற்குள் - வளங்களைப் பெற்று, வளங்களை வளர்த்து, வளங்களை உபயோகிக்கும் ஒரு நிலையுடையதாக இருக்கவேண்டுமென்பதே கொள்கையளவில் தெரிவிக்கப்பட்ட கருத்தாகும்.

ஒரு நாடு சர்வதேசத்தின் செல்வாக்கிற்குள் எவ்வாறு சிக்குண்டிருக்கின்றதோ, அதனைப்போல வடக்கு - கிழக்கு மாகாணமும், இலங்கையின் வியூகத்திற்குள் கட்டுப்படுத்தப்பட்டுள்ள பிராந்தியம் என்பதனை அனைவரும் அறிவர். கடந்த இரு தசாப்தங்களின் நிகழ்வுகள் காரணமாகப் பார்க்கக் கூடிய வேறுபாடுகளைக் கொண்ட இரு வேறு உலகங்கள் இலங்கைக்குள் இருப்பதனை அனைவரும் புரிந்துகொள்வர்.

1977ஆம் ஆண்டுக்குப் பின்னர் ஏற்பட்ட பல்வேறு அபிவிருத்தி நடவடிக்கைகளில் வடக்கு - கிழக்கு மாகாணம் புறக்கணிக்கப்பட்டது. சுதந்திரத்தின் பின்னர் ஏற்படுத்தப்பட்டு வந்த இருட்டடிப்பில் இது அமாவாசையன்றான அர்த்தஜாமமாகும் தாமும், தமது முயற்சியும் என்றிருந்த வடக்கு - கிழக்கு மாகாண மக்கள் - சுயதங்கியிருத்தலுக்கு எடுத்துக்காட்டான ஒரு சமூகம் தன்னையிழந்து, தன்னாமம் கெட்டது. அது வாழையடி வாழையாகப் பேணி வந்த பல நல்ல நியமங்களின் அடிச்சுவட்டையும் பின்பற்ற முடியாதவாறு அலைக்கழிக்கப்பட்டது. யுத்தம் வடக்கு - கிழக்குச் சமூகத்தை, அதன் ஆன்மாவை பல வீனமானதாக்கிவிட்டது.

இத்தகைய ஒரு தள்ளாடும் நிலைக்கு ஆக்கப்பட்ட சமூகத்தை முற்றாக அழியவிடப் போகிறோமோ அல்லது மீட்டெடுத்து வளர்ந்துவரும் உலக நிலைமைக்கு ஈடாக்கப் போகிறோமோ என்ற இரண்டும் தான் தெரிவுக்குரிய விடயங்களாகவுள்ளன.

அரசியற் சுதந்திரமென்பது மற்றைய சுதந்திரங்களைப் பெற்றுக் கொள்வதற்கான திறந்த அனுமதிப் பத்திரமாகும். அவ்வாறான ஒன்று எமக்கென இல்லாத ஒரு நிலையில் ஒன்றுமே செய்ய முடியாதென நடைப்பிணமாக எல்லோருமே இருந்திருந்தால், இன்று சுதந்திர நாடுகள் பல இருந்திருக்க முடியாது. அடிமைகளின் மத்தியிலிருந்தே சுதந்திர போராட்ட வீரர் பலர் உதித்திருக்கிறார்கள்.

### திட்டமிடல் குறித்து ஆக்கபூர்வமான யோசனைகள் தேவை

வடக்கு - கிழக்கு மாகாணத்திற்கான திட்டமிடல் தொடர்பான தூர நோக்கு, செயல்வரையறை, அதன் நிறைவேற்றம் பற்றிய ஆர்வமான சிந்தனைகள் அங்கொன்றும் இங்கொன்று மாகவுள்ளன. இந்தச் சிந்தனைகளுக்கு ஆவண வடிவில் உருவம் கொடுக்கப்படவேண்டுமென்ற இடைவிடா முயற்சிகளும் உள்ளன. இது ஒருபுறம் நிகழ்கின்றது. எல்லாம் நிறைவேறிய பின் பணிகளை ஆரம்பிக்கலாம் என்பதற்காக அரச அலுவலர்கள் நியமிக்கப்படுவதில்லை என்பதனை இங்கு சுட்டிக்காட்ட விரும்புகின்றேன்.

மாறும் எந்தச் சூழலிலும் தாம் நின்று நிலைத்து, நிலைபேறான பணிகளையாற்றுவதே அரச அலுவலர்களது கடப்பாடாகும். எனவே, திட்டமிடுதல் என்ற அகலமான விடயத்தை தற்பொழுது முகாமைத்துவமென்ற ஆழத்துக்கு எடுத்து வரலாம்.

## போதிய நிதி ஒதுக்கீடு உடனடித் தேவையே!

வடக்கு - கிழக்கு மாகாண கலாசாரத் திணைக்களத்தை திட்டமிடுதல் நுட்பங்களைப் பயன்படுத்திக் கட்டி எழுப்புவோமா? அதன் பொருட்டு முதலில் கேட்கவேண்டிய கேள்விகள் யாவை?

★ கலாசாரத் திணைக்களத்தின் தூர நோக்கு (Vision) என்ன?

★ அதன் செயல் நோக்கு என்ன (Mission)?

★ அவற்றை அடைவதற்கான முகாமைத்துவக் கட்டுக்கோப்பு என்ன?

★ கலாசார அலுவலர்கள் அனைவருக்கும் கடமைப் பட்டியலுண்டா?

★ கலாசார அலுவலர்களுக்குத் தேவையான அடிப்படை வசதிகள் உறுதிப்படுத்தப்படுமா?

★ சோர்ந்து போகாது, எப்பொழுதுமே புத்துணர்ச்சியுடன் கலாசார அலுவலரைப் பேணி, அவர்களது பணித்தரத்தை உயர்த்துவதற்கேற்ற உபாயங்கள் உள்ளனவா?

★ கலாசார அலுவலர்களின் அறிவையும், செய்திறனையும் மேம்படுத்தல் எவ்வாறு?

★ திணைக்களத்தின் எதிர்கால நடவடிக்கைகளையிட்ட நீண்ட கால, மத்திய கால, குறுங்காலத் திட்டங்கள் உள்ளனவா?

★ மக்கள் பங்குபற்றும் பொறிமுறை எத்தகையது?

★ பங்கு நிறுவனங்களின் பணியாது?

★ வருடாந்த செயற்றிட்டமுண்டா?

★ அத்திட்டத்தில் பல்வேறு அலுவலர்களின் வகிபாகமென்ன?

★ அலுவலர்களின் பணியும், நிறுவன இலக்கும் உரியவாறு, உரிய காலத்தில் நிறைவேற்றப்படக் கைக்கொள்ளப்படும் உபாயமென்ன?

எந்த ஒரு நிறுவனமும் கட்டாயமாக பதில் கண்டுபிடிக்க வேண்டிய கேள்விகள் இவை. இவற்றில் ஒரு பகுதி விடயங்கள் நிதி சாராப் பணிகளாகும். ஆரம்பத்தில் தேவைப்படுபவை திட்டமிடல் - முகாமைத்துவ முறைமைகள் ஆகும்.

ஒரு நிறுவனம் உண்மையாக தொழிற்பட ஆரம்பிக்குமாயின், மற்றைய வளங்களைத் தேடிக் கொள்வது அத்துணை கஷ்டமானதாக இருக்காது. கடும் உழைப்புடன் சொல்லிலும், செயலிலும் நேர்மையிருக்குமாயின் அடைய முடியாத பேறுகள் எவையுமில்லை. கலாசாரத்தைப பற்றிப் பேசும் பொழுது புறவாழ்வு பற்றி அதிகம் நாம் பேசுவதில்லை. எமக்குள் இருக்கும் அபூர்வமான சக்திகளைக் கண்டுபிடிப்பதைப் பற்றியே பேசுகிறோம். 'உன்னை நீ அறியாய், அறிவாயாக' என்பதிலிருந்தே சிந்தனையை வளர்க்கவேண்டும்.

இவ்வுலகின் நன்மைகளை நிறுவியவர்கள் எங்கோ ஒரு மரத்தின் கீழோ, மலையின் அடிவாரத்திலோ, சின்னஞ்சிறு குடிலுக்குள்ளோ ஆற அமர இருந்து சிந்தித்தவை காற்றிலும், அலையிலும் சங்கமமாகிப் பரந்துள்ளன. அவர்களிடம் ஜீப்பும், ஒலி பெருக்கிகளும், Power Points உம் இருந்தனவா?

### அர்ப்பணிப்பான சேவை அலுவலருக்கு அவசியம்

எந்த ஒரு நிலையிலும் எமது தனிப்பட்ட வாழ்வு முன்னேற்றத்திற்காகப் பல்வேறு முயற்சிகளையும் அர்ப்பணிப்புக்களையும், விட்டுக் கொடுப்புக்களையும் செய்யும் நாம், எமக்கு யோகமெல்லாம் தரும் உத்தியோகத்திலும் அவற்றைக் கடைப்பிடிப் போமாயின் எமக்கும் நல்லது. எமது சேவையை எதிர்பார்ப்பவர்களுக்கும் உண்மைப் பயன் தருவதாக அமையும்.

கலாசாரம் ஒரு சமூகத்தின் தனித்துவத்தையும், செழுமையையும், நிலைபேறான தன்மையையும் வழங்குமொரு அமுதமாகும். பல்வேறு விடயங்களுக்கும் திட்டமிடும் நவீன உலகில், ஆன்மக, கலாசாரப் பேறுகள் குறித்து அக்கறை குறைவாக இருந்த காரணத்தினால் பெற்றுக்கொண்ட வெற்றிகள் அழிவுகளுக்கும், வீழ்ச்சிகளுக்குமே வித்திட்டுள்ளன.

"மாற்றமொன்றே நிலையான விடயம்" என அனுபவசாலிகள் எடுத்துரைத்துள்ளனர். ஒரு சமுதாயத்தின் கலாசாரப் பாரம்பரியம் பல சமயங்களில் நல்லவையும், அல்லாதவையும் கலந்த இரசாயனமாகவேயுள்ளது. மனசாட்சிக்கு எது சரி, எது பிழை, எது நல்லது, எது பொல்லாதது என்று நன்றாகவே தெரியும். மனசாட்சி என்ற நீதிபதியை கலாசாரமென்ற ஆன்மாவுடன் பேசவிட்டு, வரும் நல்ல விளைவுகளைக் கொண்டு பொருத்தமான கலாசாரத்தை வளர்த்துச் செல்ல வேண்டும். பழையன கழிதலும், புதியன புகுதலுமே அந்த உபாயமாகும். எந்த ஓர் உயர் நிறுவனமும் சமுதாயத்தை அப்படியே பிரதிபலிக்குமாயின் அங்கே அபிவிருத்திக்கு இடமில்லாத தேக்க நிலையே மிஞ்சும். நிறுவனமொன்று சமுதாயத்திற்கு வழிகாட்டி, அவ்வழியே சமுதாயத்தின் பங்கேற்பு, பங்களிப்புடன் அவர்களையும் எடுத்துச்செல்லக் கூடியதாக இருக்குமானால் அதுவே வெற்றியின் இரகசியமாகும்.

அலுவலர்கள் என்ற வகையில் எமது சிந்தனைகளைப் புடம் போட்டு, நல்லவற்றைத் தொகுத்து, ஒரு பொதுக் கருத்தை உருவாக்கி, கொள்கை வகுத்து, அவற்றை அர்ப்பணிப்புடன் செயற்படுத்துவோமேயானால் வெற்றி கைக்கெட்டும்; கைகொடுக்கும்.

வடக்கு - கிழக்கு மாகாண கலாசார அபிவிருத்தியைப் பொறுத்த வரையில் பின்வரும் விடயங்கள் அவசியம் தேவைப்படுகின்றன.

★ மாகாண பல்லின கலாசாரத்தின் தேவைகளை உள்வாங்குமொரு கலாசார அபிவிருத்தித் திட்டம்.

★ நிதி, மனித வளம், அவற்றின் அபிவிருத்தி.

★ கலாசாரத் திணைக்களத்தினை வழி நடத்தக்கூடிய நிபுணத்துவமும், ஆர்வமுள்ள ஆலோசனை அமைப்பும்.

★ மத்திய அரசின் நேர்மையான ஆதரவு. ☆

# காசநோய் வைத்தியசாலைப் பணிகள் சீராகாவிட்டால் பாதிப்பு மக்களுக்கே!

வெலிசறை காசநோய் வைத்தியசாலையின் காசநோய் தடுப்பு மற்றும் மார்பு நோய்ச் சிகிச்சைக்கான தேசிய செயற்றிட்டத்தின் கீழ் இயங்கி வந்தது காங்கேசன்துறை மார்பு நோய் வைத்தியசாலை. 1990 ஆம் ஆண்டு ஜுலை மாதம் வரை மயிலிட்டியில் இந்த வைத்தியசாலை




இயங்கியது. பின்னர் யுத்த நெருக்கடிகளால் இடம்பெயர்ந்து இந்த வைத்தியசாலை சங்கானை, கோப்பாய், சாவகச்சேரி என ஆங்காங்கே இருந்த வைத்தியசாலைகளில் காலத்திற்குக் காலம் தற்காலிகமாகச் செயற்பட்டு வந்தது. 2000ஆம் ஆண்டில் மீண்டும் கோப்பாய் கிராமிய வைத்தியசாலையின் ஒரு பகுதியில் இயங்கி வந்தது. மயிலிட்டியிலிருந்து இடம் பெயர்ந்த பின்னர் 13 வருட காலத்தில் இந்த வைத்தியசாலை ஊழியர்கள் பல்வேறு இன்னல்களுக்கு முகங்கொடுத்துக் கடமையாற்றி வருகின்றனர்.

உயர் அதிகாரிகளின் அக்கறையீனம், பொது நிறுவனங்களின் பாராமுகம், சூழ உள்ள பொதுமக்களின் எதிர்ப்புணர்வு என்பவை உட்பட இன்னும் பல சவால்களை வைத்தியசாலைச் சமூகம் சமாளிக்க நேர்ந்துள்ளது.

குறைந்த பௌதிக வளம், ஆளணிப் பற்றாக்குறை ஆகிய சிரமங்களின் மத்தியிலேயே மார்பு நோய் வைத்தியசாலை கோப்பாயில் இயங்கி வந்தது. குடியிருப்புப் பகுதியில் காசநோயாளர்களைத் தங்கவைத்துச் சிகிச்சையளிக்க அப்பகுதி மக்கள் எதிர்ப்புத் தெரிவித்து வந்தனர்.

இந்தநிலையில், வடமாகாணப் பிரதி சுகாதார சேவைகள் பணிப்பாளரின் உத்தரவின் பெயரில் காசநோய் வைத்தியசாலை இடம்மாற்றப்பட்டது. இந்த நடவடிக்கையின் போது வேறு இடங்களுக்குக் கொண்டு செல்லப்பட்ட காசநோயாளர்கள், அந்தந்தப் பகுதி மக்களின் எதிர்ப்பினால் நிரந்தர இடமின்றி அலைக்கழிக்கப்பட்டு இறுதியாக வல்வெட்டித்துறையில் தங்கவைக்கப்பட்டனர்.

வல்வெட்டித்துறையில் அடிப்படை வசதிகளும் போதுமான அளவில் இல்லாத கட்டடத்தில் மேற்படி வைத்தியசாலை தற்போது இயங்கி வருகிறது. நோயாளர் தங்கும் விடுதி, அலுவலக அறை, சமையல் அறை, களஞ்சிய அறை என சகல பிரிவுகளும் இடப்பற்றாக்குறையுடன் இயங்கும் நிர்ப்பந்தம் ஏற்பட்டுள்ளது.

இதேவேளை, காசநோய் வைத்தியசாலைக்கெனத் தனியான கட்டடம் ஒன்று கோப்பாய் மருத்துவமனை வளாகத்தில் அமைக்கப்பட்டிருந்தது. ஆனால், அந்தக் கட்டடம் காசநோய் வைத்தியசாலைத் தேவைக்கென கொடுக்கப்படாமல் தவிர்க்கப்படுகின்றது.

காசநோய் வைத்தியசாலைக்கென பொறுப்புவாய்ந்த பிரத்தியேக வைத்திய அதிகாரிகள் எவரும் இல்லை. வைத்தியர்கள், தாதியர்கள், உதவி வைத்திய அதிகாரிகள், சுத்திகரிப்புத் தொழிலாளர் போன்றவர்களுக்கும் பற்றாக்குறை. இந்த ஆளணித் தேவைகளைக் காசநோய் வைத்தியசாலை அமைந்திருக்கும் சுகாதார சேவைப் பிரிவுடன் பகிர்ந்துகொள்ள வேண்டியுள்ளது. இதனால், பல்வேறு நிர்வாகச் சிரமங்களுக்கும் முகங்கொடுக்க நேரிடுகின்றது.

இந்த நிலைமை நீடிப்பதால் வைத்தியசாலையின் பணிகள் சீர்குலைந்துள்ளன. இதன் காரணமாக யாழ். மாவட்டத்தில் காசநோயாளர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருகின்றது என்று கூறப்படுகிறது.

காசநோய் வைத்தியசாலை எதிர்நோக்கும் பிரச்சினைகள் குறித்து வெலிசறை காசநோய்த் தடுப்பு மற்றும் மார்பு நோய் சிகிச்சைக்கான தேசியச் செயற்றிட்டப் பணிப்பாளருக்கு மனு ஒன்றை வைத்தியசாலை ஊழியர்கள் அனுப்பியிருந்தனர்.

காங்கேசன்துறை மார்பு நோய் வைத்தியசாலையின் நிர்வாகம்

**துஷி**

வெலிசறை காசநோய்த் தடுப்பு மற்றும் மார்பு நோய் வைத்தியசாலையின் நேரடிக் கண்காணிப்பில் இருப்பதை உறுதிப்படுத்துமாறும் -

கோப்பாயில் அமைக்கப்பட்ட கட்டடத்தில் காசநோய் வைத்தியசாலையை இயக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென்றும் -

மேற்படி வைத்தியசாலைக்குத் தேவையான வைத்தியப் பொறுப்பதிகாரி, வைத்தியர்கள், தாதியர்கள், சுத்திகரிப்புத் தொழிலாளர்கள் உட்பட போதிய ஆளணியினரையும் தளபாட வசதிகளையும் பெற்றுத் தருமாறும் -

அந்த மகஜரில் கோரப்பட்டிருந்தது.

ஆயினும், இதற்கான ஆக்கபூர்வமான செயற்பாடுகள் எவையும் மேற்கொள்ளப்படவில்லை. இனிமேலாவது இந்தக் காசநோய் வைத்தியசாலை திருப்திகரமாக இயங்க சம்பந்தப்பட்டவர்களும், பொது அமைப்புகளும் நடவடிக்கை எடுக்கவேண்டும். இல்லாவிட்டால் காசநோய் தடுப்பு என்பது குடாநாட்டில் 'தலைக்கு மேல் போன வெள்ளம்' என்றாகிவிடும். ★

# யுத்தத்திலிருந்து மீண்டு தேசத்தை கட்டி எழுப்புவது எப்படி?

யாழ்ப்பாணம்,ஜன.28

யுத்தத்தில் இருந்து மீண்டு தேசத்தைக் கட்டி எழுப்புவது எப்படி என்பது குறித்து செஞ்சிலுவைத் தொண்டர்களுக்கு விளக்கும் பயிற்சிச் செயலமர்வு ஆப்கானிஸ்தான் நாட்டு நிபுணர்களால் குடாநாட்டில் நடத்தப்பட்டு வருகின்றது.

ஜேர்மன் தொழில்நுட்ப நிறுவனத்தின் யாழ். அலுவலகக் கேட்போர் கூடத்தில் நேற்றுமுன்தினம் ஆரம்பமான இந்தச் செயலமர்வு இன்றுவரை இடம்பெறுகின்றது.

குடாநாட்டில் செயற்படும் செஞ்சிலுவைச் சங்கக் கிளைகளைச் சேர்ந்த 25பிரதிநிதிகள் இந்தச் செயலமர்வில் கலந்துகொள்கின்றனர்.

ஸ்ரீலங்கா செஞ்சிலுவைச் சங்கங்களின் சம்மேளனம் இச்செயலமர்வை ஏற்பாடு செய்துள்ளது.

ஆப்கானிஸ்தானில் யுத்தத்தின் பின் நிர்வாகம் எப்படிக் கட்டி எழுப்பப்பட்டது. அதில் எதிர்நோக்கப்பட்ட சவால்கள் என்ன என்பன குறித்து அவர்கள் தொண்டர்களுக்கு விளக்கமளித்தனர். (ம-3)

# கல்விச் செயற்பாடு பற்றி விளக்க திருமலையில் இருநாள் செயலமர்வு

யாழ்ப்பாணம்,ஜன.28

வடக்கு - கிழக்கில் இவ்வருடம் மேற்கொள்ளப்படவிருக்கும் கல்விச் செயற்பாடுகள், திட்டங்கள் ஆகியன குறித்து விளக்குவதற்கான செயலமர்வு இன்று புதன்கிழமையும் நாளையும் திருகோணமலையில் இடம் பெறவுள்ளது.

வடக்கு - கிழக்கில் பணிபுரியும் வலயக் கல்விப் பணிப்பாளர்கள் இந்தச் செயலமர்வுக்கு அழைக்கப்பட்டுள்ளனர்.

கடந்த வருடத்தில் கல்வியில் ஏற்பட்ட வீழ்ச்சியை சீராக்கும் வழிமுறைகள், புதிதாக அறிமுகப்படுத்தப்படும் திட்டங்கள் மற்றும் நிர்வாக ரீதியான பிரச்சினைகள் ஆகியன குறித்து இச்செயலமர்வில் விரிவாக ஆராயப்படவிருக்கின்றது.

அதேவேளை -

இச்செயலமர்வின்போது 'யுனிசெவ்' அமைப்பு அதிகாரிகள், வலயக் கல்விப் பணிமனைகள் சிலவற்றுக்கு 'பிக் - அப்' வாகனங்களை வழங்கவிருக்கின்றனர்.

குடாநாட்டில் தீவக வலயத்துக்கு 'பிக் - அப்' வாகனம் வழங்கப்படும். (ம-3)

# FASHION BEAUTY CORNER
(For Ladies)

(நவநாகரிக நங்கையின் இருப்பிடம்)



- ★ முக ஒப்பனை (Makeup)
- ★ மணப் பெண் அலங்காரம் (Bridal Dressing)
- ★ Facial, BirthDay, Structure, Waxing, Treading, Hair Dye, Henna Treatment, Perm and Straightening
- ★ ஓடருக்கு Rich Cake, சிற்றுண்டிகள் செய்து கொடுக்கப்படும். (முன் கூட்டியே ஓடர் கொடுக்கவேண்டும்)
- ★ மாசி 3ஆம் திகதி வகுப்புகள் ஆரம்பமாகவுள்ளது. இதில் சேர விரும்புபவர்கள் தங்கள் பெயர்களை பதிந்து கொள்ளவும். மேலதிக விவரங்களை நிலையத்தில் அறியலாம்.

திருமதி ஜெயவாணி கஜேந்திரன்,
14,அம்மன் வீதி, கந்தர்மடம்,
யாழ்ப்பாணம். (C/32972)(35-18-13-32) T.P.: 222 6864



## பாராட்டுகின்றோம்

யா/ சித்தன்கேணி ஸ்ரீ கணேச வித்தியாலயத்தில்
கல்வி பயின்றுவரும்
செல்வன்
**நகுலேஸ்வரன் குலதீபன்**

2003 ஆம் ஆண்டு நடைபெற்ற 5ஆம் ஆண்டுப் புலமைப் பரிசில் பரீட்சையில் 123 புள்ளிகளைப் பெற்றுச் சித்தியடைந்து, பாடசாலைக்குப் பெருமையைத் தேடித்தந்துள்ளார். அவரையும் அவருக்கு கற்பித்த ஆசிரியர்களையும் பாராட்டி வாழ்த்துகிறோம்.

அதிபர், ஆசிரியர்கள்,
(சி-32967)(13-18-32) பாடசாலை அபிவிருத்திச் சங்கம்.



## பாராட்டி வாழ்த்துகின்றோம்



5 ஆந்தரப் புலமைப்பரிசில் பரீட்சை - 2003 இல் 118 புள்ளிகளைப் பெற்று சித்தியடைந்ததையிட்டு செல்வி
**மதுரமலை அனுலா**

அவர்களையும் கல்வியறிவூட்டி ஆக்கமும் ஊக்கமும் அளித்த யா/ தேவரையாளி இந்துக்கல்லூரி அதிபர், ஆசிரியர்களையும் மனமுவந்து பாராட்டி வாழ்த்துகிறோம்.

"மயூரம்"
கொற்றாவத்தை,
பொலிகண்டி.

வாழ்த்துவோர்:
பொ. செல்வராசா (செல்லக்குட்டி) -சித்தப்பா-
திருமதி செ. சியாமாளா -சித்தி-
(27723)(13-18-32)


## பயிற்சியாளர் கருத்தரங்கு

யாழ்ப்பாணம்,ஜன.28

யாழ்மத்திய கல்லூரியின் முறைசாராக் கல்விப் பிரிவில் 2003 ஆம் ஆண்டு கணனித் தட்டெழுத்துப் பயிற்சி முடித்து வெளியேறியவர்களுக்கான பயிற்சியாளர் கருத்தரங்கு இன்று காலை 9.30 மணி முதல் 2.30 மணிவரை யாழ்மத்திய கல்லூரி கே.போர் கூடத்தில் நடைபெறும். (ம-8)

## ஆசிரியர்களுக்கான சேவைமுன் பயிற்சி

யாழ்ப்பாணம்,ஜன.28

அண்மையில் தெரிவுசெய்யப்பட்ட ஆசிரியர்களுக்கான வதிவிட சேவை முன் பயிற்சி எதிர்வரும் 31ஆம் திகதி முதல் பெப்ரவரி மாதம் 8ஆம் திகதிவரை நடைபெறவுள்ளது.

யாழ்வலயத்தில் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கு இது தொடர்பான அறிவுறுத்தல் கூட்டம் நாளை வெள்ளிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு யாழ்கல்வி வலய முகாமைத்துவ மண்டபத்தில் நடைபெறவுள்ளது என யாழ்.கல்விப் பணிப்பாளர் அறிவித்துள்ளார். (ம-9)

## மத்திய கல்லூரியில் இலவச மருத்துவமுகாம்

கொழும்புத்துறை,ஜன.28

கொழும்பு அப்பலோ மருத்துவமனை வைத்திய நிபுணர்கள் கலந்துகொள்ளும் இலவச மருத்துவ சிகிச்சை முகாம் எதிர்வரும் சனிக்கிழமை யாழ்.மத்திய கல்லூரியில் நடைபெறவுள்ளது.

கொழும்பு லயன்ஸ் கழகமும், யாழ்.லயன்ஸ் கழகமும் இணைந்து நடத்தும் இந்த இலவச சிகிச்சை முகாம் காலை 8மணிமுதல் மாலை 5மணிவரை இடம்பெறும்.

இருதய நோய்சிகிச்சை, கண் பரிசோதித்து கண்ணாடிகள் வழங்கல் ஆகியவை உட்பட சகல பிரிவு சிகிச்சைகளும் இடம் பெற உள்ளன. (ஓ30)


## பாராட்டி வாழ்த்துகின்றோம்



அறம் வென்றது அன்பு வென்றது
அசையாத பொறுமை வென்றது
அடுத்தவர்க்கு உதவும் மனம் வென்றது
ஆழ்ந்த பக்தி வென்றது
ஆலயத் திருத்தொண்டு வென்றது
அகில இலங்கைச் சமாதான நீதிவானாக
**சின்னத்தம்பி கணேசமூர்த்தி**
நியமிக்கப்பட்ட கால்.

பாராட்டி வாழ்த்துவோர்:
க. சி. கந்தசாமி குடும்பத்தினர்.
வயட்டி, அல்வாய் வடமேற்கு, அல்வாய். (27732)(13-24-32)



## பாராட்டி வாழ்த்துகின்றோம்



அல்வாய் அருள்மிகு மாறாம்புலம் மாணிக்கப் பிள்ளையார் ஆலயத்தின் முன்னாள் தலைவரும், முகாமையாளரும், மாறாம்புலம் கிராம அபிவிருத்திச் சங்கத்தின் ஆரம்பகாலத் தலைவரும், பாரதி சனசமூக நிலையத்தின் ஸ்தாபகருள் ஒருவரும், ஆற்றல் மிக்க ஓய்வுபெற்ற அதிபரும், தற்போது ஆலய வளர்ச்சிக்கு அரும்பணி ஆற்றிக்கொண்டிருப்பவரும், சிறந்த சமூக சேவையாளருமாகிய,

**திரு. சின்னத்தம்பி கணேசமூர்த்தி**

அவர்கள் அண்மையில் அகில இலங்கை சமாதான நீதிவானாக பருத்தித்துறை மாவட்ட நீதிவான் திரு.க. அருமைநாயகம் அவர்கள் முன்னிலையில் சத்தியப்பிரமாணம் செய்துகொண்டமையை மனதாரப் பாராட்டி, வாழ்த்தி அவர்தம் சேவை மென்மேலும் சிறப்புற்று, பல்லாண்டுகாலம் வாழ எல்லாம்வல்ல மாறாம்புலம் மாணிக்கப் பிள்ளையாரை வேண்டுகிறோம்.

மாறாம்புலம்,
அல்வாய் வடக்கு,
அல்வாய். (27731)(13-24-32)
மாறாம்புலம் மாணிக்கப்பிள்ளையார், தேவஸ்தானப் பரிபாலன சபையினர்.



## முதலாவது பிறந்ததின வாழ்த்து

28 01 2004

அஜந் பிரவீன்



கல்வியங்காடு புலவனார் வீதி [ விஜி அகம் ] யைச் சேர்ந்த பாலசுப்பிரமணியம் அஜந், கோப்பாய் வடக்கு கந்தசுவாமி கோயிலடியைச் சேர்ந்த சதீஸ்வரி தம்பதிகளின் செல்வப் புதல்வன் பிரவீன் தனது முதலாவது பிறந்தநாளை இன்று தனது இல்லத்தில் வெகு விமரிசையாக கொண்டாடுகிறார்.

இவரை அன்பு, அப்பா, அம்மா கல்வியங்காட்டில் வசிக்கும் அப்பப்பா பாலசுப்பிரமணியம் அப்பம்மா விஜயமலர் கோப்பாய் வடக்கில் வசிக்கும் அம்மப்பா சண்முகலிங்கம் அம்மம்மா ராஜேஸ்வரி லண்டனில் வசிக்கும் அசோக் பெரியப்பா சுபாஜினி பெரியம்மா டொக்டர் தங்கராஜா அப்பா குடும்பம் கனடாவில் வசிக்கும் அஜித் பெரியப்பா அருண் சித்தப்பா அஜீவ் சித்தப்பா கொழும்பில் வசிக்கும் மைதிலி அன்ரி குருநகர்துறையில் வசிக்கும் தர்சினிச் சித்தி கல்வியங்காடு துரைசிங்கம் குடும்பம் இணுவிலில் வசிக்கும் யோகம்மா பாட்டி சிவா அப்பப்பா மற்றும் மாமாமார் மாமிமார் மச்சான்மார் மச்சாள்மார் அண்ணன்மார் அக்காமார் தம்பிமார் தங்கைமார் மற்றும் உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் இறுவில் பராராஜசேகரப் பிள்ளையார் கல்வியங்காடு ஸ்ரீ பத்திரகாளி சமேத ஸ்ரீ வீரபத்திரப் பெருமான் கோப்பாய் வடக்கு கந்தசுவாமியார் ஆகியோர் அருளும் ஆசியும் பெற்று பல்கலையும் கற்று சீரும் சிறப்புடனும் பல்லாண்டு காலம் வாழ்க வாழ்கவென வாழ்த்துகின்றனர்.

கந்தசுவாமி கோயிலடி
கோப்பாய் வடக்கு
கோப்பாய்

தொ. பே. 0776-147182

அப்பா, அம்மா, சோ.பாலசுப்பிரமணியம்
அப்பப்பா குடும்பம் வே.சண்முகலிங்கம்
அம்மப்பா குடும்பம்



**eTouch COMPUTER SYSTEM**
"The right way to touch IT"

UDUVIL ROAD, MARUTHANARMADAM, JAFFNA.
T.P.: 0214-590222 E-Mail: etouch@wow.lk

மிகவும் குறைந்த கட்டணத்தில் வார, வார இறுதி, மாலை நேர (4.00 p.m. to 7.00 p.m.) வகுப்புகள் ஆரம்பம்.

**Diploma in MS Office**
**Diploma in Computer Programming**
**Diploma in Desktop Publishing**
**Diploma in Multimedia**
**Diploma in Hardware**

காலம் 3 மாதங்கள்

- புதிதாக கணனி வாங்கிய ஒவ்வொருவரும் ஒரே மாதத்தில் கணனி பற்றி முழுமையாக அறிந்துகொள்ளும் **Diploma in PC Handling (Online class)** பதிவுக் கட்டணம் மட்டுமே அறவிடப்படும்!!!
- **GIT** பாடவிதானத்தை உள்ளடக்கி பாடசாலை மாணவர்களுக்கான மாலை நேர (3.30 to 4.30) கற்கை நெறி - **Diploma in Information Technology.**
- இலங்கை அரசினால் நடத்தப்பெறும் கணனியில் தேசிய பயிற்சி சான்றிதழ்க்கான (**Sri Lanka Computer Driving Licence - SLCDL**) வகுப்புகள்.

**விண்ணப்ப முடிவு திகதி**
**02.02.2004**

**DIRECTOR**

UDUVIL ROAD, MARUTHANARMADAM, JAFFNA.
T.P.: 0214 590222 E-Mail: etouch@wow.lk
(27734) (24-13-32)



## 4 ஆவது ஆண்டு நினைவஞ்சலி



| பிறப்பு | இறப்பு |
|---|---|
| 19 | 28 |
| 06 | 01 |
| 1935 | 2000 |

**திருமதி அரியநாயகம் இராசம்மா**

அன்போடும் பண்போடும் அகிலத்தில் வாழ்ந்து
துன்பம், துயரம், சோகத்தில் எல்லாம்
உடனிருந்து எம்மோடு அளவளாவி வீட்டு
இன்பம் வரும்போது ஏன் பிரிந்தாய்
என் இராசாத்தி?

பொ.அரியநாயகம்,
முனி கோவிலடி,
இருபாலை, கோப்பாய். (27736)(32-13-18)
- அன்புக் கணவர், பிள்ளைகள்.



## விற்பனைக்கு

ரெயாட்டா கொலா A.30
இனத்தைச் சேர்ந்த
வெள்ளைநிறக் கார்
(தனிப் பாவிப்பு)
விற்பனைக்குண்டு.
தொடர்பு:- 021-2263575
(27728)



தென் இந்திய சஞ்சிகைகள் விற்பனையில்..!
குமுதம், குங்குமம், கல்கண்டு, காமிக்ஸ் சிறுவர் கதைகள் இன்னும் பல. ஆன்மீகம், ஹெல்த், 2004இற்கான கலண்டர்கள், டயரிகள்
NOW ON SALE
LATEST EDITIONS OF
**MEDICAL BOOKS**
ஸ்ரீலங்கா புத்தகசாலை,
234,கே.கே.எஸ் வீதி,
யாழ்ப்பாணம்.
T.P. 222 2573
(சி-32970)(13-18-32)



## 31 ஆம் நாள் நினைவஞ்சலிப் பிரார்த்தனை



| மலர்வு | உதிர்வு |
|---|---|
| 02 | 29 |
| 10 | 12 |
| 1932 | 2003 |

**அமரர் நடேசர் சிவசோதி (சங்கானை)**
**(ஓய்வுபெற்ற பதவிநிலை உத்தியோகத்தர்)**

எம் குடும்பத்தின் ஒளிவிளக்காய் திகழ்ந்து, எம்மையெல்லாம் நல்வழிப் படுத்திய அண்ணாவே! காலனவன் உங்களைக் கவர்ந்ததேனோ? காரணம்தான் நாமறியோம். நீங்கள் எம்மைவிட்டு பிரிந்து, மாதம் ஒன்று மறைந்தாலும் உங்கள் ஆத்மா சாந்தியடைய கண்ணீருடன் இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

சி.சிவனேசன் (சகோதரன்)
(சி-32966)(32-18-13) குடும்பத்தினர்.

## பாராட்டி வாழ்த்துகின்றோம்

யா/காரைநகர் மெய்கண்டான் வித்தியாலயமானது 02.01.2002 இல் மீள ஆரம்பிக்கப்பட்டு -
5 ஆந்தர புலமைப்பரிசில் பரீட்சை (2003) க்குத் தோற்றிய 13 மாணவர்களில் - சித்தியடைந்த மாணவர்களான

**செல்வன் சு.ஐங்கரன் - 126 புள்ளிகள்**
**செல்வி ஞா. தர்சினி - 124 புள்ளிகள்**
**செல்வி கோ.சுகன்யா - 119 புள்ளிகள்**

ஆகிய மூவரையும் அவர்களை கல்வி அறிவூட்டி நெறிப்படுத்திய அதிபர், ஆசிரியர்களையும் மனமாரப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

யா/ மெய்கண்டான் வித்தியாலயம்,
காரைநகர். பெற்றோரும் பாடசாலைச் சமூகமும்.
(27739)(36-11-16)

## இயற்கை (மூலிகை) மருத்துவ முகாம்

இயற்கை மூலிகை மற்றும் யோகாசன சிகிச்சை மூலம் ஆஸ்துமா, உடல்பருமன், உடல்மெலிவு, சலரோகம், மூலவியாதி, முகப்பரு, இளநரை, தலைமுடி உதிர்தல், மாதவிடாய்ப்பிரச்சினை, தலையிடி, வாதம், நாரி உளைவு, கைகால்விறைப்பு, தோல் நோய்கள் மற்றும் தீராத இதர நோய்களிலிருந்தும் எந்தவித பக்கவிளைவுகளுமின்றி பரிபூரணமாகக் குணமாக சிகிச்சைகளும் மருந்துகளும் வழங்கப்படும்.

ஆண்மைக்குறைவு, குழந்தைப்பேறின்மை போன்ற பிரச்சினைகளுக்கு தனிப்பட்ட முறையில் ஆலோசனைகளும் மருந்துகளும் வழங்கப்படும்.

தொடர்பு கொள்ளவேண்டிய முகவரி:
Dr.நவநீதன் DYNS.SMP.NC
(இயற்கை மூலிகை மருத்துவ நிபுணர்)
பெருமாள் கோவிலடி வீதி,
யாழ்.பயணியர் விடுதி
(வெலிங்ரன் சந்திக்கு அருகில்),
யாழ்ப்பாணம்.

யோகாசனப் பயிற்சி வகுப்புகளுக்கு பதிவுகள் நடைபெறுகின்றன.
(27717)(11-16-36)

**முகாம் நடைபெறும் நாள்கள்.**
ஜனவரி 29.01.2004 தொடக்கம் 03.02.2004 வரைக்கும்

## கண்ணீர் அஞ்சலி

எமது அலுவலகத்தில் தொழில்நுட்ப உத்தியோகத்தராக கடமையாற்றும் திரு.எஸ்.சிவயோகராஜா அவர்களின் அன்புத் தாயார்

**திருமதி அரியமலர் சிவராஜா**

அவர்கள் 25.01.2004 ஆம் திகதி காலமானதையிட்டு அவரின் பிரிவால் துயருற்றிருக்கும் அன்னாரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு, அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

- உதவி அரசாங்க அதிபரும்.
உதவி அரசாங்க அதிபர் பணிமனை, ஊழியர்களும்
ஊர்காவற்றுறை. (27746)(36-11-16) நலன்புரிச்சங்கம்.

## கண்ணீர் அஞ்சலி

எமது வித்தியாலயத்துக்காக நூலகத்தை நிறுவித்தந்த பெருந்தகை ச.பாலசுப்பிரமணியம அவர்களின் அன்புத் துணைவியார்

**திருமதி நன்னிப்பிள்ளை பாலசுப்பிரமணியம்**

அவர்களின் பிரிவால் துயருறும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு, அவரது ஆத்மா சாந்தி பெற ஆண்டவனைப் பிரார்த்திக்கிறோம்.

யா/சுதுமலை சிந்மய பாரதி வித்தியாலயம்,
மானிப்பாய். (27737)(36-11-16) - அதிபர், ஆசிரியர்கள.

## முதலாம் வருட நினைவஞ்சலி




வீரவேங்கை இளங்கீரன்
**செல்வராசா மகாநந்தன்**
(சாள்ஸ் அன்ரனி சிறப்புப்படையணி)

லெப்ரினன்ட் நெடுங்கீரன்
**செல்வராசா பேரானந்தன்**

04-04-1977 ⇦ தாயின் மடியில ⇨ 31.10.1973
31-10-1997 ⇦ தாயக மண்ணுக்கு ⇨ 23-01.2003

இதயத்து வேர்களில் அன்பை
இனிதாய் வளர்த்த-என்
செல்வப் புதல்வர்களே!

என்றோ ஒரு நாள் விடியும் என்று
எண்ணி வழிமேலே விழிவைத்து
பார்த்தேன் நெடுங்கீரா!
நீ அண்ணன் படை சென்று-உன்
பணியை முடித்து போய்விட்டாய்
உன்னைத் தேடி உன் சகோதரன்
வந்தானடா இளங்கீரன்!
சமாதான காலத்திலும் சா வந்து
அவனை உன்னுடன் சேர்த்து விட்டான்
நெடுங்கீரா! இளங்கீரா!
உங்களைப் போல எத்தனையோ
வேங்கைகளினது இலட்சியக் கனவுகள
நிறைவு ஏறும் நாளகள்
வெகு தூரம் இல்லை

*கைதடி கிழக்கு*
*உதய சூரியன் சனசமூகநிலையம்*
*கைதடி* (27749)(36-11-16) தகவல்: -குடும்பத்தினர்-

## ஆசிரியருக்கு சம்பள நிலுவைக் கொடுப்பனவு

தென்மராட்சி கல்விவலய பாடசாலைகளில் இலங்கை ஆசிரியர்சேவை தரம்3(1), தரம்(3)11ஆகியவற்றுக்கு பதவி உயர்வு பெற்ற ஆசிரியர்களுக்கான சம்பள நிலுவையின் இறுதிக்கட்டக் கொடுப்பனவுகள் இன்று தொடக்கம் எதிர்வரும் வெள்ளிக்கிழமை வரை கல்வி வலய நிதிக்கிளையில் வழங்கப்படவுள்ளன.

ஆசிரியர்கள் பி.ப.2.30மணி தொடக்கம் பி.ப.4.30மணிவரை கொடுபனவைப் பெற்றுக்கொள்ளலாம் என்று வலயக்கல்விப் பணிப்பாளர் வசெல்வராசா அறிவித்துள்ளார். (ஐ-117)

## கருத்தரங்கு

யாழ்ப்பாணம்,ஜன.28

யாழ்ப்பாணம் பல்கலைக்கழக இந்துப் பண்பாட்டுக் கழகத்தின் ஏற்பாட்டில் கருத்தரங்கு ஒன்று இன்று புதன் கிழமை பிற்பகல் 2.30 மணியளவில் பொருளியற்றுறை மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

இக்கருத்தரங்கில் 'ஈழத்துச் சைவ சித்தாந்த ஆய்வின் செல் நெறிகள் 1950-2000' என்னும் தலைப்பில் ஆ. சபாரத்தினம் உரையாற்றுவார்.(ம-ரி)

## வாஜ்பாயின் பேரன் படுகொலை

சென்னை,ஜன.28

இந்தியக் குடியரசு தினமான நேற்று முன்தினம் பிரதமர் வாஜ்பாயின் பேரன் ரயிலில் இருந்து தூக்கி வீசப்பட்டார். இதனால் ஜனாதிபதி அப்துல்கலாம் வழங்கிய குடியரசு தின விருந்தில் அவர் பங்கேற்கவில்லை.

உத்தரப் பிரதேசத்தில் தனது நண்பாகளுடன் ரயிலில் சென்று கொண்டிருந்த போதே வாஜ்பாயின் பேரனான மிஜ்ரா கொலை செய்யப்பட்டார்.

சம்பவம் பற்றித் தெரிய வருவதாவது:

ரயிலில் பயணித்த பெண்கள் மீது அங்கிருந்த இளைஞர் கோஷ்டி ஒன்று சேஷ்டை புரிந்தது. அங்கிருந்த பயணிகளுடன் சேர்ந்து மிஜ்ராவும் அவரது நண்பர்களும் இதனைத் தட்டிக் கேட்டனர்.

இதனால் மேற்படி கோஷ்டிக்கும், மிஜ்ரா குழுவினருக்கும் இடையே வாக்கு வாதம் ஏற்பட்டது.

ரயில் நிலையம் ஒன்றில் அங்கிருந்த பெண்கள் இறங்கியதும் , மீண்டும் ரயில் புறப்பட்டது. அப்போது, மிஜ்ராவையும் அவரது நண்பர்களையும் மேற்படி கோஷ்டியினர் கண்மூடித்தனமாகத் தாக்கினர்.

பின்னர் ,மிஸ்ராவையும் அவரது நண்பர்கள் இருவரையும் ஓடும் ரயிலில் இருந்து தூக்கி வீசிவிட்டனர். தலையில் படுகாயமடைந்திருந்த மிஸ்ரா, சம்பவ இடத்திலேயே உயிரிழந்து கிடந்தார். அவரது நண்பர்கள் இருவரும் படுகாயமடைந்தனர்.

சம்பவம் நடந்த இடம் மலைப் பகுதி என்பதால் உடனடியாக இது குறித்து தெரியவரவில்லை. அப்பகுதிக்கு சென்ற ஒருவர் கொடுத்த தகவலின்படி பொலீஸார் அங்கு விரைந்து மிஸ்ராவின் சடலத்தை மீட்டனர்.

இது குறித்து, பிரதமர் வாஜ்ப்பாய்க்கு தொலைபேசியில் தெரிவிக்கப்பட்டது.


ராஜா யாழ்ப்பாணம்
பிரசாந்த் நடித்த
ஜேர்
(ரீஸ்ஸ்)
காட்சிநேரம் : 10.30, 2.30, 6.30, 9.30 (பு.நே.)
(சி-32369) (32)

நிரஞ்சனாஸ் சங்கானை
ஷாம், அருண்குமார், குட்டி ராதிகா, செந்தில் நடித்த

இயற்கை
காட்சி நேரம்: 11.00, 2.45, 6.00 (பு.நே.)
வெள்ளி, சனி, ஞாயிறு இரவு 8.45 (பு.நே.)
Can You Do A Lote Come விரைவில் HULK
(C-32370) (32)

நாகம்ஸ் சுன்னாகம்
கமல், அபிராமி, நெப்போலியன், நாசர் நடித்த
E.A.P.இன் பொங்கல் வெளியீடு
விருமாண்டி

(சண்டியர்) (ரீல்ஸ்)
காட்சி நேரம்:
11.00, 3.00, 7.00 (பு.நே.)
(சி-32739)(31)

லிபேட்டி அச்சுவேலி
இன்று முதல சரத்குமார், மீனா, ரம்மியாக்கிஷ்ணன், ஜெயராம் நடித்த
பாறை

(ரீல்ஸ்)
தினசரி : 3.00, 7.00.
(சி-32863)


## பாராட்டி வாழ்த்துகின்றோம்

எமது வித்தியாலயத்தில் இருந்து தரம் 05 புலமைப்பரிசில் பரீட்சைக்குத் தோற்றி சித்தியடைந்த பின்வரும் மாணவர்களையும், அவர்களை நெறிப்படுத்திய அதிபர், ஆசிரியர்களையும் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

| | |
|---|---|
| செல்வன் இராசசேகரம் பரந்தாபன் | 132 |
| செல்வி தர்மினி சந்திரசேகரம் | 129 |
| செல்வி சங்கீதா சிவா | 127 |
| செல்வி சுதர்சினி தியாகராசா | 121 |
| செல்வி கேமா சற்குணநாதன் | 119 |

பாடசாலை அபிவிருத்திச் சங்கம்
யா/நாவற்குழி மகாவித்தியாலயம்.
(27747)(36-11-16)

## கண்ணீர் அஞ்சலி

காரைநகர் உதவி அரசாங்க அதிபர்
வே. சாம்பசிவம் அவர்களின் அன்புத் தாயார்

**திருமதி வேலுப்பிள்ளை பொன்னம்மா**

அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதுடன்,
அன்னாரின் ஆம்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

(சி-32977)(36-11-16) - பணிப்பாளர். பணியாளர்.
ப.நோ.கூ.சங்கம். காரைநகர்.

## மரண அறிவித்தல்கள்

### சிவஸ்ரீ சபாபதி ஐயர்சிவகடாட்சக் குருக்கள்

நுணாவில்குளம் கண்ணகை அம்மன் ஆலய பிரதமகுருவான சிவஸ்ரீ சபாபதி ஐயர் சிவகடாட்சக் குருக்கள் அவர்கள் 26.01.2004 திங்கட் கிழமை இறைபதமடைந்தார்.

அன்னார் சுலோசனா அம்மாவின் அருமைக் கணவரும் கௌரீஸ்வரி, ஜெகதீஸ்வரி ஆகியோரின் அன்புத் தந்தையாரும் சிவஸ்ரீ நா.ப. பாலசுப்பிரமணியக் குருக்கள், சிவஸ்ரீ கு. வல்லபேஸ்வரக்குருக்கள் ஆகியோரின் அன்பு மாமனாரும் பிரம்மஸ்ரீ கைலாசநாத சர்மா அவர்களின் அன்பு மைத்துனருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (27.01.2004) செவ்வாய்க்கிழமை நுணாவிலில் நடைபெற்றன.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*நுணாவில் குளம்,*
*நுணாவில்.* (27743)(36-11-16)
தகவல்
ஜெயந்திநாதசர்மா,
செந்தில்நாதசர்மா
(மருமக்கள்).

### திருமதி நன்னிப்பிள்ளை பாலசுப்பிரமணியம்

சுதுமலையைச் சேர்ந்த திருமதி நன்னிப்பிள்ளை பாலசுப்பிரமணியம் (சின்னத்தங்கம், குஞ்சம்மா) அவர்கள் 25.01.2004 இல் அமரத்துவம் அடைந்தார்.

அன்னார் சுதுமலை வைத்திய பூபதி காலஞ்சென்ற அண்ணாமலைப் பரியாரியார் அவர்களின் தத்துப்புத்திரியும் (மருமகளும்) இல.18, பிரப்பங்குளம் வீதி, வண்ணார்பண்ணையைச் சேர்ந்த சரவணமுத்து பாலசுப்பிரமணியம் அவர்களின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற செல்வி நிரஞ்சலாவின் அன்புத் தாயாரும் திருமதி புவனேஸ்வரி ஐயாததுரை, திருமதி கேதாரீஸ்வரி இராஜலிங்கம் ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஐ.சாந்தன், உமையாள் மணிவண்ணன், திருமகள் சரவணபவன் ஆகியோரின் அன்பு மாமியாரும் சாந்தமலரின் சகோதரியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (28.01.2004) புதன்கிழமை காலை 10.00 மணியளவில் சுதுமலை அண்ணாமலை வீதியில் உள்ள முதலாம் இலக்க இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக தாவடி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*அண்ணாமலை வீதி,*
*சுதுமலை தெற்கு.* (27742)(36-11-16)
தகவல்:
ச.பாலசுப்பிரமணியம்

### வைத்தி கந்தையா

வட்டுக்கோட்டையைப் பிறப்பிடமாகவும் சுழாவடி ஆனைக்கோட்டையை வாழ்விடமாகவும் கொண்ட வைத்தி கந்தையா (26.01.2004) திங்கட் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற திரு.திருமதி வைத்தி வேலாசிப்பிள்ளை தம்பதிகளின் மூத்தபுதல்வனும் காலஞ்சென்ற கா.நாகம்மா (புத்தூர்), மா.இராசலட்சுமி (பிரான்ஸ்), காலஞ்சென்ற வைத்தி வேலுப்பிள்ளை (வட்டுக்கோட்டை), வை.தியாகராசா (புத்தூர்), வை.சின்னத்துரை (பிரான்ஸ்), வை.நடராஜா (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புச் சகோதரனுமாவார். அன்னார் சிவபாலன்(கார்சாரதி), செல்வராணி (கொழும்பு), சிவராசா (மயூராகடைச்சல், மானிப்பாய்), சிவநேசன் (பிரான்ஸ்), சிவசக்திநாதன் (சசி - வசிபவன் வெல்டிங்), சிவந்தமலர், சிவகுமார்(சிவா - வெல்டிங்) ஆகியோரின் அன்புத் தந்தையும் சி.க.செந்தில்வேல் (புதிய ஜனநாயகக் கட்சி), பரமேஸ்வரி (மானிப்பாய் இந்து STS உறுப்பினர்), நிமலராணி (வட்டுக்கோட்டை), கமலாம்பிகை (பிரான்ஸ்), மல்லிகாதேவி (ஆனைக்கோட்டை), தேவராஜா (வயரிங் - ஆனைக்கோட்டை) ஆகியோரின் அன்பு மாமனாருமாவார்.

அன்னாரின இறுதிக்கிரியைகள் நாளை (29.01.2004) வியாழக்கிழமை காலை 10மணிக்கு சுழாவடி, ஆனைக்கோட்டையில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் ஆனைக்கோட்டை மயானத்தில் தகனஞ் செய்யப்படும் இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்

*சுழாவடி ஒழுங்கை*
*ஆனைக்கோட்டை.* (27744)(36-16-11)
தகவல்
க.சிவபாலன் (மகன்)

### செல்வத்துரை சிவகுமார்

யாழ்ப்பாணம், இராசாவின் தோட்டத்தைப் பிறப்பிடமாகவும் பிரான்ஸை வசிப்பிடமாகவும் கொண்ட செல்வத்துரை சிவகுமார் அவர்கள் நேற்று (27.01.2004) செவ்வாய்க்கிழமை பிரான்ஸில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற செல்வத்துரை (முன்னாள் உரிமையாளர், செல்வன கபே ) மற்றும் பாக்கியத்தின் அன்பு மகனும் லில்லி நிர்மலா(பவா) வின் அன்புக் கணவரும் நிவேதாவின் பாசமிகு தந்தையும் திருமதி அ.சாந்தகுமாரி (கண்டி), சந்திரகுமார்(பிரான்ஸ்), திருமதி சி.சர்வேஸ்வரி (யாழ்ப்பாணம்), செல்வக்குமார் (கனடா), சிறீக்குமார் (ஜேர்மனி), செந்தில்குமார் (கனடா), திருமதி க.சூரியகுமாரி (ஹொலண்ட்) ஆகியோரின் பாசமிகு சகோதரருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பிரான்ஸில் நடைபெறும்.
இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*இல.68/6, இராசாவின்,*
*தோட்டம் வீதி,*
*யாழ்ப்பாணம்.* (27748)(36-11-16)
தகவல்:
தாய், சகோதரர்கள்.

# விமான நிலைய...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
வப்பட்டிருக்கின்றது. எனவே, அதனைப் புனரமைத்து மேலும் விஸ்தரிப்பது மக்கள் வாழ்விடங்களை அபகரிக்கும் செயலாகவே கருதப்படவேண்டும். எனவே, இந்த விமானத் தளத்தைப் புனரமைப்பதற்காக இலங்கைக்கு வழங்க இருக்கும் நிதியை இந்தியா நிறுத்திவிடவேண்டும் - என்று தெரிவித்து கொழும்பில் உள்ள இந்தியத் தூதரகத்துக்குக் கடிதம் அனுப்பவும் -

இது விடயமாக உயர் மட்டக் குழு ஒன்றுடன் புதுடில்லிக்குச் சென்று இந்தியத் தலைவர்களுடன் பேச்சு நடத்தவும் -

தான் தீர்மானித்திருப்பதாக அமைச்சர் மகேஸ்வரன் மேலும் தெரிவித்தார்.

இதேவேளை -

நேற்றுக் கொழும்பில் தமது அமைச்சு அலுவலகத்தில் தம்மைச் சந்தித்த பிரிட்டிஷ் தூதுவரிடமும் அமைச்சர் மகேஸ்வரன் இந்த விடயம் குறித்தும் பிரஸ்தாபித்திருக்கிறார்.

பலாலி விமான நிலையத்தை விஸ்தரிப்பதற்கு நிதிவழங்க வேண்டாம் என இந்தியாவிடம் வலியுறுத்துமாறு அவர் பிரிட்டன் தூதுவரிடம் கேட்டுக்கொண்டார். அத்துடன் பிரிட்டனில் விடுதலைப் புலிகள் மீது விதிக்கப்பட்டிருக்கும் தடையை நீக்க வேண்டும் எனவும் -

நிரந்தர சமாதானம் ஒன்று ஏற்படும் வரை பிரிட்டனில் தஞ்சமடைந்துள்ள இலங்கைத் தமிழ்மக்களை அந்த நாடு திரும்பி அனுப்பக் கூடாது எனவும் இந்தச் சந்திப்பில் அமைச்சர் மகேஸ்வரன் பிரிட்டன் தூதுவரிடம் கேட்டுக்கொண்டார். (ஐ-4)

# மாணவர்களால்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
நன்மை கருதி இரவு 8 மணிவரை திறக்குமாறு கோரி கடந்த வருடம் மாணவர்கள் பகிஷ்கரிப்பு போராட்டம் ஒன்றை நடத்தியிருந்தனர். அப்போது அவர்களது இக்கோரிக்கை பல்கலைக்கழக நிர்வாகத்தினால் ஏற்றுக்கொள்ளப்பட்டு செயற்படுத்தப்பட்டு வந்தது.

ஆனால், கடந்த 2 வாரங்களாக நூலகம் மாலை 6 மணியுடன் மூடப்பட்டு விடுவதாக மாணவர்கள் தெரிவித்துள்ளனர். இது குறித்து மாணவர்கள் நேற்று மாலை நூலகரிடம் தமது ஆட்சேபத்தைத் தெரிவித்தனர்.

நூலக ஊழியர்களுக்கான மேலதிக நேரக் கொடுப்பனவுகள் இடை நிறுத்தப்பட்டிருப்பதால் மேலதிக நேரம் கடமையாற்றுவதற்கு அவர்கள் மறுக்கின்றார்கள் எனவும் - இதனாலேயே நூலகத்தை மாலை 6 மணியுடன் மூடவேண்டியநிலை ஏற்பட்டிருப்பதாகவும் நூலகர் சுட்டிக்காட்டினார்.

இதனையடுத்தே மாணவர்கள் துணைவேந்தரின் காரை வெளியே எடுக்க முடியாதவாறு தரிப்பட வாயிலை பூட்டுப் போட்டுப் பூட்டினர்.

தமது கோரிக்கையை ஏற்று இரவு 8 மணி வரை நூலகத்தை திறப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் வரை துணைவேந்தரின் காரை அதன் தரிப்பிடத்திலிருந்து நகர்த்துவதற்கு அனுமதிக்கப் போவதில்லை என்று மாணவர் பிரதிநிதி ஒருவர் தெரிவித்தார்.

துணைவேந்தர் பேராசிரியர் சு.மோகனதாஸ் தற்சமயம் கொழும்பில் தங்கியுள்ளார். (ஐ-4)

# பயங்கரவாதம் தொட...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
பட்ட வழக்கிலேயே இத்தீர்ப்பு வழங்கப்பட்டது.

பயங்கரவாதத்துக்கு எதிரான போர், அரசமைப்புச் சட்ட கொள்கைகளுக்கு ஏற்புடையதாக நடத்தப்பட வேண்டும் என்று நம்பும் அனைவருக்கும் கிடைத்த ஒரு வெற்றி இது என்று இவ்வழக்கில் வாதாடிய ஜோர்ஜ்டவுண் சட்டப் பேராசிரியர் டேவிட் கோல் நீதிமன்றத்தீர்ப்பை வர்ணித்துள்ளனர்.

வன்முறை மீதான அனுமதிக்கப்பட முடியாத ஆலோசனைக்கும் குறிக்கோள்களை அடைவதற்கான அமைதியான, வன்முறையற்ற வழிகளை ஊககப் படுத்துவதற்கும் இடையிலான வித்தியாசத்தை இச்சட்டம் வேறுபடுத்தவில்லை என்று அமெரிக்க மாவட்ட நீதிபதி அவுட்ரி கொலின்ஸ் தனது தீர்ப்பில் கூறியிருக்கிறார்.

"தடைசெய்யப்படும் நிபுணத்துவ ஆலோசனை, உதவி எந்த வகையானது என்பது பற்றி வரையறைகளை இச்சட்டம் விதிக்கவில்லை. அதற்குப் பதிலாக, எல்லா வகையான நிபுணத்துவ ஆலோசனைகளையும் உதவிகளையும் அவற்றின் தன்மையைக் கருதாது சட்டம் தடை செய்கிறது" எனவும் நீதிபதி தீர்ப்பில் கூறியிருக்கிறார்.

தமிழீழ விடுதலைப் புலிகள், குர்திஷ்தான் தொழிலாளர் கட்சி ஆகியவற்றின் சட்டபூர்வ, வன்முறையற்ற நடவடிக்கைகளுக்கு ஆதரவு வழ்குவதை மனுதாரர்கள் கோருகின்றனர் என்பதை நீதிமன்ற தீர்ப்பு சுட்டிக் காட்டியுள்ளது.

இத்தீர்ப்பை நீதி அமைச்சு மறுபரிசீலனை செய்வதாக அமைச்சின் பேச்சாளர் மார்க் கொரல்லோ வாஷிங்ரனில் விடுத்த அறிக்கை ஒன்றில் தெரிவித்திருக்கிறார். (ஐ)


**College of Information Technology(CIT)**
சிவன் வீதி, ஆவரங்கால், புத்தூர்.
T.P. - 0777 - 589703 e-mail -avarangalcit@yahoo.com
புதிய பிரிவுகள் ஆரம்பமாகின்றன

M.S.office
பிரிவு I - சனி, ஞாயிறு 8.30 - 10.30 a.m.
பிரிவு II -செவ்வாய், வியாழன் 4.00 - 6.00 p.m.
பிரிவு III-செவ்வாய், வியாழன் 7.00 - 9.00 p.m.
பிரிவு IV - திங்கள், வெள்ளி 7.00 - 9.00 p.m.
(உத்தியோகத்தர்களுக்காக மட்டும்)

DTP
பிரிவு I - திங்கள், வெள்ளி 8.00 - 10.00 a.m.
பிரிவு II - சனி, ஞாயிறு 11.30 - 1.30 a.m.

விசேட சிறுவர்களுக்கான கற்கைநெறிகள்
புதிய பிரிவு ஆரம்பம இன்று (28.01.2004) மாலை 5.00 மணி.
Diploma in Computer Studies
Diploma in Computer Programming -
Certificate Courses:
100% Practical Approach
Java, MS Word XP
Turbo C++ , MS - Excel XP
Visual Basic , MS - Access XP
Web design(HTML), Corel Draw
Computer Hard Ware, Adobe Photo shop
Adobe PageMaker
Special English Courses
Basic English Course
★ Grammer & Spoken English Practice
Intermediate English Course
★ Grammer & written and Spoken English Practice (Including Translation practice)
Lecturer BY:- Mr.K.Sundararajan (ELI) (British Council Trained)
புதிய ஆங்கில கற்கைநெறிகள் ஆரம்பமாகின்றன
பிரிவு I - சனி, ஞாயிறு 12.30 - 02.30 p.m.
பிரிவு II - சனி, ஞாயிறு 7.00 - 9.00 p.m.
(உத்தியோகத்தர்களுக்கு மட்டும்)
பதிவுகள் மட்டுப்படுத்தப்பட்டிருப்பதால் சந்தர்ப்பத்தைத் தவறவிடாது உடன் நேரடியாகவோ, தொலைபேசி மூலமாகவோ தொடர்புகொள்ளவும்.
(27715)(36-12-11-17) - இயக்குநர்.


# வாகனச் சோதனை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
காத வாகனச்சாரதிகளுக்கு அபராதத் தொகைக்கான பற்றுச்சீட்டு வழங்கப்பட்டது. சில வாகனங்களின் ஆவணங்களும் பொலீஸாரால் பறிமுதல் செய்யப்பட்டன.

தலைக்கவசம் அணியாமல் மோட்டார் சைக்கிளில் பயணித்தவர்களுக்கும் அபராதம் விதிக்கப்பட்டது. அத்துடன், வீதியில் சமாந்தரமாக சைக்கிளில் சென்றோரும் வீதி ஒழுங்குகளை மீறிய வாகனச் சாரதிகளும் வழிமறிக்கப்பட்டு எச்சரிக்கை செய்யப்பட்டனர்.

நேற்றைய இத் திடீர் சோதனை நடவடிக்கைகளை குடாநாட்டிலுள்ள சகல பொலீஸ் நிலையங்களினதும் தலைமைப் பொலீஸ் அத்தியட்சகர்கள் போக்குவரத்து மற்றும் போக்குவரத்துப் பொலீஸ் பிரிவு அதிகாரிகள் நேரடியாக நெறிப்படுத்தினர்.

சகல பொலீஸ் நிலையங்களையும் சேர்ந்த பொலீஸார் இணைந்து சோதனை நடவடிக்கைகளில் ஈடுபட்டமை இதுவே முதல் தடவை என்று கூறப்பட்டது.

குடாநாட்டில் வீதி விபத்துக்கள், போக்குவரத்து ஒழுங்கு மீறல்கள் என்பன அதிகரித்து வருவதால் இத்தகைய இணைந்த திடீர்சோதனை நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு யாழ்.மாவட்ட பொலீஸ் தலைமையகத்தினால் சகல பொலீஸ் நிலையங்களுக்கும் விசேட பணிப்புரை விடுக்கப்பட்டுள்ளது என்றும் -

அதறகமைவாகவே இச்சோதனை நடத்தப்படுகிறது எனவும் - இதே போன்று தொடர்ச்சியாக ஏனைய பிரதான வீதிகளிலும் இத்தகைய சோதனை மேற்கொள்ளப்படவுள்ளதாகவும் -

கோப்பாய் பொலீஸ் நிலைய பொறுப்பதிகாரி ஸ்ரீசெல்வம் தெரிவித்தார். (ஐ-4)

# இலங்கை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
புனரமைப்புக்கு சர்வதேச நாடுகள் தொடர்ந்து உதவிவழங்க வேண்டும் என்று செயலாளர்நாயகம் கோரிக்கையும் விடுத்திருக்கிறார்.

சமாதான முயற்சிக்கு நோர்வே வழங்கிவரும் சாதகமான பங்களிப்புக்கு நன்றி தெரிவித்திருக்கும் ஐ.நா. செயலாளர்நாயகம், இலங்கை அரசையும் விடுதலைப் புலிகளையும் மீண்டும் சமாதானப் பேச்சுக்கு அழைத்து வரும் தனது முயற்சியை நோர்வே அரசு திரும்பவும் ஆரம்பிக்கும் எனவும் நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

2002ஆம் ஆண்டு பெப்ரவரியில் ஆரம்பமான போர்நிறுத்தத்தை இரு தரப்பினரும் தொடர்ந்து கடைப்பிடித்து வருவது குறித்து செயலாளர்நாயகம் மகிழ்ச்சி தெரிவித்திருக்கிறார் எனவும், இலங்கை போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் பங்கு பணியைப் பாராட்டினார் எனவும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருககிறது.


NCA கல்வி நிறுவனம்
சாவகச்சேரி, பருத்தித்துறை.
A/L 2006
கலை, வர்த்தகம்
புதிய பிரிவு ஆரம்பம்
(27552)(30)

நியூ சயன்ஸ் அக்கடமி
நெல்லியடி
A/L - 2005, 2006
கணித, உயிரியல்
புதிய பிரிவு ஆரம்பம்.
(27551)

Lingam master - swiss
சுவிஸ் வாழ் தமிழர்களின் முன்னணி ஆசிரியர்
Deutsch - பெரியவர்களுக்கு
Deutsch - பாடசாலை மாணவர்களுக்கு
தொடர்பு:
062 7974164 - 079 3344733,
4665 Oftringen - swiss.
(26642)(36-12-11)

பொருளியல்
திரு.K.உதயன்
A/L 2005
பிரிவுI-சனி, ஞாயிறு-11.30-12.30
தேசியவருமானம்
பிரிவுII-சனி, ஞாயிறு
4.00-5.00 (மாலை) (SLT)
விக்னா
கல்வி நிறுவனம்
(C32949)(12-11)

பிரத்தியேக வகுப்புக்கள்
A/L-2005/2006
கணக்கீடு - ப.கணேஸ்
(B.Com, Dip.In.Pub.Adm.)
வணிகக்கல்வி- அ.ஆனந்தராசா
(BBA.Hons.Dip.In.Edu.)
ஆரம்பம்: 02.02.2004 திங்கள் பி.ப. 4 மணி
தொடர்பு:
விக்னேஸ்வரா கல்வி நிலையம்
பொற்பதி வீதி, கொக்குவில்.
(37383)(12-11)


## சுகவீனத்தால் போராளி உயிரிழப்பு!

மட்டக்களப்பு,ஜன.28
மட்டக்களப்பு மாவட்டத்தில் நேற்றுமுன்தினம் சுகவீனம் காரணமாக போராளி ஒருவர் சாவடைந்துள்ளார்.

வீரவேங்கை நிசாந்தன் (தங்கராஜா ஜீவராஜா, சித்தாண்டி, மட்டக்களப்பு) என்ற போராளியே சாவடைந்தவராவார். (ஐ-4)

## சுதுமலை இளைஞர் விபத்தில் மரணம்!

வவுனியா,ஜன.28
மன்னார், முருங்கன் வீதியில் நேற்றுப் பிற்பகல் இடம்பெற்ற ஒரு வீதி விபத்தில் யாழ்ப்பாணம் சுதுமலையைச் சேர்ந்த இளைஞர் ஒருவர் உயிரிழந்தார். மற்றொருவர் படுகாயங்களுக்குள்ளானார்.

மோட்டார் சைக்கிளை செலுத்தி வந்த பிரஸ்தாப இளைஞர், பவுஸர் ஒன்றுடன் மோதி விபத்துக்குள்ளானார் என்று தெரிவிக்கப்படுகின்றது.

சுதுமலையைச் சேர்ந்த பி.குமரகுரு (வயது 29) என்ற இளைஞரே உயிரிந்தவராவார் (ஐ-164)

# மரண அறிவித்தல்கள்

## திருமதி தியாகராசா சரோஜினிதேவி

இராமநாதன் வீதி, யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி தியாகராசா சரோஜினிதேவி நேற்று (27.01.2004) செவ்வாய்க்கிழமை அகாலமரணமானார்.

அன்னார் காலஞ்சென்ற S.தியாகராசா (இலங்கை மின்சாரசபை) அவர்களின் அருமை மனைவியும். காலஞ்சென்ற நடராசா - நல்லம்மா தம்பதியரின் அருமை மகளும் காலஞ்சென்ற திரு.திருமதி சின்னத்தம்பி இளையபிள்ளை அவர்களின் அருமை மருமகளும் ஐங்கரன் (உயர் தொழில்நுட்பக் கல்லூரி 2ஆம் வருடம்), சர்மினி (டென்மார்க்), பங்கஜன், பிருந்தாயினி (யாழ்.இந்துமகளிர் கல்லூரி - 2006) ஆகியோரின் அருமைத் தாயாரும் பொ.சிறிகாந்தன் (டென்மார்க்) அவர்களின் அருமை மாமியாரும் மணிமேகலை, இரகுநாதன், மனோன்மணி, பாக்கியநாதன், தனராணி, காலஞ்சென்ற மங்கையர்க்கரசி ஆகியோரின் அருமைச் சகோதரியும், அமரர் திருமதி சிங்காயராயர் ஈஸ்வரி மற்றும் தங்கராசா, துரைசிங்கம் ஆகியோரின் அருமை மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: தி.ஐங்கரன் (மகன்).
*186 /11, இராமநாதன் வீதி, யாழ்ப்பாணம்.* (27751) (12-17)

## நாட்டுப்பற்றாளர் வீரசிங்கம் சுரேஸ்நாதன்

காரைநகர், தோப்புக்காட்டைப் பிறப்பிடமாகவும் முஸ்லிம் கல்லூரி வீதி, ஓட்டுமடத்தை வசிப்பிடமாகவும்கொண்ட நாட்டுப்பற்றாளர் வீரசிங்கம் சுரேஸ்நாதன் (சுரேஸ்) அவர்கள் 25.01.2004 ஞாயிற்றுக்கிழமை அகால மரணமானார்.

அன்னார் அமரர்களான வீரசிங்கம் - நாகம்மா அவர்களின் அன்பு மகனும் கலைச்செல்வியின் கணவரும் கிருஷ்ணா, கிரிதரன் ஆகியோரின் அன்புத் தந்தையும், புளியங்கூடல் அம்மன் கோயிலடியை வசிப்பிடமாகக் கொண்ட செல்வரட்ணம் - தங்கம்மாவின் மருமகனும் ந.விஜயலட்சுமி, வீ.கதிரமலைநாதன் (பிரான்ஸ்), வீ.பேரின்பநாதன், வீரகுநாதன் (பிரான்ஸ்), வீ.உதயகுமாரி ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (29.01.2004) வியாழக்கிழமை பிற்பகல் 2 மணியளவில் முதலாம் வட்டாரம், நேசன்குடியிருப்பு, புதுக்குடியிருப்பில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும்ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: சுரேஸ்நாதன் கலைச்செல்வி (மனைவி).
*முஸ்லிம் கல்லூரி வீதி, ஓட்டுமடம், யாழ்ப்பாணம்.* (27750) (12-17)

## வேலன் கந்தையா (பிரபு)

பளையைப் பிறப்பிடமாகவும் தாவளை இயற்றாலையை வசிப்பிடமாகவும் கொண்ட வேலன் கந்தையா நேற்று (27.01.2004) செவ்வாய்க்கிழமை மாலை காலமானார்.

அன்னார் சின்னத்தங்கத்தின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற வேலன், கற்பகம் ஆகியோரின் அன்பு மகனும் காலஞ்சென்ற வீரகத்தி சின்னப்பிள்ளை அவர்களின் அன்பு மருமகனும் கந்தையாவின் அருமை மைத்துனரும் நாகம்மா, நடராசா, பத்மாதேவி, சிவராசா, செல்வராசா (யாழ்.மாவட்ட தனியார் பாரவூர்தி சங்கத்தின் பொதுமுகாமையாளர்), யோகராசா (லண்டன்), குணராசா இந்திராதேவி, சறோசாதேவி, விஜயாதேவி, நாகேந்திரராசா (லண்டன்), கமலாதேவி ஆகியோரின் பாசமிகு தந்தையும் ஆறுமுகம், சிவபாக்கியம், நடராசா, இன்பமலர், சந்திரமலர் (ஆசிரியை), சந்திரலீலா (லண்டன்), சறோஜினி (ஆசிரியை), மனோகரன், சீவரத்தினம், ஸ்ரீரங்கநாதன் (இத்தாலி), ஜெரோகினி (லண்டன்), சிவனேஸ்வரன் (நீர்வேலி ப.நோ. கூட்டுறவுச்சங்கம்) ஆகியோரின் அன்பு மாமனாரும் ஈஸ்வரி, சிவதேவி, சித்திராதேவி, றஞ்சனாதேவி, தவச்செல்வம், செல்வச்சந்திரன், மின்னாலாதேவி, சுபாஜி, சுபாஸ்கரன், சுபாஸ்தீபன், சுபாஸ்ரவி, சுபாஸ்குமுதா, சுபாஸ்வதனி, சுவேந்திரன், ரஜனிமாலா, ராம்பாபு, பாலகுமார், நிமால்சிந்தூரியா, மயூரியா,விதுஷன், நிதர்சன், கம்சிகா, தர்சினி, துஸ்யந்தன், பிரசாந்தன், விபுசன், சுபர்ணா, சுஜிபனா, கிரிஷாந், கிருசிகா, நிஷாந், கீர்த்தனா, சஞ்சீவன் ஆகியோரின் அன்புப் பேரனுமாவார். மாருதிகா, கஜப்பிரியா, பிருந்தாவன் ஆகியோரின் பூட்டனுமாவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (28.01.2004) புதன்கிழமை நல்லடக்கத்திற்காக தாவளை ஞானிகாடு இந்துமயானத்திற்கு பிற்பகல் 2 மணிக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு வேண்டுகின்றோம்.

தகவல்: சீவரத்தினம் சறோசாதேவி (மகள்).
*தாவளை, இயற்றாலை.* (27752) (12-17)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 28.01.2004இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.